ॐ

## மஹரிஷி அரவிந்தர்அருளிய

# பவானி பாரதி

விளக்கவுரை


## பி.ஆர்.கண்ணன்

நவி மும்பாய்


January 2016

# முன்னுரை

மகரிஷி அரவிந்தரின் தேச பக்தியும், யோக சக்தியும் உலகப் பிரசித்தமானவை. அலிபூர் சிறையில் அவர் அடைக்கப்பட்டபோது, பல தடவை கிருஷ்ண தரிசனம் கிடைக்கப் பெற்றார். ஸ்வாமி விவேகானந்தருடைய ஆன்மீக எழுச்சி இயக்கத்தினால் பெரிதும் கவரப்பட்டு தன் வாழ்வின் போக்கையெ மாற்றி அமைத்து கொண்டவர் அரவிந்தர். அன்னாருடைய யோகம், உபநிஷத்துக்கள், பகவத் கீதை, ஸாவித்ரி போன்ற நூல்கள் .மிக பிரசித்தி வாய்ந்தவை. அவருடைய தேச பக்தியும், தெய்வ பக்தியும் இணைந்து உத்வேகத்துடன் உருவாகிய ' பவானி பாரதி ' என்கிற ஸம்ஸ்க்ருத கவிதை நூல் அதிகமாகப் பரவலாகத் தெரியாமலிருக்கிறது.

1905ம் ஆண்டு அரவிந்தர் பரோடா கல்லூரியில் ஆங்கிலப் பேராசியராகப் பணியாற்றிய போது அவர் அருளிய நூல் இது. இந்நூல், ஆங்கிலேய ஆட்சியில் உறங்கிக் கொண்டிருந்த இந்தியனை எழுப்பிச் சாடிய காளிமாதா, இந்தியன் வெளிக்கிளம்பிச் சென்று பாரத மாதாவின் மிக தீனமான நிலையை காணும்படி தூண்டுகிறாள். பெருந்திரளாக வந்த இந்தியர்களுக்கும், காளி தேவிக்கும் ஆங்கிலேய சேனைக்கும் இடையே நடந்த கடும்போர், வடதிசையில் ஒளிவெள்ளமாகத் தோன்றிய பவானி தேவி யுத்தத்தில் ஆங்கிலேய அசுரர்களை அழித்தது முதலிய காட்சிகள் தென்பட்டு

அவர்களை ஆச்சரியத்தில் திக்கு முக்காடவைக்கின்றன. கவியானவர் 27 ஸ்லோகங்களில் தேவியின் வீரம், அழகு, இனிமை, தயை, சக்தி, ஞானம் எல்லாவற்றையும் வெகுவாகப் போற்றிப் பணிகிறார். ஸ்லோகங்கள் எல்லாமே கவிதா ரசமும், கற்பனை சக்தியும் கரைபுரண்டோடுவதாகவும், தேசபக்தியும், தேவி பக்தியும் நிறைந்து வழிந்து தளும்புவதாகவும் அமைந்துள்ளன. இந்த 99 ஸ்லோகங்களையும் உரையுடன் அனுபவிப்போம்.

**நவி மும்பாய்** **பி.ஆர்.கண்ணன்**
**M: 9860750020**

# <u>மஹரிஷி அரவிந்தர்அருளிய</u>
# <u>பவானி பாரதி</u>

## விளக்கவுரை

## <u>பி.ஆர்.கண்ணன், நவி மும்பாய்</u>

सुखे निमग्नः शयने यदाऽसं मधौश्च रथ्यासु मनश्चचार ।
स चिन्तयामास कुलानि काव्यं दारांश्च भोगांश्च सुखं धनानि ॥ 1

(பதவுரை) यदा = எப்போது, सुखे = சுகமான, शयने = படுக்கையில், निमग्नः = அழுந்தினவனாக, आसम् = இருந்தேனோ, मधौश्च = வசந்த காலத்து, रथ्यासु = வீதிகளில், मनः चचार = மனது சஞ்சரித்ததோ, सः = அந்த நான், कुलानि = குலங்கள் (சுற்றத்தார்), काव्यं = மன மகிழ்ச்சி, दारांश्च = மனைவி, भोगांश्च = போகங்களையும், सुखं = சுகங்கள், धनानि = செல்வங்களையும், चिन्तयामास = சிந்தித்தேன்.

(பொழிப்புரை) நான் சுகமான படுக்கையில் சயனித்தபடி, வசந்த காலத்து வீதிகளில் மனதை சஞ்சரிக்கும்படி செய்து அன்னியர் ஆட்சியில் நான் அனுபவித்துக் கொண்டிருந்த பல போகங்களையும், மனைவி, மக்கள், குடும்பம், செல்வம் எல்லாவற்றையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

(விளக்கவுரை) அன்னியர் ஆட்சியின் கொடுமையினால் இந்திய மக்கள் அனுபவித்துக்கொண்டிருந்த பல இன்னல்களையும் சிறிதும் பொருட்படுத்தாமல், அந்த ஆட்சியின் அடிவருடிகளாக சிலர் சுயநலமே உருவாக, தங்கள் சுகமே பெரிதென்று கருதிவந்த சூழ்நிலையை தேசபக்தரும், கவிஞருமான அரவிந்தர் இங்கு சித்தரிக்கத் தொடங்குகிறார்.

कान्तैश्च शृङ्गारयुतैश्च हृष्टो गानैः स छन्दो ललितं बबन्ध ।
जगौ च कान्तावदनं सहास्यं पूज्ये च मातुश्चरणे गरिष्ठे ॥ 2

(ப-உ) हृष्टःसः = மகிழ்ந்த அந்த நான், कान्तैश्च = இன்பம் பயக்கும் शृङ्गारयुतैश्च= ச்ருங்கார ரஸம் கலந்த, गानैः = பாட்டுக்களால், ललितं = மென்மையான, छन्दः = அன்பு உணர்ச்சியை, காவ்ய வடிவை, बबन्ध = உண்டாக்கினேன். सहास्यं = சிரிப்புடன் கூடிய कान्तावदनं च = மனைவியின் முகத்தையும், मातुः = அன்னையின் (பாரத மாதாவின்) पूज्ये = பூஜைக்குகந்த, गरिष्ठे = பெருமதிப்புக்குரிய, चरणे च = பாதங்களையும் जगौ = துதி செய்தேன்.

(பொ-உ) மன மகிழ்ச்சி வசப்பட்ட நான், இன்பம் பயக்கும் ச்ருங்கார ரஸம் மிகுந்த பாட்டுக்களால் மனத்தில் மென்மையான அன்புணர்ச்சியைப் பெருக்கி, சிரிப்பு பொங்கும் மனைவி முகத்தையும், பாரதமாதாவின் பூஜிக்கத்தகுந்த, பெருமதிப்பிற்குரிய சரணங்களையும் துதித்தேன்.

(வி-உ) சுயநலம் மிக்க அன்னிய ஆட்சி அடிமைகள் புலனின்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மனைவியின் இன்முகத்தைப் பார்த்து இன்பம் துய்த்தாலும்கூட, அவ்வப்போது பாரத மாதாவின் பூஜ்ய சரணங்கள் நினைவிற்கு வராமலில்லை. விடுதலை இயக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டிருக்கும்போது, அதன் பயனாக இந்த சுயநலமிகளின் மனத்திலும் தேசப்பற்று அவ்வப்போது தலைகாட்டத் தொடங்கியதை கவிஞர் சுட்டிக் காடுகிறார்.

चक्रन्द भूमिः परितो मदीया खलो हि पुत्रान् असुरो ममर्द।
स्वार्थेन नीतोऽहमनर्च पादौ दुरात्मनो भ्रातृवधेन लिप्तौ ॥ 3

(ப-உ) मदीया = என்னுடையதான, भूमिः = பூமியானது, परितः = எல்லா பக்கங்களிலும், चक्रन्द = அழுதது. हि = ஏனெனில், खलः = துஷ்டனான, असुरः = அசுரன், पुत्रान् = மண்ணின் மைந்தர்களை,

ममर्द = அழித்தான், स्वार्थेन = சுயநலத்தினால், नीतः = உந்தப்பட்ட, अहं = நான், दुरात्मनः = (அந்த) கொடியோனின், भ्रातुवधेन = (என்) சகோதரர்களைக் கொன்றதினால், लिप्तौ = (ரத்தத்தினால்/ பாபத்தினால்) பூசப்பட்ட, पादौ = பாதங்களை, अनर्च = அர்ச்சித்தேன்.

(பொ-உ) என் மாத்ருபூமியானது, எல்லா பக்கங்களிலும் ஆங்கிலேய அரக்கர்களால் மண்ணின் மைந்தர்கள் அழிக்கப்படுவதைக் கண்டு கதறி அழுதது, ஆனால் நானோ, சுயநலமே உருவாக, என்னுடைய சகோதரர்களையே கொன்ற அந்த கொடியோனுடைய ரத்தம் தோய்ந்த பாதங்களுக்கு அர்ச்சனை செய்தேன்.

(வி-உ) சுயநலமிகளுக்கு பாரதமாதாவின் நினைவு அவ்வப்போது வந்தாலும்கூட, பெருவாரியான மக்கள் கஷ்டப்படுவது அவர்களுக்கு துன்பம் அளிக்கவில்லை. ஏதோ பாரதமாதா என்பவள் ஒரு கற்பனைத் தெய்வம் போன்று பக்தி செலுத்தப்பட வேண்டியவள் என்பதாக ஒரு நினைவுதான் அவர்களுக்கு. அந்த பாரதமாதாவின் மக்கள், தங்கள் உடன் பிறப்புகள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே என்கிற அனுதாபம் இல்லாமல், அன்னியர்களுக்கு அடிமையாகவே இருந்தனர்.

सुखं मृदावास्तरणे शयानं सुखानि भोगान् वसु चिन्तयन्तम् ।
पस्पर्श भीमेन करेण वक्षः प्रत्यक्षं अक्ष्णोश्च बभूव काली ॥ 4

(ப-உ) मृदा = மென்மையான, आस्तरणे = படுக்கையில், सुखं = ஸுகமாக शयानं = படுத்துக்கொண்டும், सुखानि = சுகங்களையும், भोगान् = இன்பங்களையும், वसु = செல்வத்தையும், चिन्तयन्तम् = சிந்தித்துக்கோண்டு இருந்த (என்னை), काली = காளி தேவியானவள், भीमेन = பலம் பொருந்திய, करेण = கையினால், वक्षः = (என்)மார்பில், पस्पर्श = தொட்டாள். अक्ष्णोःच= (என்)கண்களுக்கும், प्रत्यक्षम् = நேர்முகமாக, वभूव = ஆனாள்.

(பொ-உ) மென்படுக்கையில் சுகமாக சயனித்துக்கொண்டு, சுகம், இன்பம், செல்வம் எல்லாவற்றையும் பற்றி சிந்தித்துக்கொண்டிருந்த என்னை, காளிதேவியானவள் தன் வலுவான கரத்தினால் என் மார்பைத்தொட்டு, என் கண்களுக்கும் ப்ரத்யக்ஷமாக ஆனாள்.

(வி-உ) உறக்கத்திலிருக்கும் சுயநலமிகளைத் தட்டியெழுப்பி, போராடத் தூண்டவேண்டிய தருணம் வந்துவிட்டது. அதனால் பாரதமாதா, சினம் மிகுந்த காளிதேவியாக வந்து எழுப்பிக் காட்சி கொடுக்கிறாள்.

नरास्थिमालां नृकपालकाञ्चीं वृकोदराक्षीं क्षुधितां दरिद्राम् ।
पृष्ठे व्रणाङ्कां असुरप्रतोदैः सिंहीं नदन्तीं इव हन्तुकामाम् ॥ 5

(ப-உ) नरास्थिमालां = மனிதர்களின் எலும்பு மாலையையும் नृकपालकाञ्चीं = மனிதர்களின் மண்டையோடுகளாலான ஒட்டியாணத்தையும் அணிந்தவளும், वृकोदराक्षीं = ஓனாய் வயிறுபோன்ற கண்களுடையவளும், क्षुधितां = பசியால் வாடுபவளும், दरिद्राम् = ஏழ்மையில் உழல்பவளும் असुरप्रतोदैः = அஸுரர்களின் கசையடிகளால் पृष्ठे व्रणाङ्काम् = முதுகில் காயங்கள் உள்ளவளும், हन्तुकामाम् = கொலை விருப்பம் கொண்டவளும், नदन्तीम् = நடனமாடும், கர்ஜிக்கின்ற, सिंहीं इव = பெண் சிங்கம்போல் இருப்பவளும் ஆன (காளிதேவியை தரிசித்தேன்)

(பொ-உ) காளி தேவி, பயங்கரமான மனித எலும்பு மாலை, மனித மண்டை யோட்டு ஒட்டியாணம் அணிந்து, ஓநாய் வயிறுபோன்று இடுங்கிய கண்களுடன், பசியினாலும் ஏழ்மையினாலும் வாடினவளாய், அசுரர்களின் கசையடிளால் முதுகில் காயங்களுடன் கூடி, கொலைவெறி பூண்ட பெண் சிங்கம் போல் நடனமாடிக் கொண்டும் காட்சியளித்தாள்.

(வி-உ) காளி தேவியின் வடிவந்தாங்கி வந்த பாரதமாதா, தன் தோற்றத்தின் மூலம் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறாள். பல குழந்தைகள் ஆங்கிலேய அரக்கர்களின் அட்டூழியங்களினால் மாண்டுபோனதை மண்டையோட்டு மாலையும், ஒட்டியாணமும் காட்டுகின்றன. தேசமே, பசி, ஏழ்மை இவற்றினால் நொந்துபோய், அரக்கர்களின் கொடுமைகளால் சின்னாபின்னமாக இருந்ததையும் காளிதேவியின் தோற்றம் நினைவு படுத்துகிறது. அடிமைப் படுத்திய ஆங்கிலேய அரக்கர்களை ஒடுக்க வேண்டிய தருணம் வந்ததால் வெகுண்டெழுந்த பெண் சிங்கமாக காளி தேவி காட்சியளித்தாள்.

காளிக்கு இயல்பாக உள்ள மண்டையோட்டு மாலையையும், சிங்க வாகனத்தையும் கவிஞர் நயம்பட இங்கு தேசநிலைமையுடன் இணைத்துப் பேசுகிறார்.

क्रूरैः क्षुधार्तैः नयनैः ज्वलद्भिः विद्योतयन्तीं भुवनानि विश्वा ।
हुङ्काररूपेण कटुस्वरेण विदारयन्तीं हृदयं सुराणाम्॥ 6

(ப-உ) क्रूरैः = கொடுமையானவைகளும், क्षुधार्तैः = பசியினால் பீடிக்கப்பட்டும் ज्वलद्भिः = ப்ரகாசித்துக்கொண்டுமிருக்கும் नयनैः = கண்களால் विश्वा = பரந்துவிரிந்திருக்கும் எல்லா भुवनानि = உலகங்களையும் विद्योतयन्तीं = ப்ரகாசப்படுத்திக்கொண்டும் हुङ्काररूपेण = ஹும் என்கிற कटुस्वरेण = கடுமையான குரலினால் सुराणां = தேவர்களுடைய हृदयं = இதயங்களை विदारयन्तीम् = பிளக்கும் (காளியைத் தரிசித்தேன்).

(பொ-உ) காளிதேவியின் கண்கள் கொடுமை மிகுந்து, பசியினால் பீடிக்கப்பட்டு, அதே சமயம் ஒளி மிகுந்து, அகில உலகங்களையும் ப்ரகாசப்படுத்திக் கொண்டிருந்தன. காளி தேவியின் ஹூம் என்கிற சொல், கடுமையான குரலுடன் பொருந்தி, தேவர்களுடைய இதயங்களைப் பிளப்பதுபோல் அமைந்திருந்தது.

(வி-உ) பசியில் வாடும் ஏழைகளின் இதயம் தன் தார்மீக பலத்தை இழக்கவில்லை. அதனால் தர்மத்தின் ஒளி குன்றாமல் எல்லா திசைகளிலும் பரவிற்று. அநீதியுடன் போராடும் ஆத்மீக சினம் கிளர்ந்தெழுந்தது.

आपूर्य विश्वं पशुवत् विरावैः लेलिह्यमानाञ्च हनू कराले ।
क्रूराञ्च नग्नां तमसीव चक्षुः हिंस्रस्य जन्तोः जननीं ददर्श ॥ 7

(ப-உ) पशुवत् = மிருகம்போல் विरावैः = கடு சப்தங்களால் विश्वं = உலகம் முழுவதையும், आपूर्य = நிரப்பிக்கொண்டு, कराले = பயங்கரமான, हनू च = முகவாய்க்கட்டைகளை, लेलिह्यमानां = நக்கிக் கொண்டும், क्रूरां = கொடுமையான தோற்றத்துடனும், नग्नां = நிர்வாணமாகவும் உள்ள, जननीं = தாயை, तमसी = இருட்டில், हिंस्रस्य = துன்பம் விளைவிக்கும், जन्तोः = ப்ராணியின், चक्षुः इव = கணகளைப் போல், ददर्श = பார்த்தேன்.

(பொ-உ) காளி தேவியின் உரத்த சப்தம் காட்டு மிருகத்தினது போல் கர்ஜனையாக உலகம் முழுவதும் நிரப்பியது. நாக்கினால் அடிக்கடி பயங்கரமான முகவாய்க்கட்டைகளை நக்கிக் கொண்டிருந்தாள். அவளுடைய நிர்வாணமான தோற்றம் கொடுமையாகக் காட்சியளித்தது. அவளுடைய கண்கள் இருட்டில் துன்பம் விளைவிப்பதற்கென்றே ஒளி பொருந்தி இருக்கும் ப்ராணியின் கண்களைப் போலிருந்தன.

(வி-உ) ஏழை ஜனங்கள் உடுக்க துணியில்லாமல் பரிதவிப்பதைப் பார்த்த பாரத மாதா பயங்கரமாக கர்ஜித்துக் கொண்டு, கண்களினால் ஒளியைக் கக்கிக் கொண்டு நடனமாடியதாக கவிஞர் சித்திரிக்கிறார். தேவியின் உத்வேகம், உறங்கிக் கொண்டிருந்த இந்தியர்களுக்கு சக்தி மிகுந்த அறைகூவலாக இருந்தது.

आलोलकेशैः शिखरान्निगृह्य करालदंष्ट्रैश्च विसार्य सिन्धून् ।
श्वासेन दुद्राव नभो विदीर्णं न्यासेन पादस्य च भूश्चकम्पे ॥ 8

(ப-உ) आलोलकेशैः = அசைகின்ற கேசங்களினால், शिखरान् = மலை சிகரங்களை, निगृह्य = பிடுங்கி, करालदंष्ट्रैश्च = பயங்கரமான கோரைப் பற்களால் सिन्धून् = சமுத்திரங்களை, विसार्य = கலக்கி, श्वासेन = மூச்சுக் காற்றினால், विदीर्णं = பிளக்கப்பட்ட, नभः = ஆகாசத்தை, दुद्राव = விரட்டினாள். पादस्य பாதத்தின், न्यासेन च = அடியினால், भूः = பூமி, चकम्पे = நடுங்கியது.

(பொ-உ) காளிதேவியின் அலைபாயும் கேசங்களினால் மலைச் சிகரங்கள் பிடுங்கி யெறியப்பட்டன. பயங்கரமான கோரைப் பற்களால் சமுத்திரங்கள் கலங்கின. மூச்சுக் காற்றினால் ஆகாசத்தில் உள்ள மேகங்கள் சிதறி ஓடின. காளியின் பலத்த பாத நடையினால் பூமி நடுங்கியது.

(வி-உ) குழந்தைகளின் பரிதவிப்பைக் காணச் சகியாமல் உலகையே அழித்து விடுவாள்போல அன்னையின் கோபம் கட்டுக் கடங்காமல் போகிறது. புராணக் கதைகளின்படியும், தேவர்களின் துன்பங்களைக் கண்டு கோபங்கொண்ட காளியானவள், அசுரர்களை அழித்தபிறகும் கோப ஆவேசம் தணியாமல் உலகையே

அழித்துவிடுவாள் போல் இருந்தாள். அவளுடைய கோபத்தை தணிக்க ஒரே வழி, சிவபெருமான் வழியில் படுத்துக் கொண்டு, காளியின் பாதம் சிவனுடைய சரீரத்தின் மேல் படும்படி செய்தால், காளி வருத்தமும் வெட்கமும் மேலுற, கோபத்தை கைவிடுவாள் என்று தேவர்கள் திட்டமிட்டு சிவனிடம் பிரார்த்திக்கிறார்கள். சிவபெருமானும் அவ்வாறே செய்ய, காளியின் கோபம் தணிந்தது. காளியின் மூர்த்தியில் படுத்திருக்கும் சிவன்மீது அவளுடைய பாதம் இருப்பதைப் பார்க்கலாம்.

அரவிந்தரின் கவிதை துர்கா ஸப்தசதீ என்கிற ப்ரசித்தமான புராண வர்ணனைகளை வெகுவாகப் பின்பற்றுகிறது. மகிஷாஸுரனை வதைப்பதற்காகப் புறப்பட்ட தேவியை வர்ணிக்கும்போது, துர்கா ஸப்தசதீ கூறுவதாவது:-

" पादाक्रान्त्या नत भुवं किरीटोल्लिखितांबराम् ।
क्षोभिताशेषपातालां धनुर्ज्या निःस्वनेन ताम् ॥ " (2:38)

" பாதங்களின் பாரத்தால் பூமி சலிக்கவும், கிரீடம் வானத்தின் முகட்டைத் தொடவும், நாணொலியால் பாதாளமுட்பட எல்லா உலகங்களும் நடுங்கின."

उत्तिष्ठ देहीति पिपासुरम्बा दध्वान रात्रौ नगरे वितारे ।
सेयं स्तनन्ती रजनीं तमिस्रां बभौ समापूर्य मनांसि चार्या ॥ 9

(ப-உ) उत्तिष्ठ = எழுந்திரு, देहि = கொடு, इति = என்று, पिपासु = குடிப்பதில் நாட்டம் கொண்ட, अम्बा = அன்னை, रात्रौ = இரவில் वितारे = நக்ஷத்திரங்களில்லாத नगरे = நகரத்தில் दध्वान = கர்ஜித்தாள், स्तनन्ती = கர்ஜித்துக்ககொண்டு, सा इयं = அந்த, आर्या = மதிப்புக்குரிய அன்னை, तमिस्रां = இருண்ட, रजनीं = இரவினையும், मनांसिच = (ஜனங்களின்) மனங்களையும், समापूर्य= நன்கு நிரப்பிக் கொண்டு, बभौ = ப்ரகாசித்தாள்.

(பொ-உ) காளி அன்னை, இருள் சூழ்ந்த இரவில் நகரத்தில் ரத்தத்தைக் குடிப்பதில் நாட்டம்கொண்டவளாய், ‘எழுந்திரு, கொடு’ என்று கர்ஜித்தாள். பூஜைக்குரிய அந்த அன்னை, இருள் சூழ்ந்த இரவினில் ஜனங்களின் மனதில் நன்கு ப்ரகாசித்தாள்.

(வி-உ) ஸனாதன தர்ம இலக்கியங்களில் இருள் என்பது அஜ்ஞானத்தையும், ஒளி என்பது ஜ்ஞானத்தையும் குறிக்கும். ’ तमसो

मा ज्योतिर्गमय ' – 'இருளிலிருந்து என்னை பிரகாசத்துக்கு அழைத்துக் கொண்டு செல்வாயாக' என்பது வேதத்தின் ப்ரார்த்தனை. மக்கள் சேவையே மகேசன் சேவை என்று போதிக்கிறது நம் தர்மம். மக்கள் சேவையின் மூலம் மனது சுத்தமாகி, ஆங்கு கடவுள் பற்று பெருக்கெடுத்து, முடிவில் பகவானின் அதிப்ரகாசமான தர்சனம் மனதில் ஏற்படுவதே நம் தர்மத்தின் அடிப்படை நோக்கம். காளி தேவியானவள், இதற்கேற்ற தூண்டுதலை மக்கள் மனதில் தோற்றுவிக்கிறாள். எல்லா பக்கங்களிலும், ஆங்கிலேய ஆதிக்க வெறியாகிய இரவு சூழ்ந்து, மக்களை படு துயரத்தில் ஆழ்த்தியபோது, பாரதமாதா ஜனங்களின் மனதில் ஒளிர்ந்து, தங்கள் இன்பங்களையும், சுகங்களையும், ஏன், உயிரையும் கூட தியாகம் செய்யுமாறு தூண்டினாள்.

भीतः समुद्विग्नमनाश्च तल्पात् उत्थाय प्रपच्छ तमो नमस्यम् ।
का भासि नक्तं हृदये करालि कुर्वीय किं ब्रूहि नमोऽस्तु भीमे ॥ 10

(ப-உ) भीतः = பயந்துகொண்டு, समुद्विग्नमनाश्च = நடுங்கும் மனத்துடன் तल्पात् = படுக்கையிலிருந்து, उत्थाय = எழுந்திருந்து, नमस्यम् = வந்தனைக்குரிய तमः = தமோதேவியை (காளிதேவியை), प्रपच्छ = கேட்டேன், करालि = பெரிதாக பயங்கரமாக இருப்பவளே, का = நீ யார், नक्तं = இரவினில், हृदये = இதயத்தில், भासि = ப்ரகாசிக்கிறாயே, भीमे = பயங்கரமானவளே, किं कुर्वीय = (நான்)

என்ன செய்ய வேண்டும் என்று, ब्रूहि = சொல்வாயாக, नमः अस्तु = நமஸ்காரம்.

(பொ-உ) பயந்துகொண்டும், நடுங்கும் மனத்துடனும், படுக்கையிலிருந்து எழுந்திருந்து வந்தனைக்குரிய தமோதேவியை (காளிதேவியை) நான் கேட்டேன். 'பயங்கரமான தோற்றமுடைய தேவியே ! நீ யார், ராத்திரி வேளையில் என் இதயத்தில் பிரவேசிக்கிறாயே. (நான்) என்ன செய்யவேண்டும் என்று சொல்வாயாக. நமஸ்காரம்.'

(வி-உ) இருட்டில் இருப்பவன் திடீரென்று வெளிச்சத்துக்கு அழைத்து வரப்பட்டால் அவனுடைய கண்கள் கூசுகின்றன. வெளிச்சத்தை நன்கு பார்க்கமுடியவில்லை. அதுபோல, அஜ்ஞானத்தில் உழலும் மனிதன், திடிரென ஞானப் ப்ரகாசம் தென்பட்டவுடனே, என்ன, ஏது என்று உணர முடியாமல் தவிக்கும் நிலையை கவிஞர் சித்திரிக்கிறார். பயம் மிகுந்து கொண்டு, தன்னிடமுள்ள இன்பங்கள் தன்னைவிட்டு அகன்றுவிடுமோ என்கிற கவலை மிகுந்து அந்த ஒளிப்பிழம்பிலேயே சந்தேகம் வந்துவிடுகிறது. ஜன்ம ஜன்மாந்தரங்களாய் சரீரப் பற்று மிகுந்து இருக்கும் ஜீவன், திடிரென ஆன்மீகப் பற்று மிகுந்து சரீரப் பற்றை

அறவே விடுதல் மிகவும் சிரமமான காரியம். இதைத் தெளிவாக்குகிறது இப்பாடல்.

सिंहस्य सारावं उदीरयन्ती क्रूरस्य कुञ्जे भ्रमतो वधार्थम् ।
ससर्ज वाक्यानि करालमूर्तिः यथा समुद्रस्तनितं शिलायाम् ॥ 11

(ப-உ) कुञ्जे = காட்டில், वधार्थं = (பிராணிகளை) கொல்லுவதற்காக, भ्रमतः = சுற்றிக் கொண்டிருக்கும், क्रूरस्य = கொடுமையான, सिंहस्य = சிங்கத்தின், आरावं = சப்தத்தை, उदीरयन्ती = உதிர்த்துக் கொண்டு, करालमूर्तिः = பயங்கர உருவத்தையுடைய, सा = அந்த தேவி, वाक्यानि = வாக்கியங்களை, ससर्ज = உண்டாக்கினாள். शिलायाम् = பாறையில், समुद्रस्तनितं यथा = சமுத்திர வேகத்தினால் உண்டாகும் சப்தத்தைப் போல.

(பொ-உ) காட்டில் பிராணிகளைக் கொல்லுவதற்காகவே சுற்றிக் கொண்டிருக்கும் கொடுமையான சிங்கத்தின் கர்ஜனைபோல, அந்த பயங்கர உருவத்துடன் தேவியானவள், ஸமுத்திரநீர் வேகமாக பாறையின் மீது மோதும்போது உண்டாகும் சப்தம் பொன்ற குரலில் வாக்கியங்களை உதிர்த்தாள்.

(வி-உ) தெய்வங்கள் காமக் க்ரோதங்களுக்கு முழுதும் அப்பாற்பட்டவர்கள். இருந்தபோதும், அவதாரங்கள் எடுக்கும் போது, அதர்மத்தின் உருவாக இருக்கும் அரக்கர்களை அழிக்க முற்படும்போது, கோபத்தை வரவழைத்துக் கொண்டு சிம்ம கர்ஜனை செய்வது வழக்கம். ராமாயணத்திலும், ராமர் ராவணனை கொல்ல முற்பட்ட போது, कोपं चकार - கோபத்தை வரவழைத்துக் கொண்டார் என்று வருகிறது.

அதுபோன்ற கோபத்துடன், காளிதேவி, சோம்பிக்கிடக்கும் பிரஜைகளை உலுக்கியெழுப்பி, வீரமூட்டும் சொற்களை சிம்ம கர்ஜனையாக உதிர்க்கிறாள்.

मातास्मि भोः पुत्रक भारतानां सनातनानां त्रिद्शप्रियाणाम् ।
शक्तो न यान् पुत्र विधिर्विपक्षः कालोऽपि नो नाशयितुं यमो वा॥12

(ப-உ) भोः पुत्रक = ஏ புத்திரனே, सनातनानां = சனாதன தர்மத்தை பின்பற்றுபவர்களும், त्रिद्शप्रियाणाम् = தேவர்களுக்குப் பிரியமானவர்களும், भारतानां = பாரத தேசத்தவர்களுடைய, माता अस्मि = தாயார் (நான்). पुत्र = புத்திரனே, यान् = எந்த பாரதீயர்களை, नाशयितुं = அழிப்பதற்கு, विधि = தலைவிதியோ, विपक्षः = எதிரியோ, कालः अपि = காலம் கூடவோ, न शक्तः = சக்தியற்றவர்கள். यमो वा = யமனோ கூட, नो= (சக்தி) அற்றவன்தான்.

(பொ-உ) காளி, என்னிடம் கர்ஜித்ததாவது: ஏ புத்திரனே! ஸனாதன தர்மத்தைக் கடைப் பிடிப்பவர்களும், தேவர்களுக்குப் பிரியமானவர்களுமான பாரத தேசத்தைச் சேர்ந்தவர்களுடைய தாயார் நான். புத்திரனே! இந்த பாரதீயர்களை அழிப்பதற்கு, தலைவிதியோ, எதிரியோ, (உகப்பில்லாத) காலமோ, யமனோ கூட சக்தியில்லாதவர்கள்

.

(வி-உ) ஸனாதன தர்மத்தை நன்றாக பின்பற்றுவதால், பாரதீயர்கள் தேவர்களுக்குப் பிரியமானவர்களாகிறார்கள். பல புராணங்களில், தேவர்கள் பாரதீயர்களைக் கண்டு பொறாமைப்படுவதாகக் கூட சொல்லப்பட்டு இருக்கிறது. கர்ம

பூமியாகிய பாரத தேசத்தில் தர்மத்தை கடைப்பிடித்து சுலபமாக நற்கதியடைந்து விடுகிறர்களே என்று பொறாமை.

பாரத நாட்டை எந்த வெளி நாட்டவ்ரும் நிரந்தரமாக அடிமைப்படுத்தியதில்லை. விழிப்புணர்வு மேலிடும்போது, பாரதீயர்கள் வெகுண்டெழுந்து எதிரிகளை விரட்டி அடித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அதேபோல், பாரத கலசாரத்தையும் எந்த வேற்று நாட்டு கலசாரமும் அழித்த தென்பது கிடையவே கிடையாது. ஸனாதன தர்மமும், இந்திய கலாசாரமும் என்றுமே அழியாதவைகள். பாரதமாதா இதைத்தான் தன் குழந்தைகளுக்கு இப்போது நினைவூட்டுகிறாள். சக்தியே உருவான தேவி, மிகுந்த புத்திர வாஞ்சையுடன், இருமுறை புத்திரனே என்றழைத்து, எதிரிகளை விரட்டும் சக்தியை குழந்தைகளுக்கு அருளுகிறாள்.

ते ब्रह्मचर्येण विशुद्धवीर्या ज्ञानेन ते भीमतपोभिरार्याः ।
सहस्रसूर्या इव भासुरास्ते समृद्धिमत्यां शुशुभुर्धरित्र्याम् ॥ 13

(ப-உ) ते आर्याः = அந்த பெரியவர்கள், ब्रह्चर्येण = பிரம்மசர்யத்தினாலும், ज्ञानेन = ஞானத்தினாலும், भीमतपोभिः = கடுமையான தவங்களினாலும், विशुद्धवीर्याः = பரிசுத்தமான வீர்யம் கொண்டவர்களாய், सहस्रसूर्या इव = ஆயிரம் சூரியர்களைப்போல,

भासुरा = பிரகாசிப்பவர்களாய், समृद्धिमत्यां = செல்வச் செழிப்பு நிறைந்த, धरित्र्यां = பூமியில், शुशुभु: = சோபித்தனர்.

(பொ-உ) காளி மேலும் சொனனது – அந்த பாரதீய பெரியவர்கள் பிரம்ம சரியத்தினாலும், ஞானத்தினாலும், கடுமையான தவங்களினாலும் பரிசுத்தமான வீரியம் கொண்டவர்களாய், ஆயிரம் சூரியர்களைப் போல் பிரகாசித்துக் கொண்டு, செல்வச் செழிப்பு நிறைந்த பூமியில் சோபித்தனர்.

(வி-உ) ஆன்மீக உபதேசத்தின்போது, குருவானவர் சீடனுக்கு அவனுடய உண்மையான நிலையை तत्वमसि = அந்த பரப்பிரம்மமாக நீ இருக்கிறாய் என்று எடுத்துரைத்து, அந்த உயரிய பரபிரம்ம நிலையிலிருந்து ஜீவன் நழுவிவிழுந்து ஸம்ஸாரமாகிற சேற்றில் உழல்வதை காட்டி, திரும்பவும் அந்த உச்சநிலையை அடைய வேண்டிய அவச்யத்தை போதிக்கிறார். அதுபோல, காளிதேவி, பண்டைக் காலத்து பாரதீயர்கள் ஆன்மீகமார்க்கத்தில் மிகுந்த முன்னேற்றம் கண்டவர்களாய் இருந்ததை நினைவூட்டுகிறாள். இந்த முன்னேற்றத்துக்கு அவர்கள் கடைப்பிடித்த மார்க்கங்கள் பிரம்மசரியம், கடும் தவம், ஞானம் ஆகியவை. இந்த வழிகளின் மூலம் பிரம்ம சக்தி நிரம்பப் பெற்றவர்களாய் இருந்த அவர்களிடம் தேவர்கள் மிகுந்த அன்புடன் இயற்கை வளத்தை வாரி வழங்கினார்கள். பூமி செழிப்புடன் குதூகலமாய் விளங்கிற்று.

शूराः प्रगल्भाश्च हि शात्रवाणां स्पर्धालवं सोढुममर्षणास्ते ।
पूजां जनन्याः रिपुभिः समाप्य रेजू रणान्ते रुधिराक्तदेहाः ॥ 14

(ப-உ) ते हि = அவர்களோ எனில், शूराः = சூரர்களாகவும், प्रगल्भाःच = தைரியம் மிக்கவர்கள்ளகவும், शात्रवाणां = எதிரி சமூகத்தினருடைய, स्पर्धालवं = சிறிது எதிர்ப்பைக் கூட, सोढुं = பொறுத்துக் கொள்ள, अमर्षणाः = சகிப்பு சக்தி இல்லாதவர்களாக, रिपुभिः = எதிரிகளால், जनन्याः = அன்னையினுடைய, पूजां = பூஜையை, समाप्य = செய்துமுடித்து, रणान्ते = யுத்தமுடிவில், रुधिराक्तदेहाः = ரத்தம் தோய்ந்த உடல்களுடன், रेजू = பிரகாசித்தனர்.

(பொ-உ) காளி மேலும் சொன்னது – பாரதப் பெருமக்கள் சூர வீரர்களாக, மிகுந்த மனோபலத்துட்ன் எதிரி சமூகத்தினரின் கடுகளவு எதிர்ப்பைக் கூட பொறுக்கமாட்டதவர்களாக, எதிரிகளுடைய (பலியின்) மூலம் அன்னையின் பூஜையை செய்து

முடித்து, போர் முடிவில் ரத்தம் தோய்ந்த சரீரங்களுடன் பிரகாசித்தனர்.

(வி-உ) பாரதீயர்கள் ஞான மார்க்கத்தில் மிகவும் முன்னேறியவர்களாக இருந்ததால், வீரம் குறைந்தவர்களாய் இருந்தார்கள் என்று பொருளில்லை. பாண்டவர்கள் ஐவரேயானாலும், ஞானிகளாக இருப்பினும், நூறுபேராக இருந்த கௌரவர்களை மிகுந்த வீரத்துடன் யுத்தம் செய்து அழித்தனர். பாரதீயர்கள் பாரத மாதாவின் நற்செல்வங்களாகத் திகழ்ந்து மாதாவை மகிழ்வுறச் செய்வதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். மகாபாரத யுத்தம் ஆரம்பிக்குமுன், பாண்டவ ச்ரேஷ்டனான அர்ஜுனன் துர்க்காதேவியை வழிபட்டு வெற்றிக்காகப் பிரார்த்தித்தது
இங்கு குறிப்பிடத்தக்கது.

दीनाः क एते घृणिनो दरिद्राः शान्तिं जघन्यां गणिकामिवान्धाः ।
भजन्ति भोः का पुरुषा विमूढा आलिङ्ग्य ये मोदथ मृत्युमेव ॥15

(ப-உ) क एते = இவர்கள், दीनाः = துன்பப்படுவர்களாய், घृणिनः = வெறுக்கத் தக்கவர்களாய், दरिद्राः = ஏழைகளாய், अन्धाः = குருடர்கள், गणिकाम् इव = வேசியை (அடைவது) போல, जघन्यां = இகழிச்சிக்குரிய, शान्तिं = அமைதியை, भजन्ति = அடைகிறார்கள். भोः कापुरुषाः = இழிந்த மக்களே, विमूढाः = பெருமூடர்களாய், ये = இவர்கள், मृत्युं एव = மரணத்தையே, आलिङ्ग्य = தழுவி, मोदथ = ஆனந்திக்கிறார்கள்.

(பொ-உ) காளி மேலும் சொன்னது – இக்காலத்து பாரதீயர்களோ, துன்பப் படுவர்களாய், வெறுக்கப்படுவர்களாய், ஏழைகளாய், குருடர்கள் வேசியை அணைப்பது போல், இகழ்ச்சிக்குரிய அமைதியை நாடுகிறார்கள். இழிவானவர்களே ! இவர்கள் பெருமூடர்களாக மரணத்தையே ஆலிங்கனம் செய்து ஆனந்திக்கிறார்கள்.

(வி-உ) பண்டைய இந்தியர்களின் உயர்ந்த பெரு நிலையை அழகாக வர்ணித்த காளிதேவி, இன்றைய இந்தியர்களின் இழி நிலையை ஆணித்தரமாக சுட்டிக் காட்டுகிறாள். குருடர்கள் வேசி என்று தெரியாமலே வேசியை அணைப்பதுபோல, இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்து மரணம் என்று தெரியாமலே, மயான அமைதியை நாடுகிறார்கள். இவர்களுடைய தாற்காலிக

சுகங்கள் யாவும் இறுதியில் மரணத்தில் கொண்டு செல்லும் என்று அறியாத அறிவிலிகளாக, பெருமோகத்தில் ஆழ்ந்தவர்களாக இவர்கள் இருப்பது வேதனைக்கும், அதே சமயம் வெறுப்புக்கும் உரியது.

क्लीबाः कियन्त्येवं असून् दिनानि धरिष्यथार्ताः प्रहृता वृथैव ।
हसन्त्यमित्रा अपमानराशिं क्रीणीथ शान्त्या धनशोषणञ्च ॥ 16

(ப-உ) क्लीबाः= அலிகளே, एवं = இவ்வாறு, आर्ताः =கஷ்டப்படுவர்களாய், वृथा एव = வீணாகவே, प्रहृताः = அடிபட்டவர்களாய், कियन्ति दिनानि = எவ்வளவு நாட்கள், असून् = பிராணனை, धरिष्यथ = தரிப்பீர்கள். अमित्राः = (உங்கள்) எதிரிகள், हसन्ति = (எள்ளி) நகையாடுகிறார்கள், शान्त्या = அமைதியினால், अपमानराशिं = மிகுந்த அவமானத்தையும், धनशोषणं च = செல்வச் சுறண்டலையும், क्रीणीथ = விலைக்கு வாங்குகிறீர்கள்.

(பொ-உ) காளி தொடர்ந்து சொன்னது - நபும்ஸகர்களே ! நீங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு, வீணாக அடிகளை தாங்கிக் கொண்டு எவ்வளவு நாட்கள் பிராணனை வைத்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் எதிரிகள் உங்களைக் கண்டு எள்ளி நகையாடுகிறார்கள். நீங்கள் வறண்ட அமைதிக்காக மிகுந்த

அவமானத்தையும் செல்வச்சுறண்டலையும் விலைக்கு வாங்குகிறீர்கள்.

(வி-உ) பகவத்கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனிடம் சொன்ன முதல் போதனை:

"क्लैब्यं मा स्म गतः पार्थ नैतत्त्वय्युपपद्यते ।
क्षुद्रं हृदयदौर्बल्यं त्यक्त्वोत्तिष्ठ परंतप ॥" (2:3)"
"அர்ஜுனா! நபும்ஸகத்தனத்தை நீ அடையாதே. இது உனக்குப் பொருந்தாது. எதிரிகளைத் தவிக்கும்படி செய்பவனே, இழிவான இதய பலவீனத்தைக் கைவிட்டு எழுந்திருப்பாயாக."

நிலையில்லாத மயான அமைதிக்காக நாட்டின் மானம், செல்வம், தர்மம் யாவும் பறிபோகும் அளவுக்கு கையாலாகதவர்களாக இன்தியர்கல் இருப்பதை காளிதேவி சுட்டிக் காட்டுகிறாள். வீரமூட்டும் சொற்களைப் பெசி உற்சாகமூட்டுகிறாள்.

म्लेच्छस्य पूतश्चरणामृतेन गर्वं द्विजोऽस्मीति करोति कोऽयम् ।
शूद्रात् अथानार्यतरोऽसि शूद्रो व्रतैः किमेतैः नरकस्य पान्थे ॥ 17

(ப-உ) म्लेच्छस्य = ம்லேச்சனுடைய, चरणामृतेन = பாததீர்த்தத்தினால், पूतः = சுத்தியடைந்தவனாக, कः अयं = எந்த இவன், द्विजः असि इति = நான் பிராமணன் என்று, गर्वं करोति = கர்வப்படுகிறான், अथ = அதனால், शूद्रात् = சூத்திரனைக்காட்டிலும், अनार्यतरः = கேடுகெட்ட, शूद्रः असि = சூத்திரனாக நீ இருக்கிறாய், नरकस्य = நரகத்தின், पान्थे = பாதையில் பயணிக்கும் இவன் விஷயத்தில், एतैः व्रतैः = இந்த விரதங்களினால், किम् = என்ன பயன்.

(பொ-உ) காளி தொடர்ந்து சொன்னது – இந்த பிராமணன், ம்லேச்சர்களுடைய பாத தீர்த்தத்தினால் தான் பவித்திரனானதாக எண்ணிக் கொண்டு, அதே சமயத்தில் நான் பிராமணன் என்று கர்வம் கொண்டிருக்கிறான். ஆனால், சூத்திரனைவிட கேடுகெட்ட சூத்திரனாக நீ இருக்கிறாய். நரகப்பாதையில் விரைந்து கொண்டிருக்கும் உனக்கு, கடும் விரதங்களை மேற்கொள்வதினால் என்ன பயன்.

(வி-உ) பிராமணர்களின் கடமை, ஜனங்களுக்கு எது நன்மை பயக்குமோ, அதை தாங்கள் அனுஷ்டிப்பதும், பிறருக்கு எடுத்துச் சொல்வதும் ஆகும். பகவத் பூஜை செய்து, பகவானின் சரணாம்ருதத்தைப் பருகி ஆசார, அனுஷ்டானங்களைப் பின்பற்றி, சாஸ்திரங்கள் எடுத்துச் சொல்லும் கடும் விரதங்களை செவ்வனே செய்து முடித்தல் அவர்களுடைய கடமையாகும். அவர்கள்,

வேதத்தில் நம்பிக்கையில்லாத ம்லேச்சர்களாகிய ஆங்கிலேயர்களுக்கு அடிவருடிகளாக இருப்பதும், அதே சமயம் பிராமணன் என்று பெருமை பீற்றிக்கொள்வதும் பொருத்தமில்லாத நடத்தையைக் குறிக்கிறது. சாஸ்திரத்தை விட்டு விலகி, ஜனங்களையும் அடிமைப் பாதையில் தொடர்ந்து நீடிக்கும்படி செய்யும் பிராமணர்கள், சொந்த வாழ்க்கையில் ஏகாதசி உபவாசம் முதலிய விரதங்களை அனுஷ்டிப்பதினால், தாங்கள் நரகத்திற்கு செல்ல வேண்டியிருப்பதைத் தவிர்க்கமுடியாது.

காளிதேவி, பொதுவான வீரத்தைப் புகட்டிவிட்டு, தனித் தனியாக வெவ்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்களுக்கு உகந்த பாடத்தைப் போதிக்க ஆரம்பிக்கிறாள்.

முதலில், பிராமணர்களைச் சாடுகிறாள்.

उत्तिष्ठ भो जागृहि सर्जयाग्नीन् साक्षाद्धि तेजोऽसि परस्य शौरेः ।
वक्षः स्थितेनैव सनातनेन शत्रून् हुताशेन दहन्नटस्व ॥ 18

(ப-உ) भोः उत्तिष्ठ = நீ எழுந்திரு, जागृहि = விழித்துக்கொள், अग्नीन् = (வெளியில் அனுஷ்டிக்கப்படும்) அக்னி கார்யங்களை, सर्जय = விட்டுவிடு, परस्य शौरेः = பரமபுருஷனாகிய சூரனுடைய, साक्षात् = நேரடியான, तेजः असि हि = கனலாக நீ இருக்கிறாயன்றோ, वक्षः स्थितेन = (உன் உள்ளே) இதயத்தில் இருக்கக்கூடிய, सनातनेन =

என்றும் விளங்கும், हुताशेन एव = அக்னியினாலேயே, शत्रून् = எதிரிகளை, दहन् = எரித்து, नटस्व = நடனமாடுவாயாக.

(வி-உ) ஸ்வாமி விவேகானந்தர் அடிக்கடி எடுத்துக் கூறிய கடோபனிஷத் வாக்கியம் " उत्तिष्ठत जाग्रत प्राप्य वरान् निबोधत " "விழிமின்! எழுமின்! உயர்ந்த குருமார்களை அணுகி ஞானத்தைப் பெறுமின்!" காளிதேவி, பிராமணர்கள் செய்ய வேண்டிய கடமையை எடுத்துரைக்கிறாள். அவர்களுடைய முக்கிய காரியம் வேதம் ஓதி, யாகங்களை அக்னியில் செய்தல். ஜீவனானவன், பரமாத்மாவின் அம்சமே. பரமாத்மா, ஜோதிப் பிழம்பு. ஜீவனும், ஜோதி வடிவினன்தான். அக்னி எபோதும் அவனுள்ளே நீறு பூத்து மூடப்பெற்று கனலாக இருக்கிறது. அந்த அக்னியை பெரும் ஜ்வாலையாக ஆக்கி, எதிரிகளை எரிக்க வேண்டியதுதான் தற்போதைய தலையாய கடமை. முக்கியமான கடமை வரும் போது தினமும் ஆற்ற வேண்டிய கடமைகளை சுருக்கமாக செய்வது ஆன்றோர் வழக்கத்திலும் இருந்து வருகிறது. மகாபாரத யுத்தத்தின்போது, யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்கள் நித்தியக் கடமைகளாகிய அக்னிஹோத்திரம் முதலியவற்றை யுத்தக் கூடாரங்களிலேயே சுருக்கமாக செய்து யுத்தத்திற்கு புறப்பட்டார்கள் என்று மகாபாரதம் கூறும்.

பரமாத்மாவின் பல நாமங்களுள், சௌரி என்கிற மஹாவிஷ்ணுவின் நாமத்தை கவிஞர் தேர்ந்தெடுத்திருக்கிறார். சௌரி என்கிற பதம் எதிரிகளை அழிக்கக் கூடிய வீரம் மிகுந்த சூரனைக் குறிக்கிறது. அந்த சௌரியின் நேர் அம்சமாகிய இந்தியன், வீறு கொண்டு எழுந்து எதிரிகளை நாசம் செய்ய வேண்டும் என்று காளிதேவி கூறுகிறாள்.

कः क्षत्रबन्धुः भवनेषु गूढो मद्यैः कटाक्षैश्च विलासिनीनाम् ।
धर्मान् यशो दुर्बल विस्मृतोऽसि युध्यस्व भो वञ्चक रक्ष धर्मान्॥ 19

(ப-உ) भवनेषु = அரண்மனைகளில், गूढः = ஒளிந்துகொண்டிருக்கும், कः क्षत्रबन्धुः = (நீ) எந்த க்ஷத்திரியன்? दुर्बल = பலஹீனமானவனே, मद्यैः = மதுபானங்களாலும், विलासिनीनाम् = விளையாடும் ஸ்த்ரீகளுடைய, कटाक्षैः च = கடைக்கண் பார்வையினாலும், धर्मान् = தர்மங்களையும், यशः =புகழையும், विस्मृतः असि = (நீ) மறந்துள்ளாய், भो वञ्चक = ஏ வஞ்சகனே युध्यस्व = யுத்தம் செய், धर्मान् = தர்மங்களை, रक्ष = ரக்ஷிப்பாயாக.

(பொ-உ) காளி மேலும் சொன்னது – அரண்மனைகளில் ஒளிந்து கொண்டிருக்கும் நீ என்ன க்ஷத்திரியனா? பலவீனமானவனே ! மதுபானங்களிலும், கும்மாளமடிக்கும் பெண்களுடைய கடைக்கண்

பார்வைகளிலும், நீ தர்மங்களையும், கீர்த்தியையும் மறந்திருக்கிறாய். ஏ வஞ்சகனே ! யுத்தம் செய், தர்மங்களை ரக்ஷிப்பாயாக.

(வி-உ) க்ஷத்திரியன் என்கிற பதமே ஆபத்திலிருந்து, அழிவிலிருந்து ஜனங்களைப் பாதுகாப்பவன் என்று பொருள்படும். தன்னுடைய தலையாய கடமையாகிய பாதுகாப்பை அறவே மறந்து, மதுவிலும், மாதுவிலும் மூழ்கியிருக்கும் க்ஷத்திரியன், க்ஷத்திரியனே அல்ல என்பதைக் காட்ட கவிஞர் அழகாக க்ஷத்திரபந்து என்கிற பதத்தை உபயோகப்படுத்துகிறார். பிரம்மபந்து என்கிற பதம் பேருக்கு பிராமணனாகவும், பிராம்மணனின் கடமைகளை அறவே மறந்து செயல்படுகிறவனைக் குறிப்பதுபோல, க்ஷத்திர பந்துவும் பேருக்குத்தான் க்ஷத்திரியன்.

க்ஷத்திரியன் தன் தர்மங்களை சரிவர செய்வதினால், யுத்தத்தில் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்வதினால், அல்லது யுத்தத்தில் பிராணத்தியாகம் செய்வதினால் அழியாப் புகழை அடைகிறான். பகவத் கீதையில் கிருஷ்ணர் அர்ஜுனனிடம் உபதேசிக்கிறார்.

“अथ चेत्वमिमं धर्म्यं संग्रामं न करिष्यसि ।

ततः स्वधर्मं कीर्तिं च हित्वा पापमवाप्स्यसि ॥”

“இப்போது இந்த தர்ம யுத்தத்தை நீ செய்யாவிடில், அதனால் ஸ்வதர்மத்தையும், கீர்த்தியையும் இழந்து பாபத்தை நீ அடைவாய் ”

காளிதேவி, பிராம்மணர்களை உத்ஸாஹப்படுத்திவிட்டு, க்ஷத்திரியர்களை வீறுகொண்டு எழுமாறு அறை கூவல் விடுகிறாள்.

अस्त्येव लौहं निशितश्च खड्गः क्रूरा शतघ्नी नदतीह मत्ता ।
कथं निरस्त्रोऽसि मृतोऽसि शेषे रक्ष स्वजातिं परहा भवार्यः ॥ 20

(ப-உ) लौहं = இரும்பினாலான கருவியும், निशितः = கூராக்கப்பட்ட, खड्गः च = வாளும், अस्ति एव = இருக்கிறதே, क्रूरा = கொடுமையான, मत्ता = மதம் பிடித்த, शतघ्नी = பலரை ஒருங்கே கொல்லும் பல முகம் கொண்ட ஈட்டி, इह = இங்கு, नदति = கர்ஜிக்கிறது, कथं = எவ்வாறு, निरस्त्रः असि = (நீ) ஆயுதம் இல்லாதவனாக இருக்கிறாய், मृतः असि = மரித்தவனைப் போல் இருக்கிறாய், शेषे = படுத்துக்கிடக்கிறாய், स्वजातिं = உன் குடியை, रक्ष = காப்பாயாக, परहा = எதிரிகளை அழிக்கும், आर्यः = பெருமை மிகுந்தவனாக, भव = ஆவாயாக.

(பொ-உ) காளி மேலும் சொன்னது – இரும்பினாலான கூராக்கப்பட்ட வாளும் இருக்கிறதே; கொடுமையான மதம் பிடித்த

பல முகம் கொண்ட ஈட்டி இங்கு கர்ஜிக்கிறது. நீ எவ்வாறு ஆயுதம் இல்லாதவனாக ஆனாய். மரித்தவனைப் போல் படுத்துக் கிடக்கிறாய். உன் குடியைக் காப்பாயாக. எதிரிகளை அழிக்கும் பெருமை மிகுந்தவனாக ஆவாயாக.

(வி-உ) காளிதேவி, க்ஷத்திரியர்களுடைய சோம்பலைக் கண்டித்து, போருக்கு வேண்டிய ஆயுதங்கள் யாவும் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதை சுட்டிக் காட்டி, எதிரிகளை அழிக்கும் போரில் உன்மத்தமாக ஈடுபடுமாறு விளிக்கிறாள்.

ஆயுதங்கள் என்பவை இங்கு ஜன சமூகத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தலைவர்கள் உறங்கிக் கொண்டிருந்தால், நாடு சீர் கேடடைந்து, ஜனங்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். தலைவர்கள் போருக்கு ஆயத்தமானால், ஜனங்கள் தானாகவே துள்ளியெழுந்து போரில் கைகொடுப்பார்கள்.

ஆத்மஞானப் பாதையில் சாதகன் பகவானிடம் எவ்வளவுக் கெவ்வளவு சரணாகதி செய்கிறானோ, தன்னிடம் ஒரு பலமுமில்லை, எல்லா பலமும் தெய்வத்தினுடையதே என்பதை உண்மையில் உணர்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய ஆத்ம பலம் பல்கிப் பெருகும். எதையும் சாதிக்க வல்லவனாக ஆகிறான். தேவியே நேரில் வந்து உத்ஸாஹப்படுத்தும்போது, பாரதீயர்களுடைய ஆத்ம பலம் வெகுவாக அபிவிருத்தி அடைந்து,

ஆங்கிலேய எதிரிகள் புறமுதுகிட்டு ஓடுவார்கள். கவிஞர் இதை தேவியின் சொற்கள் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

वैश्योऽसि कश्चेह विशः समृद्ध्यै धनं किमेतद् विपणीषु सज्जम् ।
म्लेच्छार्द्धिरेषा कुरुषे दरिद्रां मामेव कालीं खल मातृद्रोहिन् ॥ 21

(ப-உ) इह च = இங்கு மேலும், कः वैश्यः असि = (நீ) எப்பேர்ப்பட்ட வைசியனாக இருக்கிறாய், विशः = ஜனங்களுடைய, समृध्यै= செல்வச் செழிப்பிற்காக, विपणीषु = சந்தைகளில், सज्जं = வைக்கப்பட்டுள்ள, एतत् किं धनम् = இது என்ன நிதி, एषा = இது, म्लेच्छ ऋद्धिः = ம்லேச்சர்களின் வளமையாகும், खल = துஷ்டனே, मातृद्रोहिन् = அன்னைக்கு த்ரோஹம் செய்பவனே, मां कालीं एव = காளியாகிய என்னையே, दरिद्रां = தரித்திர ஸ்த்ரீயாக, कुरुषे = செய்கிறாய்.

(பொ-உ) காளி மேலும் தொடர்கிறாள் – மேலும் நீ எத்தகைய வைசியனாக இருக்கிறாய். ஜனங்களுடைய வளமையை அபிவிருத்தி செய்வதற்காக சந்தைகளில் உன்னால் வைக்கப்பட்டுள்ள இது எத்தகைய நிதி (என்று யோசித்தாயா)? இந்த நிதி ம்லேச்சர்களாகிய ஆங்கிலேயர்களின் செல்வ மிகுதியாகும். ஏ

துஷ்டனே ! மாத்ரு த்ரோஹம் செய்பவனே ! காளியாகிய என்னையே தரித்திர ஸ்த்ரீயாக நீ ஆக்குகிறாயே.

(வி-உ) காளி தேவி, பிராம்மணர்கள், க்ஷத்திரியர்கள் ஆகியோர்களுடைய கடமைகளைச் சுட்டிக் காட்டிவிட்டு, இப்போது வைசியர்கள் பக்கம் திரும்பி, அவர்களைக் கடுமையாக்ச் சாடுகிறாள். காளி தேவி, ஸகல ஸம்பத்ஸ்வரூபிணி, பாரத தேசம் எல்லாவிதமான வளமைகளையும் தன்னகத்தே கொண்டது. பாரத க்ஷேத்ரத்தில் வேண்டிய பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்து, ஜனங்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் செய்ய வேண்டியது வைசியர்களின் கடமை. அதனை விட்டுவிட்டு, அன்னிய நாடுகளில் உற்பத்தியாகும் பொருட்களை ஜோடித்து வைத்து விற்பனை செய்யும் வைசியர்களை பாரத மாதாவின் துரோகிகள் என்று கூறி வைகிறாள் காளி தேவி. இவ்வாறு செய்யும் வைசியர்கள் பாரதமாதாவையும், காளியையும் தரித்திர தேவதைகளாக ஆக்கிவிட்டனர்.

म्लेच्छर्द्धिमेतां ज्वलनाय देहि रोषाग्निना किं न बिभेषि काल्याः ।
देवीं भवानीं हृदि पूजयित्वा यतस्व लक्ष्म्यै भव जन्मभूम्याः॥ 22

(ப-உ) एतां = இந்த , म्लेच्छर्द्धिं = ம்லேச்ச செல்வத்தை, ज्वलनाय = அக்னிக்கு, देहि = கொடுப்பாயாக, काल्याः = காளிதேவியினுடைய, रोषाग्निना = கோப அக்னியால், किं न बिभेषि = நீ பயப்படவில்லையா, देवीं भवानीं = பவானி தேவியை, हृदि = இதயத்தில், पूजयित्वा = பூஜை செய்து, लक्ष्म्यै = செல்வச் செழிப்பிற்க்காக, यतस्व = முய்ற்சசிப்பாயாக, जन्मभूम्याः = பிறந்த மண்ணின், भव = (உரியவனாக) ஆவாயாக.

(பொ-உ) காளி தொடர்கிறாள் – வைசியனே! இந்த ம்லேச்சசெல்வத்தை அக்கினிக்கு இரையாக்கு. காளிதேவியின் கோபாக்கினிக்கு நீ பயப்படவில்லையா என்ன? பவானி தேவியை இதயத்தில் பூஜை செய்து, செல்வச்செழிப்பிற்ககாக முயற்சி செய். பிறந்த மண்ணின் (சரியான) மைந்தனாக ஆகு.

(வி-உ) வைச்யர்களுடைய கெட்டகாரியங்களைக் கண்டித்து காளி தேவி, இப்போது அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அழகாக எடுத்துரைக்கிறாள். இது நாள் வரை நடந்த அக்கிரமங்கள் போகட்டும். இப்போதாவது, கடமை உணர்வுடன், விற்பனைப் பொருட்களையெல்லம் தீக்கிரையாக்கி, சுதேசப்பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்து வியாபாரம் செய்யுமாறு தூண்டுகிறாள். பாரதமாதாவின் சரியான மைந்தனாக ஆகவேண்டும்

என்றால், Prodigal son, அதாவது கெட்டுத் திரிந்த மகன் சரியான பாதைக்கு வரவேண்டும் என்றால், இரண்டு காரியங்கள் அவச்யமாகின்றன. முதலாவது, எல்லாம் வல்ல பகவதியின் க்ருபையினாலே மட்டும் தான் எந்த காரியமும் வெற்றியடைய முடியும் என்பதினால் பகவதியை இதய வாசஸ்தானத்தில் வலுவாக இருக்கச் செய்து நிரந்தரம் பூஜிக்க வேண்டியது. இரண்டாவது, பெருமுயற்சி செய்வது. கடவுள் கிருபைக்காக பூஜை மட்டும் செய்து ப்ரார்த்தித்துவிட்டு, ஒரு முயற்சியும் செய்யாமல் சோம்பிக் கிடந்தால் காரியம் நிறைவேறாது. பகவத் க்ருபையும், புருஷகாரமும் ஒன்று சேரும்போது, காரியம் சுலபமாக நிறைவேறும் என்பதை கவிஞர் மிக அழகாக எடுத்துரைக்கிறார்.

भॊ भो अवन्त्यो मगधाश्च बङ्गा अङ्गाः कलिङ्गाः कुरुसिन्धवश्च ।
भॊ दाक्षिणात्या श्रृणुतान्ध्रचॊला वसन्ति यॆ पञ्चनदेष् शूराः॥ 23

(ப-உ) भॊ भो अवन्त्यः = ஏ அவந்தி (உஜ்ஜயினி) வாசிகளே मगधाश्च = மகத வாசிகளே बङ्गा: = வங்க வாசிகளே, अङ्गाः = அங்கதேசத்தவர்களே, कलिङ्गाः = கலிங்கதேசத்தவர்களே, कुरुसिन्धवश्च = குரு,ஸிந்து தேசத்தவர்களே, भॊ दाक्षिणात्या = ஏ தென் தேசங்களைச்சேர்ந்தவர்களே, आन्ध्रचॊलाः = ஆந்திர, சோழ

தேசத்தவர்களே, ये = எவர்கள், शूराः = சூரர்களாய், पञ्चनदेष् = அஞ்சு நதிக்கரைகளிலே (பஞ்சாப்), वसन्ति = வசிக்கிறீர்களோ, श्रृणुत = கேளுங்கள்.

(பொ-உ)காளி தேவி மேலும் சொன்னது - ஏ அவந்தி (உஜ்ஜைன் நகர) வாசிகளே, மகதம், வங்கம், அங்கம், கலிங்கம், குரு, சிந்து தேசம் இவற்றைச் சேர்ந்தவர்களே, தென் தேசங்களைச் சேர்ந்தவர்களே, ஆந்திர சோழ தேசத்தவர்களே, ஐந்து நதிகளால் சூழப்பட்ட பஞ்சாபில் வசிக்கும் சூரர்களே, கேளுங்கள்.

(வி-உ) நான்கு வர்ணத்தவர்களுக்கும் அறை கூவல் விடுத்த காளி தேவி, இப்போது பாரத தேசத்தின் பல்வேறு பாகங்களில் வசிக்கும் ஜனங்களை, தனித் தனியே அந்தந்த பிரதேசத்தின் பெயரை சொல்லி, உத்ஸாகமாகக் கூப்பிடுகிறாள். பாரதத்தின் எல்லா பிரதேசங்களிலும் பண்டைக் காலம் தொட்டு தேசபக்தியும், கடவுள் பக்தியும், பிராந்தீய கலாசாரமும் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் எல்லா காலங்களிலும் தேச பக்தர்கள் நாட்டு நலனுக்காக்ப் போராடியிருக்கிறார்கள். இதை நினைவூட்டித் தட்டியெழுப்பவே கவிஞர் இவ்வாறு இந்த பாடலை அமைத்திருக்கிறார்.

ये के त्रिमूर्तिं भजथैकमीशं ये चैकमूर्तिं यवना मदीयाः ।
माताऽऽह्वये वस्तनयान् हि सर्वान् निद्रां विमुञ्चध्वमये श्रृणुध्वम्॥24

(ப-உ) ये के = எவர்கள் त्रिमूर्तिं = (பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கிற மூன்று மூர்த்தி சொரூபமாக உள்ள, एकं ईशं = ஒரு கடவுளை, भजथ = பஜிக்கிறீர்களோ, ये च = எவர்கள், यवनाः = யவனர்கள், एकमूर्तिं =ஒரே மூர்த்தியை (பஜிக்கிறீர்களோ) मदीयाः = (எல்லோரும்) என்னைச் சேர்ந்தவர்களே. सर्वान् = எல்லா, तनयान् वः = பிள்ளைகளாகிய உங்களை, माता = (உங்கள்) அன்னை யாகிய நான், आह्वये = விளிக்கிறேன், अये = நீங்கள், निद्रां = தூக்கத்தை, विमुञ्चध्वम् = விட்டுவிடுங்கள், श्रृणुध्वम् = கேளுங்கள்.

(பொ-உ) உங்களுக்குள் எவர்கள் (பிரம்மா, விஷ்ணு, சிவன்) என்கிற திரிமூர்த்தி சொரூபமாக உள்ள ஒரே கடவுளை வணக்குகிறீர்களோ, எந்த யவனர்கள் ஒரே மூர்த்தியை பஜிக்கிறீர்களோ, எல்லோரும் என்னைச் சேர்ந்தவர்களே. குழந்தைகளாகிய உங்களையெல்லாம் அன்னையாகிய நான் கூப்பிடுகிறேன். நீங்கள் நித்திரையை விட்டு எழுந்து நான் சொல்வதை செவிமடுங்கள்.

(வி-உ) பாரத தேசத்தில் வசிக்கும் எல்லோரும் இந்த தர்மயுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்பது பாரத மாதாவின் அவா.

எந்த வர்ணத்தைச் சேர்ந்தவரானாலும், எந்த பிரதேசத்தில் வசிப்பவரானாலும், எந்த கடவுளை வழிபடுவர்களாக இருந்தாலும், எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த சுதேச விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, பாரத மாதாவின் ஒரே வயிற்றுக் குழந்தைகளாக ஒன்றுபட்டு பாரதமாதவுக்காகப் போரிட வேண்டும். ஒரே தெய்வத்தை வழிபடும் யவனர்கள் பாரத தேசத்தில் இருந்து பாரத கலாசாரத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும், எல்லாரும் பாரத மாதாவின் குழந்தைகள் என்பதை கவிஞர் எடுத்துரைக்கிறார். பாரத் மாதாவைச் சார்ந்த யவனர்கள் என்கிற சொல்லின் மூலம் இந்திய கலாசாரத்தில் ஊறிப்போன முகம்மதியர், கிறித்தவர் முதலானவரையும் குறிப்பிடுகிறார்.

## कालस्य भेरीं श्रृणुताद्रिश्रृङ्गे रौद्रं कृतान्तं मम दूतरूपम् ।
## दुर्भिक्षमेतान् अथ भूमिकम्पान् निबोधत अधीशतमाऽऽगतास्मि॥25

(ப-உ) अद्रिश्रृङ्गे = மலைச்சிகரத்தில், कालस्य = காலனுடைய, भेरीं = பேரி வாத்தியத்தை, श्रृणुत = கேளுங்கள், मम = என்னுடைய, दूतरूपं = தூதனாக இருக்கக்கூடிய, रौद्रं = பயங்கரமான, कृतान्तं = யமனை, (பாருங்கள்) अथ = மேலும், दुर्भिक्षं = பஞ்சம், एतान् भूमिकम्पान् = இந்த பூகம்பங்களையும், निबोधत = உணர்ந்து பாருங்கள், अधीशतमा = ஸர்வேச்வரியாகிய நான், आगता अस्मि = வந்திருக்கிறேன்.

(பொ-உ) மலைச் சிகரத்தில் காலனுடைய பேரிமுழக்கத்தைக் கேளுங்கள். என்னுடைய தூதனாகிய யமனைப் பாருங்கள். மேலும் இந்த பஞ்சம், பூகம்பங்கள் இவற்றை நோக்குங்கள். ஸர்வேச்வரியாகிய நான் வந்துள்ளேன்.

(வி-உ) (பேரி வாத்தியம்) முரசு போர்க்காலத்தில் முழங்கப்படும் இசைக்கருவி. காளிதேவியின் தூதனாகிய யமன் மலைச்சிகரத்தில் பேரிமுழக்கம் செய்கிறான். சப்தத்தைக் கேட்கும் ஜனங்கள் அவனைப் பர்க்கிறார்கள். அதைத் தவிர, நாடெங்கும் பஞ்சம், பூகம்ப நிகழ்ச்சிகள் எல்லாம் வரப் போகும் உத்பாதங்களைத் தெரிவிக்கின்றன. காளிதேவியே வந்தாகிவிட்டது. முதலில் யமனாகிய தூதன், பின்னர் காளிதேவி தானே வந்திருக்கிறாள்.

देहि क्रतून् देहि पिपासुरस्मि जानीहि दृष्ट्वा भज शक्तिमाद्याम् ।
शिरांसि राज्ञां महतां तनूश्च भोक्तुं नदन्ती चरतीह काली ॥ 26

(ப-உ) देहि = கொடுப்பீர், क्रतून् देहि = யஜ்ஞங்களை கொடுப்பீர், पिपासुः अस्मि = தாகத்துடன் இருக்கிறேன், दृष्ट्वा = (என்னை) பார்த்து, जानीहि = தெரிந்து கொள்வீர், आद्यां शक्तिं = ஆதிசக்தியை भज = பஜிப்பீர், तनूश्च = சரீரங்களையும், भोक्तुं

=சாப்பிடுவதற்கு, नदन्ति = கர்ஜித்துக்கொண்டு, काली =காளிதேவி, इह चरति = இங்கு ஸஞ்சரிக்கிறாள்.

(பொ-உ) காளிதேவி தொடர்ந்து கூறியது – கொடுப்பீர், யக்ஞங்களில் (ரத்த ஆஹூதியை) கொடுப்பீர். நான் தாகத்துடன் இருக்கிறேன். என்னைப் பார்த்து அறிந்துகோள்வீர். ஆதி சக்தியை வணங்குவீர். பேரரசர்களின் தலைகளையும், உடல்
களையும் உண்பதற்காகக் காளிதேவி கர்ஜனை செய்து கொண்டு இங்கு சஞ்சரிக்கிறாள்.

(வி-உ) காளிதேவி அன்னியர்களின் ரத்தத்தைக் குடிக்க ஆவலுடன் இருக்கிறாள். ஆதிசக்தியை வணங்கி, அன்னிய சக்திகளுடன் போராடி, அன்னிய பேரரசர்களின் தோல்வியாகிய ரத்தத்தை பாரத மாதாவுக்கு நிவேதனம் செய்ய வேண்டிய தருணம் இனிமேலும் காக்காது என்பதைக் காளிதேவியின் அறை கூவல் மூலம் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

रक्तप्रवाहैः अपि नास्मि तृप्ता शतैः सहस्रैः अयुतैः अजानाम् ।
प्रदत्त भित्वा हृदयानि रक्तं सम्पूजयन्ति एवमजं करालीम् ॥ 27

(ப-உ) अजानाम् = ஆடுகளுடைய, शतैः = நூற்றுக்கணக்கான, सहस्रैः = ஆயிரக்கணக்கான, अयुतैः = பத்தாயிரக்கணக்கான, रक्तप्रवाहैः अपि = ரத்தப் பெருக்கு களால் கூட, तृप्ता न अस्मि = எனக்கு திருப்தி இல்லை, हृदयानि = இதயங்களை, भित्वा = பிளந்து, रक्तं = ரத்தத்தை, प्रदत्त = கொடுப்பீர், एवं = இவ்வாறு, अजां = ஸனாதனியான, करालीं = காளிதேவியை, सम्पूजयन्ति = நன்கு பூஜிக்கிறார்கள்.

(பொ-உ) காளிதேவி மேலும் சொன்னது – நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான, பத்தாயிரக்கணக்கான, ஆடுகளுடைய ரத்தப் பிரவாகங்களாலும் நான் திருப்தியடையவில்லை. (நீங்கள் உங்களுடைய) இதயங்களை பிளந்து ரத்தத்தை கொடுப்பீர். (விஷயம் அறிந்தவர்கள்) இவ்வாறே பிறப்பு இறப்பற்ற காளிதேவியை நன்றாக பூஜனை செய்கிறார்கள்.

(வி-உ) ஆட்டு பலியில் காளிதேவிக்கு திருப்தி இல்லை. ஆத்ம ஸமர்ப்பணத்தினால்தான் பகவதி ஸந்தோஷிக்கிறாள். தேச நலனுக்காக் சுய நலனை ஆகுதி கொடுக்கும் தேச பக்தர்கள்தான் காளிதேவிக்குப் பிரியமானவர்கள்.

येषां सदैवात्मबलिप्रवृत्ताः शूरा महान्तः प्रमुखाः कुलार्थे ।
सौम्या कराली भवति प्रजानां रक्तेन पुष्टा विनिहन्ति शत्रून् ॥ 28

(ப-உ) येषां = எந்த (பிரதேசங்களுடைய), महान्तः = மகான்கள், प्रमुखाः = பிரமுகர்கள், शूरा = சூரர்கள், कुलार्थे = தங்கள் குலங்களுக்காக, सदा एव = எப்போதும், आत्मबलिप्रवृत्ताः = ஆத்மபலி செய்பவர்களாக இருக்கிறர்களோ, प्रजानां = (அந்த) பிரஜை களுக்காக, कराली = பயங்கரமாக இருக்கும் காளியானவள், सौम्या भवति=இனிமையாக ஆகிறாள், रक्तेन = ரத்தத்தினால், पुष्टा = புஷ்டியடைந்து, शत्रून् = சத்துருக்களை, निहन्ति = மாய்க்கிறாள்.

(பொ-உ) காளி மேலும் சொன்னது – எந்த பிரதேசங்களுடைய மகான்கள், பிரமுகர்கள், சூரர்கள், தங்கள் குலங்களுக்காக எப்போதும் ஆத்மபலி செய்யத் தயாராக இருக்கிறார்களோ, அந்த பிரதேசங்களுடைய பிரஜைகளுக்காக, பயங்கர தோற்றமுடைய காளிதேவி, இனிய ரூபம் எடுக்கிறாள். (ஆகுதி செய்யப்பட்ட) ரத்தத்தினால் திருப்தியடைந்து, புஷ்டியடைந்து சத்துருக்களை தேவியானவள் மாய்க்கிறாள்.

(வி-உ) சமூகத்தில் உயர்ந்த ஸ்தானம் வகிப்பவர்களுக்கு விசேஷ பொறுப்பு உள்ளது. தேவியானவள் விசேஷ அந்தஸ்து, வீர்ம்,

செல்வம் இவற்றை யாருக்கு அனுக்ரகம் செய்கிறாளோ, அவர்கள் அதிர்ஷ்டக் குறைவுள்ள சாமானிய ஜனங்களுக்கு சேவை செய்வதற்காகவே அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று சாஸ்திரங்கள் போதிக்கின்றன. அவ்வாறு ஆத்ம தானம் செய்பவர்களுடைய தியாகத்தினால் பகவதி பெரிதும் சந்தோஷமடைந்து, எதிரிகளை வென்று, எல்லோருக்கும் ஸம்ருத்தி, சாந்தி இவற்றையெல்லாம் மேன்மேலும் அருளுகிறாள்.

किं बिभ्यतार्या रुधिरस्य सिन्धौ निमज्जतास्मिन् भवतार्यसत्वाः ।
त्रिशूलि भोः पश्यत तत्र पारे ज्योतिर् ह्युदेतीदं अभिन्नतेजः॥ 29

(ப-உ) आर्याः = பெருமை மிக்கவர்களே, किं बिभ्यत = ஏன் பயப்படுகிறீர்கள், अस्मिन् =இந்த, रुधिरस्य = ரத்தத்தின், सिन्धौ = சமுத்திர வெள்ளத்தில், निमज्जत = முழுகுங்கள், आर्यसत्वाः = மிகவும் விசேஷப் பெருமை வாய்ந்தவர்களாக, भवत = ஆகுங்கள், भोः पश्यत = பாருங்கள், तत्र पारे = (அந்த வெள்ளத்தின்) அக்கரையில், त्रिशूलि = த்ரிசூலத்துடன், ज्योति = ஜோதியானது, अभिन्नतेजः = பெரிய பிரகாசத்துடன், उदेति = உதயமாகிறது.

(பொ-உ) காளி தொடர்ந்தாள் – பெருமை மிகுந்தவர்களே, ஏன் பயப்படுகிறீர்கள். இந்த ரத்த வெள்ளத்தில் முழுகுங்கள். மேலும்

விசேஷ பெருமை வாய்ந்தவர்களாக ஆகுங்கள். ரத்த வெள்ளத்தின் அக்கரையில் த்ரிசூலத்துடன் தோற்றமளிக்கும் ஜோதியானது மிகுந்த ஒளிவெள்ளமாக உதயமாகிறது.

(வி-உ) காளி தேவியின் விசேஷ அனுக்ரஹத்தினால் நல்ல பதவியில் இருப்பவர்கள், ஆத்ம சமர்ப்பணம் என்கிற ரத்த வெள்ளத்தில் அமிழ்ந்து முழுகும்போது, காளியின் விசேஷ அனுக்ரஹம் மேலும் பல்கிப் பெருகுகிறது. பெருமை அதிகரிக்கிறது. காளிதேவியின் ஒளி வெள்ளத்தையே தரிசனம் செய்யும் பாக்கியவான்களாக ஆகிறார்கள்

कवे विलासिन् श्रृणु मातृ वाक्यं कालीं करालीं भज पुत्र चण्डीम् ।
द्रष्टासि वै भारतमातरं तां घ्नतीं अरातीन् भृशमाजिमध्ये ॥ 30

(ப-உ) कवे = கவியே, विलासिन् = இன்பத்தில் இருப்பவனே, मातृ वाक्यं = அன்னையின் வார்த்தையை, श्रृणु = கேட்பாயாக, पुत्र = புத்திரனே, करालीं = பயங்கர தோற்றமளிக்கும், कालीं = காளி தேவியை, चण्डीं = சண்டி தேவியை, भज = பஜிப்பாயாக, आजिमध्ये = யுத்த மத்தியில், अरातीन् = எதிரிகளை, भृशं = வெகுவாக, घ्नन्तीं = அழிக்கும், तां भारतमातरं = அந்த பாரதமாதாவை, वै द्रष्टासि = நேரில் பார்த்துள்ளாய். (பார்ப்பாயே!)

(பொ-உ) கவியே! போகவிலாசத்தில் இருப்பவனே! அன்னையின் சொல்லை கேட்பாயாக. புத்திரனே! பயங்கர தோற்றமளிக்கும் காளி தேவியை, சண்டி தேவியை வ்ழிபடுவாயாக. யுத்த மத்தியில் எதிரிகளை வெகுவாக அழிக்கும் அந்த பாரத மாதாவை நீ நேரில் பார்த்தாய்.

(வி-உ) விடுதலையாகிய தியாக ரத்த வெள்ளத்தில் முழுகும் எந்த இந்தியனும் அதீதமான ஒரு திருப்தியை, சந்தோஷத்தை அநுபவிக்கிறான். பொது நலனுக்காக சுயநலனை தியாகம் செய்யும் யாரும் தேவியின் விசேஷ கிருபைக்கு ஆளாகிறான்.

## सनातनानि आह्वय भारतानां कुलानि युद्धाय जयोऽस्तु मा भैः ।
## भो जागृतास्मि क्व धनुः क्व खड्ग उत्तिष्ठत उत्तिष्ठत सुप्तसिंहाः॥31

(ப-உ) भारतानां = பாரத தேசத்தவர்களுடைய, सनातनानि = பழம் பெரும், कुलानि = குலத்தவர்களை, युद्धाय = யுத்தத்திற்கு, आह्वय = அழைப்பாயாக, जयः अस्तु = வெற்றி உண்டாகுக, मा भैः = பயப்படவேண்டாம், भोः जागृतास्मि = அடே, நான் விழித்துக் கொண்டிருக்கிறேன், क्व धनुः = எங்கே வில், क्व खड्ग = எங்கே

வாள், सुप्तसिंहाः = உறங்கும் சிங்கங்களே, उत्तिष्ठत = எழுந்திருப்பீர். उत्तिष्ठत = எழுந்திருப்பீர்.

(பொ-உ) காளி தொடர்ந்தாள் – பழம் பெரும் பாரத தேசக் குலங்களைச் சேர்ந்தவர்களை யுத்தத்திற்கு அழை. வெற்றி உண்டாகுக. பயம் வேண்டாம். அடே, நான் விழித்துக் கொண்டிருக்கிறேன். எங்கே வில், எங்கே வாள்? உறங்கும் சிங்கங்களே எழுமின், எழுமின்.

(வி-உ) வீர வாக்கியங்களை மேன்மேலும் உதிர்க்கும் காளி தேவி, தேசத்தின் பண்டைப்பெருமை மிக்க போர்க்குலங்களை யுத்தத்திற்கு அழைக்குமாறு சொல்கிறாள். போர்க்குலம் என்பது இங்கே ஸத்தியத்திற்காகவும், தேச நலனுக்ககவும போர்க்கொடி உயர்த்தும் குலத்தைக் குறிக்கும். பகவதியின் கிருபை இருக்கும்போது, பயமேன்? மிகுந்த வீரம் மிகுந்தவர்கள் பாரத தேசத்தவர். ஆனால் ஆங்கிலேய ஆட்சியின் மோகத்தில் மதிகெட்டு மதியின் உறக்கத்தில் திளைத்திருக்கிறார்கள். அதனால் 'உறங்கும் சிங்கங்களே' என்று அழைத்து வீர முழக்கம் செய்கிறாள் காளிதேவி. ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு பழமொழி.:

उद्यमेन हि सिध्यन्ति कार्याणि न मनोरथै ।
न हि सुप्तस्य सिंहस्य प्रविशन्ति मुखे मृगाः ॥

"முயற்சியினால் தான் காரியங்கள் சித்திக்கும், மனக்கோட்டைகளினால் அல்ல. உறங்கும் சிங்கத்தின் வாயில் மிருகங்கள் (தானாகவே) நுழைவதில்லை."

इमानि वाक्यानि निशम्य रात्रौ तेजश्च भीमं तिमिरे विलोक्य ।
चित्तं ननर्ताशु विहाय सद्म भोगान् विनिर्धूय च निर्जगाम ॥ 32

(ப-உ) इमानि वाक्यानि = இந்த வாக்கியங்களை, रात्रौ = இரவில், निशम्य = கேட்டு, तिमिरे = இருட்டில், भीमं = பயங்கரமான, तेजश्च = பிரகாசத்தையும், विलोक्य = பார்த்து, चित्तं = (என்) மனது, ननर्त = நடனமாடியது. आशु = உடனேயே, सद्म =வீட்டை, विहाय = விட்டு, भोगान् = போகங்களை, विनिर्धूय च =புறக்கணித்தும், निर्जगाम = வெளியில் கிளம்பினேன்.

(பொ-உ) காவிய நாயகன் இப்போது சொல்கிறார் – (காளிதேவி சொன்ன) இந்த வாக்கியங்களை இரவில் கேட்டு, இருளில் பயங்கரமாகப் பிரகாசிக்கும் தோற்றத்தையும் பார்த்து, என் மனது நடனமாடியது. உடனேயே நான் வீட்டைத் துறந்தும், போகங்களைப் புறக்கணித்தும் வெளிக் கிளம்பினேன்.

(வி-உ) 12-வது பாடலிலிருந்து 31–வது பாடல் முடிய, அதாவது 20 பாடல்கள் காளிதேவி காவிய நாயகனிடம், இரவினில் விழித்தெழும்படி செய்து, முழக்கிய வீரச்சொற்கள். அந்த வீர முழக்கத்தைக் காதினால் கேட்ட காவியநாயகனுக்கு மயிர்க்கூச்சல் எடுத்தது. மனது வீரநடனமாடியது. வீர உணர்ச்சிகள் போட்டி போட்டுக் கொண்டு சித்தத்தில் நடனமாட, நாயகன் தன் வீட்டைத் துறந்து, மனைவி, மக்கள், செல்வம் முதலான எல்லா இன்பங்களையும் புறக்கணித்து வெளிக்கிளம்பினார்.

सान्द्रं तमिस्रावृतं आर्तमन्धं ददर्श तद्भारतं आर्यखण्डम् ।
गूढा रजन्यां  अरिभिः विनष्टा माता भृशं क्रन्दति भारतानाम् ॥33

(ப-உ) सान्द्रं = அடர்ந்த, तमिस्र-आवृतं = இருள் சூழ்ந்த, आर्तं = கஷ்டப்படும், अन्धं = குருடான, तत् = அந்த, आर्यखण्डम् = பெருமைமிக்கோரின் தேசமான, भारतं = பாரதத்தை, ददर्श = கண்டேன், अरिभिः = எதிரிகளால், विनष्टा = சீரழிக்கப்பட்டவளாய், रजन्यां = இரவினில், गूढा = மறைவிலுள்ள, भारतानं = இந்தியர்களின், माता = தாய், भृशं = மிகவும், क्रन्दति = கூவி அழுகிறாளே.

(பொ-உ) (வீட்டைத் துறந்து வெளியில் வந்த நான்) அடர்ந்த இருள் சூழ்ந்ததும் கஷ்டப்படுவதுமான, அந்த

பழம்பெருமைமிக்கோரின் தேசமான பாரதத்தைக் கண்டேன். பாரதமாதா, எதிரிகளால் சீரழிக்கப்பட்டு, இரவினில் ஒளிந்துகொண்டு மிகுதியாகக் கூவி அழுகிறாளே.

(வி-உ) காளிதேவின் உத்வேகமான வீர முழக்கத்தால், பொய்யான சுகபோகங்கள் என்கிற உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, தேசத்தை புது நோக்கில் கண்டபோது அந்த காட்சி மனதை உலுக்கும் வண்ணம் அமைந்திருந்தது. பாரதத்தின் கோடானுகோடி மக்கள் சீரழிக்கப்பட்டு, ஏழ்மையில் தள்ளப்பட்டு, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி படும் அவதிகளை முதல் முதலாக நேரில் கண்டதை கவிஞர் எடுத்துரைக்கிறார்.

स भ्रामयामास दृशं रजन्यां भ्रातॄन् स तप्तः तिमिरे विचिन्वन् ।
कङ्कालसाराणि ददर्श तानि शवानि तेषां करुणानि भूमौ ॥ 34

(ப-உ) सः = அந்த நான், रजन्यां = இரவில், दृशं = பார்வையை, भ्रामयामास = (நாற்புறமும்) சுழற்றினேன், तिमिरे = இருளில், भ्रातॄन् = சகோதரர்களை, विचिन्वन् = தேடிக்கொண்டு, तप्तः = வேதனையுடன், सः = அந்த நான், भूमौ = பூமியில், तेषां = அவர்களுடைய, तानि = அந்த, कङ्कालसाराणि = எலும்புக்கூடு மாத்திரமாக உள்ள, करुणानि = கருணைக்குகந்த, शवानि = பிணங்களை, ददर्श = கண்டேன்.

(பொ-உ) அந்தநான் இரவினில் பார்வையை நாற்புறமும் சுழற்றினேன். இருளில் சகோதரர்களை வேதனையுடன் தேடிச் சென்ற நான் பூமியில் அவர்களுடைய எலும்புக் கூடு மாத்திரமே எஞ்சிய, கருணையை ஈர்க்கும் பிணங்களைக் கண்டேன்.

(வி-உ) காவிய நாயகன் கண்ட காட்சியின் கோரத்தன்மையை கவிஞர் சித்தரிக்கிறார். நாயகனுடைய உடன் பிறந்தோரைப் பற்றிய கவலை மனதை அரிக்க, அவர் நாற்புறமும் பர்வையிட்டபோது, கண்டகாட்சி கவலை மிகுந்த வேதனையாக மாற்றுவதாயிருந்தது. அவருடைய உடன்பிறந்தோர் நடமாடும் நடைப்பிணங்களாக, சக்தியை முழுதும் இழந்து வெறும் எலும்புக் கூடுகளாக காணப்பட்டனர்.

சுக போகங்களில் உழன்று கொண்டிருந்தபோது, சாமானிய இந்தியர்கள் நிலையை அறிந்துகொள்ளாமல் இருந்தனர். பெரும் பதவியில் இருந்த சிலர், இப்போது, ஏழைகளின் நிலையைப் பார்க்கும்போது, மனதில் தாங்கவொண்ணா வேதனையை அடைந்தனர். மனச்சாட்சி விழித்துக் கொண்டது.

तदा ददर्शासुरमेकं ईशं किरीटिनं वज्रधरं महान्तम् ।
अश्रूणि रक्तौघशतानि मातुः सङ्गृह्य पुष्णन्तं अपत्यसङ्घान् ॥35

(ப-உ) तदा = அப்போது, एकं = ஒரு, किरीटिनं = மகுடமணிந்த, वज्रधरं = வஜ்ராயுதம் தரித்த, महान्तं = பேருருக்கொண்ட, ईशं = அரசனை, असुरं = அசுரனை, मातुः = தாயினுடைய, रक्तौघशतानि = பெருகிய ரத்த வெள்ளத்தை, अश्रूणि = கண்ணீரை, सङ्गृह्य = பிடித்து, अपत्यसङ्घान् = (தன்) குழந்தைக்கூட்டங்களை, पुष्णन्तं = போஷிப்பதை, ददर्श = கண்டேன்.

(பொ-உ) அப்போது ஒரு மகுடமணிந்த, வஜ்ராயுதம் தரித்த, பேருருக்கொண்ட, அசுர ராஜன், என் தாயின் பெருகும் ரத்த வெள்ளத்தையும், கண்ணீரையும் பிடித்து, தன் குழந்தைக் கூட்டங்களை போஷிப்பதைக் கண்டேன்.

(வி-உ) காவிய நாயகன் காணும் காட்சிகள் மேன்மேலும் மனதை உலுக்குவனாய் உள்ளன. இப்போது காணும் காட்சியில், ஒரு அசுரராஜன் மகுடமணீந்து, கையில் இந்திரன் தரிக்கும் வஜ்ராயுதம் போல் சக்திவாய்ந்த ஆயுதங்களை தரித்து, பாரத தேசமெங்கும் பரவிய சர்வாதிகார ஆட்சிக்கு அடையாளமாக் பெரிய உருவம்

எடுத்து இந்தியர்களைக் கொடுமைப் படுத்திக்கோண்டிருந்தான். இந்தியாவின் வளமையான செல்வங்களைத் தன் நாட்டிற்குச் சுரண்டி எடுத்துச் சென்ற ஆங்கிலேயன், தன் குடிவர்க்கங்களை அந்த செல்வத்தினால் பேணி வளர்த்தான். இங்கு நாளுக்குநாள் இந்தியர்கள் நலிவடைந்தனர். இதை கவிஞர் பாரதமாதாவின் கண்ணீர் கலந்த ரத்த வெள்ளத்தினால் அசுரராஜன் தன் குழந்தைக்கூட்டங்களை பேணி வளர்த்ததாக அழகாக கவித்வத்துடன் வர்ணிக்கிறார்.

पदा तुषाराद्रिं अदीनसत्वं मृदूनन्तं अन्घ्रान् इतरेण पौण्ड्रान् ।
प्रसारयन्तं करवालमुग्रं चीनावनौ पह्लवभूमिखण्डे ॥ 36

(ப-உ) पदा = (ஒரு) பாதத்தினால், अदीनसत्वं = உயரமாய் எழும்பி நிற்கும், तुषाराद्रिं = இமய மலையையும், इतरेण = மற்றொரு பாதத்தினால், अन्ध्रान् = ஆந்திர தேசத்தையும், पौण्ड्रान् = பௌண்டிர தேசத்தையும், मृदूनन्तं = அழுத்திக்கொண்டும், चीनावनौ = சீனபூமியிலும், पह्लवभूमिखण्डे = பாரசீக தேஶத்திலும், उग्रं = பயங்கரமான, करवालं = வாளை, प्रसारयन्तं=வீசிக்கொண்டிருந்த (அந்த அசுரராஜனைக் கண்டேன்).

(பொ-உ) ஒரு பாதத்தினால் உயர்ந்தெழுந்து நிற்கும் இமய மலையயும், மற்றொரு பாதத்தினால் ஆந்திர, பௌண்டிர தேசங்களையும் வலுவாக அழுத்திக்கொண்டு, பயங்கரமான வாளை சீன, பாரசீகம் முதலான தேசங்களிலும் வீசிக்கொண்டிருந்த (அந்த அரக்கனைக் கண்டேன்)

(வி-உ) இந்தியர்கள் வெகு நாட்கள் பெரிதான எதிர்ப்பு எதுவும் காட்டாமல் உறங்கிக் கொண்டிருந்தபோது, ஆங்கிலேய அரசாங்கம் இமயம் முதல் கன்னியாகுமரி வரை தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியதோடல்லாமல், அண்டை நாடுகளான சீனா, பர்மா, பாரசீகம் போன்ற தேசங்களிலும் தங்கள் ஆட்சியைப் பரப்பிக் கொண்டிருந்தனர். முளையிலேயே கிள்ளி எறியாததன் பலனாக, ஆங்கிலேய ஆட்சி வேரூன்றிப் பரவி விட்டிருந்தது.

खलं विशालं बलगर्वितं तं धर्मेण दुप्यन्तं अधर्मबुद्धिम् ।
दृष्ट्वा त्वभूत् चित्तमिवाग्निकुण्डं क्रोधेन जज्वाल हि शाश्वतेन॥37

(ப-உ) तं खलं =அந்த துஷ்டனை, विशालं =பெரிய தேகமுள்ளவனை, बलगर्वितं = பலத்தினால் கர்வம் கொண்டவனை, धर्मेण = தரமத்தினால், दुप्यन्तं = வெளிவேஷம் போட்டுக்கொண்டு,

अधर्मबुद्धिं =அதர்மபுத்தி கொண்டவனை, दृष्ट्वा तु = பார்த்து, चित्तं = சித்தம், अग्निकुण्डं इव = அக்னிகுண்டம் போல், अभूत् =ஆயிற்று, शाश्वतेन = நெடுநாள் நிலவும், क्रोधेन = கோபத்தினால், हि जज्वाल = ஜ்வலித்தது.

(பொ-உ) அந்த துஷ்டனை, பேருருக்கொண்டோனை, பலத்தினால் கர்வம் கொண்டவனை, வெளியில் தர்ம வேஷம் போட்டு உள்ளே அதர்ம புத்தி கொண்டவனை, பார்த்து, (என்) சித்தம் அக்கினி குண்டம் போல் ஆயிற்று. நெடுநாளைய கோபத்தினால் ஜ்வலித்தது.

(வி-உ) ஆங்கிலேயர்கள் தாங்கள் செய்யும் அக்கிரமக்காரியங்கள் எல்லாமே ஜனங்களுடைய நன்மைக்காகவே செய்வது போன்று, தர்மத்தில் நிலை நின்று நியாயமார்க்கமாகவே ஆட்சி நடத்துவதுபோன்று வெளிவேஷம் போடுவதில் வல்லவர்களாயிருந்தனர். ஆனால் அவர்களுடைய புத்தி அதர்மத்தில் ஊறியிருந்தது. இந்த வேஷத்தைப் புரிந்து கொண்டவுடனே, தாங்கவொண்ணா கோபம் மனதில் அக்கினியாக கொழுந்து விட்டெரிந்தது. இந்த கோபம் நெடுநாள் நிலவினால்தான், பலம் பொருந்திய ஆங்கிலேயரிடமிருந்து சுய ஆட்சியை வாங்கமுடியும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்.

कुलानि सुप्तानि सनातनानि ह्वातुं जगौ जागरणाय भीमा ।
क्रूरं विरावौघं उदीरयन्ती पार्श्वं ममायाद्रजनीव घोरा ॥ 38

(ப-உ) सुप्तानि = உறங்கிக்கொண்டிருந்த, सनातनानि = பழம் பெருமை மிக்க, कुलानि = குலத்தினரை, जागरणाय = விழிக்கும்படி, ह्वातुं = கூப்பிடுவதற்காக, भीमा = பயங்கரியான காளி, जगौ = கர்ஜித்தாள், क्रूरं = கொடுமையான, विरावौघं =உரத்த சப்தத்தை, उदीरयन्ती = செய்துகொண்டு, रजनी इव = இரவைப்போல, घोरा = (அந்த) பயங்கரி, मम पार्श्वे = என் பக்கத்தில், आयात् = வந்தாள்.

(பொ-உ) உறங்கும் பழம் பெருமைமிகு குடிமகனார்களை எழுப்பும் பொருட்டு, அவர்களை கூப்பிடுவதற்காக பயங்கரியான காளி கர்ஜித்தாள். கொடுமையான உரத்த சப்தத்தைச் செய்துகொண்டு, ராத்திரி தேவியைப்போல, அந்த பயங்கரி என் பக்கத்தில் வந்தாள்.

(வி-உ) நாம் எடுக்கும் நன் முயற்சசிகளுக்கு பகவதி துணை நிற்கிறாள். காளிதேவி ஏற்கெனவே, பயப்படவேண்டாம், போரிடுங்கள், என் அருள் பூரணமாக உங்களுக்கு உண்டு, வெற்றி

நிச்சயம் என்றெல்லாம் விளக்கமாகவே சொல்லியிருக்கிறாள். இப்போது அசுரனின் அக்கிரமங்களையும், பாரத மாதாவின் துர்த்தசையையும் நேரில் கண்டு மனம் வெதும்பி கோபஜ்வாலை கொழுந்துவிட்டெரியும் போது, காளி தேவி வந்து உற்சாகமூட்டுகிறாள்.

भीमैः करालैः धरणी वचोभिः चचाल सिन्धुश्च नभो जगर्ज ।
भीमैः सरोषैश्च विलोकनैस्तैः ब्रह्माण्डमुत्तप्तं इवाग्निवृष्ट्या ॥39

(ப-உ) भीमैः = பயங்கரமான, करालैः =கர்ணகொடூரமான, वचोभिः =(அந்த) காளிதேவியின்) சப்தங்களினால், धरणी = பூமியும், सिन्धुश्च = சமுத்திரமும், चचाल = நடுங்கின, नभः = ஆகாசம், जगर्ज = கர்ஜித்தது, भीमैः = கொடூரமான, सरोषैश्च = கோபத்துடன் கூடிய, तैः विलोकनैः=அந்த பார்வைகளால், ब्रह्माण्डं = பிரம்மாண்டமானது, अग्निवृष्ट्या = அக்னி மழையினால், उत्तप्तं इव = மிக சூடேறியதுபோல் (ஆயிற்று).

(பொ-உ) அந்த காளிதேவியின் பயங்கரமான, கர்ண கொடூரமான சப்தங்களினால் பூமியும் சமுத்திரமும் நடுங்கின. ஆகாசம் கர்ஜித்தது. கொடூரமான, கோபத்துடன் கூடிய அந்த

பார்வைகளால் பிரம்மாண்டம் அக்னிமழையினால் மிகுந்த சூடேறியதுபொலாயிற்று.

(வி-உ) காளி தேவியின் கோபம் மிகுந்திருந்ததைக் கவிஞர் கட்டுகிறார். துர்க்கா ஸப்தசதீயில் மஹிUUஷாஸுர வதத்திற்கு தேவி புறப்படுகையில்,

“सम्मानिता ननादोच्चैः साट्टहासं मुहुर्मुहुः ।
तस्या नादेन घोरेण कृत्स्नमापूरितं नभः ॥
अमायतातिमहता प्रतिशब्दो महानभूत् ।
चुक्षुभुः सकला लोकाः समुद्राश्च चकम्पिरे ॥
चचाल वसुधा चेलुः सकलाश्च महीधराः । ” (2:32:34)

"அங்ஙனம் பூஜித்துப் போற்றப்பட்ட தேவியானவள், உரக்க அடிக்கடி அட்டஹாஸம் செய்தாள். அந்த பயங்கரமான சப்தத்தினால் ஆகாய வெளி எங்கும் நிறைந்தது. அளவிடமுடியாத பெரிய எதிரொலியும் கிளம்பிற்று. உலகங்களும் கலங்கின. சமுத்திரங்களும் நடுங்கின. பூமி அசைந்தது. எல்லா மலைகளும் நடுங்கின." என்று வர்ணிக்கப்பட்டுள்ளதை ஒப்புநோக்கலாம்.

त्रैलोक्यमुन्मादकरैः कराल्या आवाहनैः पूर्णमभूच्च सर्वम् ।
ज्वालामुखी दारुणवह्निगर्भा कण्ठात् उदक्रामत् अजस्रशब्दा ॥40

(ப-உ) सर्वं त्रैलोक्यं च =மூன்று உலகங்கள் முழுவதும், कराल्याः = பயங்கரியினுடைய, उन्मादकरैः = போதை உண்டாகும், आवाहनैः = கூக்குரல் களினால், पूर्णं अभूत् = நிரம்பியது, दारुणवाह्निगर्भा = உக்கிரமான அக்கினியைக் கொண்ட, अजस्रशब्दा = இடைவிடாத சப்தத்தைக் கொண்ட, ज्वालामुखी =எரிமலையானது, कण्ठात् = தொண்டையிலிருந்து, उदक्रामत्= வெளிவந்தது போலும்.

(பொ-உ) பயங்கரியான காளியினுடைய போதை உண்டாக்கும் கூக்குரல்களினால் மூன்று உலகம் முழுதும் நிரம்பியது. அந்த தேவியினுடைய தொண்டையிலிருந்து, உக்கிரமான அக்கினியை தன்னுள் கொண்ட, இடைவிடாத சப்தத்துடன் கூடிய எரிமலையானது வெளிவந்தது தானோ !

(வி-உ) காளி தேவியின் தாங்கவொண்ணா சீற்றத்தை கவிஞர் மேலும் வர்ணிக்கிறார்.

தேவீ பாகவதத்தில் தேவியானவள் ஹிமவானுக்கு விஸ்வரூபதர்சனம் அருளினாள். அப்போது,

“मुखमग्निः समाख्यातो दिवारात्रि च पक्ष्मणी ।’

தேவியின் வாய் அக்கினியாகவும், கண்ணிமைகள் பகலும் இரவுமாகக் காட்சியளித்தன என்று வர்ணிக்கப்படுகிறது.

क्षोभेण तीव्रेण चराचरस्य क्षुब्धान्यपश्यं पृतनानि तत्र ।
स्वप्नोत्थितानीव वचः सुरौद्रं भो हन्यतां दुष्ट इतीरयन्ति॥ 41

(ப-உ) तत्र = அங்கு, चराचरस्य = அசையும் பொருட்கள், அசையா பொருட்கள், எல்லாவற்றினுடைய, तीव्रेण = தீவிரமான, क्षोभेण = நடுக்கத்தால், क्षुब्धानि = கலக்கமடைந்து, भो हन्यतां दुष्टः = அடே, துஷ்டன் கொல்லப்படட்டும், इति = என்று, सुरौद्रं = மிக கொடூரமான, वचः = வார்த்தைகளை, ईरयन्ति = சொல்லிக் கொண்டிருக்கும், स्वप्नोत्थितानि इव = ஸ்வப்னத்திலிருந்து எழுந்தவைபோன்ற, पृतनानि = சேனைகளை, अपश्यम् = பார்த்தேன்.

(பொ-உ) அங்கு அசையும் பொருட்கள், அசையாபொருட்கள் எல்லாவற்றினுடைய தீவிரமான நடுக்கத்தால் கலக்கமடைந்த சேனைகளைப் பார்த்தேன். அந்த சேனைகள் "அடே ! துஷ்டன் கொல்லப்படட்டும்" என்று மிக கொடூரமான வார்த்தைகளை சொல்லிக் கொண்டு, ஸ்வப்னத்திலிருந்து எழுந்திருந்தவை போன்று இருந்தன.

(வி-உ) காளி தேவி யுத்தத்திற்குப் புறப்படும்போது எவ்வாறு தேவர்களின் சேனை உடன் செல்லுமோ, அவ்வாறு இப்போது தேவியின் கூக்குரலால் உந்தப்பட்டு பல மனிதர்கள் சேனைகள் போல் அணிகளை வகுத்து யுத்தத்திற்குத் தயாராயினர். சேனைகள் புறப்படும்போது எதிரிகளை எதிர்த்து பெரும் கூச்சல் போடுவது வழக்கம். அது மேலும் உற்சாகத்தை மிகுதிப்படுத்துவதாக அமையும்.

ज्ञात्वा हि मातू रुदितं क्षतानि विद्युद्धराणि अक्षिशतान्यभूवन् ।
क्रोधैः सहस्राणि ततो मुखानि भीमानि भीमं दनुजेशमायन् ॥ 42

(ப-உ) मातु: = தாயினுடைய, रुदितं = அழுகையையும், क्षतानि = மெலிந்து போன (சரீரத்தையும்), ज्ञात्वा = அறிந்து, अक्षिशतानि = நூற்றுக்கணக்கன கண்களோ, विद्युद्धराणि = மின்னல்போல் ஒளிர்பவைகளாக, अभूवन् = ஆயின, ततः = பின்னர், क्रोधैः =கோபம் கொண்ட, सहस्राणि = ஆயிரக்கணக்கான, भीमानि = பயங்கரமான, मुखानि = முகங்கள், भीमं = பயங்கரமான, दनुजेशं =அரக்கராஜனை நோக்கி, आयन् = வந்தன.

(பொ-உ) தாயினுடைய அழுகையையும் மெலிந்துபோன சரீரத்தையும் அறிந்த, நூற்றுக்கணக்கான கண்களோ, மின்னல்போல் ஒளிர்பவைகளாக ஆயின. பின்னர், கோபங்கொண்ட ஆயிரக்கணக்கான, பயங்கரமான முகங்கள் பயங்கரமான அரக்கராஜனை நோக்கி வந்தன.

தேவீ பாகவதத்தில், சுதர்சனன் என்கிற, தேவி பக்தியில் சிறந்த காசி ராஜனை, யுத்தத்தில் காபாற்றுவதற்காக, தேவி தானே பிரத்யக்ஷமாகத் தோன்றி எதிரிகளை முறியடித்தாள் என்று வர்ணிக்கப்படுகிறது.

नानारूपा तदा जाता नानाशस्त्रधरा शिवा ।
संप्राप्ता तुमुलं तत्र चकार जगदम्बिका ॥ (3:23:38)

“சிவனுடைய சக்தியான ஜகதம்பிகை அப்போது பல உருவங்கள் எடுத்துக் கொண்டு, பலவகை ஆயுதங்களைத் தாங்கி, அங்கு வந்து சேர்ந்து பெருங்கூச்சல் செய்தாள்."

सुप्तेषु पुत्रेषु रणोत्सुकेषु निशाचरः शोणितमार्यमातुः ।
पिबन् विनर्दस्यबलान् बली को विहंसि चाण्डाल कृतान्तभक्ष्य॥ 43

(ப-உ) चाण्डाल = சண்டாளனே, कृतान्तभक्ष्य = யமனுக்கு உணவாகுபவனே, रणोत्सुकेषु =யுத்தத்தில் ஆர்வம் கொண்ட, सुप्तेषु = உறங்கிகொண்டிருக்கிற, पुत्रेषु = புத்திரர்களிருக்கையில்,கः बली=எந்த பலவானான, निशाचरः =அரக்கன், आर्यमातुः = பெருமைக்குகந்த தாயாரின், शोणितं = ரத்தத்தை, पिबन् = குடித்துக் கொண்டு, विनर्दसि = கர்ஜிக்கிறாய், अबलान् = பலஹீனமானவர்களை, विहंसि = அழிக்கிறாய்.

(பொ-உ) “சண்டாளனே ! யமனுக்கு ஆகாரமாகுபவனே ! யுத்தத்தில் ஆர்வங்கொண்ட புத்திரர்கள் உறங்குகையில், எந்த பலவானான அரக்கன், பெருமைக்குகந்த தாயாரின் ரத்தத்தைக் குடித்துக் கொண்டு கர்ஜனைசெய்கிறாய்? பலமில்லாதோரை அழிக்கிறாய்.” (என்று காளி தேவி கூவினாள்).

(வி-உ) உத்ஸாஹம் மிகுந்த சேனை வீரர்கள் ஆங்கிலேய அசுர ராஜனை சாடுகின்றனர். வீரம் மிகுந்த புதல்வர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது, தாயாரை அவமானப்படுத்துவதும், வலிமையில்லாதோரை அழிப்பதும் கோழைகளின் செயலாகும். யுத்தத்தில் நேர்முகமாக சண்டையிடுவது தான் வீரர்களின் கார்யம். காளிதேவியின் முகமாக கவிஞர் இந்த மாபெரும் யுத்த தர்மத்தை ஞாபகப்படுத்துகிறார்.

इतीरयन्ती वचनानि रुष्टा शस्त्रं गृहीत्वा धनुरग्निगर्भम् ।
अभ्यद्रवद् भीममरातिमुग्रा पश्चात् पुरस्ताच्च जगर्ज काली ॥ 44

(ப-உ) इति =என்று, वचनानि = சொற்களை, ईरयन्ती = கூறிக்கொண்டு, उग्रा = உக்கிரமான, रुष्टा =சினம் மிகுந்த, काली = காளியானவள், शस्त्रं = ஆயுதமான, अग्निगर्भं = அக்கினியைக் கக்கும், धनुः = வில்லை, गृहीत्वा = ஏந்தி, भीमं = பயங்கரமான, अरातिं = எதிரியை, अभ्यद्रवत् = நன்கு துரத்தினாள். पश्चात् = பின்புறத்திலும், पुरस्तात् च= முன் புறத்திலும், जगर्ज = கர்ஜித்தாள்.

(பொ-உ) மேற்கூறிய சொற்களைக் கூவிக் கொண்டு, சினம் மிக்க உக்கிரமான காளிதேவி, தன் ஆயுதமான அக்கினியைக் கக்கும் வில்லை ஏந்தி, பயங்கரமான அந்த எதிரியைத் துரத்தினாள். பின்புறத்திலும், முன் புறத்திலும் கர்ஜித்தாள்.

ज्वालाकराला धरणी बभूव क्रोधैर्ज्वलद्भिः गगनं च तूर्णैः ।
ह्लेषारवैः दुन्दुभिघोरनादैः त्रस्ता धराभूत् दनुजस्य युद्धे ॥ 45

(ப-உ) तूर्णैः = வேகம் மிகுந்த, ज्वलद्भिः = ஜொலிக்கும், क्रोधैः = கோபத்தினால், धरणी =பூமியும், गगनं च = ஆகாயமும், ज्वालाकराला = பயங்கர ஜ்வாலையுள்ளதாக, बभूव = ஆயின, दनुजस्य = அசுரனுடைய, युद्धे = யுத்தத்தில், हलेषारवैः = தொடர்ந்த சப்தத்துடன் கூடிய, दुन्दुभिघोरनादैः பேரிகையின் பயங்கர சப்தத்தினால், धरा = பூமியானது, त्रस्ता = பயமடைந்ததாக, अभूत् = ஆயிற்று.

(பொ-உ) (காளிதேவியின்) வேகம் மிகுந்த ஜொலிக்கும் கோபத்தினால், பூமியும், ஆகாயமும் பயங்கர ஜ்வாலையுடன் தோன்றின. அசுர யுத்தத்தில் தொடர்ந்து சப்தம் செய்யும் யுத்த பேரிகையின் பயங்கர நாதத்தினால் பூமியானது பயமடைந்தது.

रक्ताक्तमेघा नभसीच तेपुः पपात चोर्व्यां रुधिरोग्रवृष्टिः ।
रक्तोदधौ रेजुरथाद्रिसङ्घाः वसुन्धरा रक्तमयी बभासे ॥ 46

(ப-உ) नभसी = ஆகாயத்தில், रक्ताक्तमेघाः = ரத்தம் தோய்ந்த மேகங்கள், तेपुः इव = எரிவது போல் (தோன்றின), उर्व्यां = பூமியில், रुधिरोग्रवृष्टिः = பயங்கர ரத்தமழை, पपात = பெய்தது, अथ = மேலும், रक्तोदधौ = ரத்த சமுத்திரத்தில், अद्रिसङ्घाः = மலைக் கூட்டங்கள், रेजुः =

பிரகாசித்தன, वसुन्धरा = பூமியானது, रक्तमयी = ரத்தமயமாக, बभासे = பிரகாசித்தது.

(பொ-உ) ஆகாயத்தில் ரத்தம் தோய்ந்த மேகங்கள் எரிவது போல் தோன்றின. பூமியில் பயங்கர ரத்தமழை பெய்தது. மேலும், ரத்த சமுத்திரத்தில் மலை கூட்டங்கள் (மிதப்பது போல்) பிரகாசித்தன. பூமியானது, ரத்த மயமாக பிரகாசித்தது.

(வி-உ) 45-46 ஸ்லோகங்களில் காளியின் உக்கிர கோபத்தை கவிஞர் வர்ணிக்கிறார். கோபாக்னியினாலேயே அசுர சேனை நாசமாகி பூமியில் ரத்த வெள்ளம் பெருக்கெடுத்தது.

## भीमॊ रजन्यां असुरॊ बलीयान्ममर्द सैन्यान् सुरप्रियाणाम् ।
## जगर्ज चॊन्मत्तमनाः सुरारिः कॊ मे समः पुंस्विति रूढगर्वः ॥ 47

(ப-உ) रजन्यां = ராத்திரியில், भीमः = பயங்கரமான, बलीयान् = பலவானான, असुरः = அசுரன், सुरप्रियाणां = தேவர்களுக்கு பிரியமானவர்களின், सैन्यान् = சேனைகளை, ममर्द = நசுக்கினான். पुंसु = மனிதர்களில், कः मे समः = யார் எனக்கு சமமானவர்கள், इति =

என்று, रूढगर्वः = கர்வம் தலைக்கேறி, उन्मत्तमनाः च = மதம் பிடித்த மனதுடன், सुरारि: = தேவ சத்துருவானவன், जगर्ज = கர்ஜித்தான்.

(பொ-உ) ராதிரியில், பயங்கரமான பலம் பொருந்திய அசுரன் தேவர்களுக்குப் பிரியமான பாரதீயர்களின் சேனைகளை நசுக்கினான். மனிதர்களில் யார் எனக்கு சமமானவன் என்று கர்வம் தலைக் கேறி, மதம் பிடித்த மனத்துடன், தேவ சத்துருவானவன் கர்ஜித்தான்.

(வி-உ) ஆங்கிலேயர்கள் மிகுந்த கர்வத்துடன், "The sun never sets on the British Empire" (சூரியன் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை) என்ற வசனத்தை மொழிந்துகொண்டு ஆடிக் கொண்டிருந்தனர். இந்தியர்களை ஒருபொருட்டாகவே அவர்கள் மதிக்கவில்லை. ஜாலியன்வாலா பாக் படுகொலை போன்ற கோரமான வரலாற்று நிகழ்ச்சிகள் இதற்கு சான்று.

துர்கா ஸப்தசதியில், சும்ப நிசும்பர்களின் தூதன் ஆரம்பத்தில் தேவியிடம் சென்று கூறினான்.

"अवलिप्तासि मैवं त्वं देवि ब्रूहि ममाग्रतः ।
त्रैलोक्ये कः पुमांस्तिष्ठेत् अग्रे शुम्भनिशुंभयोः ॥" (5:123)

“தேவி ! நீ கர்வம் பிடித்தவள். என்முன் நீ இவ்வாறு பேசாதே. மூவுலகிலும் சும்ப நிகம்பர்களின் எதிரில் எந்த மனிதன் நிற்பான்”. இதை இங்கு நினைவூட்டிக்கொள்ளலாம்.

तदा तमिस्रां अपसारयन्तं रक्तप्रकाशं दिवि बालसूर्यम् ।
शरोपमैः घ्नन्तमिवांशुभिस्तं प्रीतो ददर्शाहमुदग्ररश्मिम् ॥ 48

(ப-உ) तदा = அப்போது, अहं =நான், प्रीतः = மகிழ்ச்சியுடன், दिवि = ஆகாசத்தில், तमिस्रां = இருளை, अपसारयन्तं = விலக்கிக்கொண்டிருக்கும், रक्तप्रकाशं= ரக்தவண்ண பிரகாசமுள்ளவனும், उदग्ररश्मिं = தீவிர கிரணங்களுடன் கூடியவனுமான, बालसूर्यं = பாலசூரியனை, शरोपमैः = அம்புபோன்ற, अंशुभिः = கிரணங்களால், तं = அந்த அசுரனை, घ्नन्तं इव = அழிப்பது போன்று, ददर्श = பார்த்தேன்.

(பொ-உ) அப்போது நான், ஆகாசத்தில் மகிழ்ந்த மனத்தினாய், இருளை அப்புறப்படுத்திக்கொண்டு, ரத்த நிற பிரகாசத்துடன், தீவிரமான கிரணங்களுடன் கூடிய பாலசூரியனை, அம்பு போன்ற கிரணங்களால் அந்த அசுரனை அழிப்பதுபோன்று பார்த்தேன்.

(வி-உ) அந்தகாரம் கஷ்டம், அஜ்ஞானம் இவற்றை குறிக்கும் சொல். சூரியோதயம். கஷ்டநிவிருத்தி, ஞானம் இவற்றைக் காட்டும். சூரியோதயத்திற்க்கு முன் ஏற்படும் அருணோதயமே கஷ்ட நிவாரணத்திற்க்கும், ஞானத்திற்கும் அறிகுறியாகிறது. காவியநாயகன் அருணோதயத்தைப் பார்த்து அசுரன் அழிந்தான் என்று மகிழ்கிறார்.

समाकुलं भाविभिः आस्यवर्यैः ब्रह्माणमद्राक्षं अथाभ्ररूपम् ।
सहस्रमक्षीणि ददर्श तस्मिन् प्रतीक्षमाणानि अभयं जनन्याः ॥ 49

(ப-உ) अथ = மேலும், भाविभिः = உணர்ச்சி மிகுந்த, आस्यवर्यैः = சிறந்த முகங்களால், समाकुलं = நிறைந்த, अभ्ररूपं = மேக உருவில், ब्रह्माणं = பிரம்மாவை, अद्राक्षम् = பார்த்தேன், तस्मिन् = அதில், जनन्याः = தாயின், अभयं = அபயத்தை, प्रतीक्षमाणानि = எதிர்பார்க்கும், सहस्रं = ஆயிரம், अक्षीणि = கண்களை ददर्श = பார்த்தேன்.

(பொ-உ) மேலும் உணர்ச்சி மிகுந்த சிறந்த முகங்கள் நிறைந்த மேகவடிவில் பிரம்மாவைக் கண்டேன். அதில் தாயின் அபயத்தை எதிர்பார்க்கும் ஆயிரம் கண்களைப் பார்த்தேன்.

(வி-உ) புராணங்களில் தேவர்களுடைய துன்பம் அதிகமாகும்போது, அவர்கள் முதலில் பிரம்மாவை சரண்புகுவது வழக்கம். அசுரர்களால் அவதிப்படும் தேவர்களுடைய நிலையைக் கண்டு வருந்தும் பிரம்மா, தேவியிடம் பிரார்த்தித்து, தேவியின் கருணயினால் தேவர்கள் கஷ்டம் நீங்கப்பெறுவதைப் பார்க்கிறோம். மதுகைடபர்கள் என்கிற இரு அசுரர்கள் பிரம்மாவையே தாக்க முயற்ச்சித்தபோது, பிரம்மா காளிதேவியைப் பிரார்த்தித்து, காளி தேவி, விஷ்ணுவை தூக்கத்திலிருந்து எழுந்திருக்குமாறு செய்து, விஷ்ணுவின் கையினால் அந்த அசுரர்களின் வதம் நிகழ்ந்தது என்று துர்க்கா ஸப்தசதியின் முதல் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது போல் பாரதீயர்களின் கஷ்டங்களைப் பார்த்து மனம் நொந்த பிரம்மாவின் நிலையை, ஆயிரம் கண்களுடன் பாரதத்தாயின் கஷ்டநிவிருத்திக்காக தேவியிடம் பிரார்த்தனை செய்வதாக கவிஞர் வர்ணிக்கிறார்.

द्विकोटिभास्वत् वरसूर्यभासं ज्योतिस्तदा सौम्यमरातिनाशि ।
नारीशरीरं रमणीयकान्ति दूरादुदीच्यां उदियाय शुभ्रम् ॥ 50

(ப-உ) तदा = அப்போது, द्विकोटिभास्वत् = இரண்டு கோடி சூரியர்களின் वरसूर्यभासं = பளிச்சென்ற பிரகாசத்துடன், अरातिनाशि = எதிரிகளை நாசம் செய்யும், सौम्यं = அழகான, शुभ्रं வெண்மையான,

रमणीयकान्ति = மனதைக் கவரும் ஒளி மிக்க, ज्योतिः = ஜோதியானது, नारीशरीरं = பெண்களின் உருவத்துடன், दूरात्  = தூரத்தில், उदीच्यां = வடதிசையில், उदियाय = உதயமாயிற்று.

(பொ-உ) அப்போது இரண்டுகோடி சூரியர்களின் பிரகாஶத்துடன், எதிரிகளை நாசம் செய்யும், அழகான, வெண்ணிற, மனதைக் கவரும் ஒளிமிக்க ஜோதியானது பெண் உருவத்துடன் தூரத்தில் வடதிசையில் உதயமாயிற்று.

(வி-உ) பிரம்மாவின் பிரார்த்தனைக்கிணங்க, தேவி ஆவிர்ப்பவிக்கிறாள். பாரத தேசத்தின் வடதிசையில் நெடிதுயர்ந்து விளங்கும் இமயமலை மிகப்புனிதமாகக் கருதப்படுகிறது.

"अस्त्युत्तरस्यां दिशि देवतात्मा हिमालयो नाम नगाधिराजः।"

“வடதிசையில் தேவதைகளின் இருப்பிடமான இமாலயம் என்ற பெயர் கொண்ட மலையரசர் இருக்கிறார்.” என்று காளிதாஸன் குமார ஸம்பவத்தின் முதல் ச்லோகத்திலேயே சொல்கிறார். அந்த ஹிமவானுடைய புத்திரியாக பார்வதி தேவியாக வந்து சிவபெருமானை மணந்து பக்தர்களுக்கு தேவி அருள்பாலிக்கிறாள். சும்ப நிசும்பர்களால் பெருந்துன்பத்துக்கு ஆளான தேவர்கள் இமய மலைக்குச் சென்று பிரார்த்தித்து பார்வதி தேவியின் தரிசனம் பெற்று, பின்னர் தேவியின் அருளால் துன்பம் நீங்கினர் என்கிற

வரலாறு துர்காஸப்தசதியில் மூன்றாவது சரித்திரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

அதனால்தான், இங்கு கவிஞரும் வடதிசையில் பெண்ணுருவத்துடன் கோடி சூரியப்பிரகாசத்துடன், அதே சமயம் மனதைக்கவரும் வண்ணம், ஜோதியானது தோன்றி பாரதீயர்களுக்கு பெரும் சாந்தியையளித்ததாக வர்ணிக்கிறார்.

तां ह्लादिता दीप्तजगत्सु देवाः तां अन्तरिक्षे मधुरं वयांसि ।
जगुर्मनुष्याः प्रणिपत्य चोर्व्यां विश्वं विनष्टाधि यदाविवेश ॥ 51

(ப-உ) यदा =எப்பொழுது, विश्वं =ஸ்ருஷ்டியில், आविवेश = புலப்பட்டாளோ, विनष्टाधि =மனம்சம்பந்தப்பட்ட துக்கங்கள் விலகின. तां =அந்த தேவியை, दीप्तजगत्सु =ஒளி பொருந்திய உலகத்தில், ह्लादिताः = சந்தோஷமடைந்த, देवाः = தேவர்களும், अन्तरिक्षे = நடுவானத்தில், वयांसि = பறவைகளும், मधुरं = இனிமையுடனும் उर्व्यां = பூமியில், मनुष्याः = மனிதர்களும், प्रणिपत्य = நமஸ்கரித்து, जगुः = கானம் செய்தனர்.

(பொ-உ) எப்போது (தேவியானவள்) ஸ்ருஷ்டியில் தென்பட்டாளோ, (அப்பொழுதே) மனதில் எழும் துக்கங்கள் யாவும் அழிகின்றன. அந்த தேவியை, ஒளி பொருந்திய (தேவ) லோகத்தில்

சந்தோஷமடைந்த தேவர்களும், விண் வெளியில் பறவைகள் இனிமையாகவும், பூமியில் மனிதர்கள் நமஸ்கரித்தும் கானம் செய்தனர்.

(வி-உ) தேவியின் ஆவிர்ப்பாவத்தில் மூன்று லோகங்களும் – பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் – உவகையில் கூத்தாடின. தேவலோகம் நிரந்தரமாக பிரகாUUமுள்ளது. தேவர்கள் என்ற பதத்திற்க்கே ஒளி பொருந்தியவர்கள் என்று பொருள். ஸுவர்லோகம் என்பதும் இதுவே. புவர்லோகம் இடைப்பட்ட விண்வெளி. இங்கு பறவைகளும், ஸித்தர்கள், சாரணர்கள் முதலியவரும் ஸஞ்சரிக்கிறார்கள். பூலோகம் மனிதர்களும் விலங்குகளும் நிறைந்தது. आधि என்பது மன நோயையும் व्याधि என்பது உடல் நோயையும் குறிப்பன. தேவியின் தோற்றமே மனநோயை அப்புறப்படுத்திவிட்டது என்றால், உடல் நோய்கள் பறந்தோடிவிட்டன என்று பொருள். தேவீ பாகவதத்தில், சும்பநிசும்ப வதத்திற்காக தேவி புறப்பட்டபோது,

“सा गत्वोपवने तस्थौ अम्बिका कालिकान्विता ।
जगावथ कलं तत्र जगन्मोहनमोहनम् ।
श्रुत्वा तन्मधुरं गानं मोहमीयुः खगा मृगाः ।
मुदं च परमामापुः अमरा गगने स्थिताः ॥” (5:23:9,10)

“அந்த அம்பிகை, காளியுடன் உபவனத்தில் சென்று இருந்தாள். அங்கு உலகங்களை மயக்கும் இனிமையான குரலில் கானம் செய்தாள். அந்த மதுரமான கானத்தைக் கேட்ட

பறவைகளும், மிருகங்களும் மனமயக்கமடைந்தன. தேவர்கள் ஆகாசத்தில் நின்றுகொண்டு மிகுந்த சந்தோஷத்தை அடைந்தனர்."

समाधिधीरा हिमभूतदेहाः युगान्यनेकानि हिमाद्रिकूटे ।
ये योगिनो भारतगोप्तृरूपाः ते तुष्टुवुः तां मुदिता महान्तः ॥ 52

(ப-உ) हिमाद्रिकूटे = இமயமலைச்சிகரங்களில், समाधिधीरा = சமாதியில் முழுதும் ஆழ்ந்துள்ள, हिमभूतदेहाः = தேகமே பனியாக ஆகியுள்ள, ये = எந்த महान्तः= மகான்களான, योगिनो = யோகிகள், अनेकानि = அநேக, युगानि = யுகங்களில், भारतगोप्तृरूपा = பாரதத்தை காப்பாற்றிக் கொண்டிருப்பவர்களாய் இருக்கிறார்களோ, ते = அவர்கள், मुदिता =பெரும் சந்தோஷத்துடன், तां =அந்த தேவியை, तुष्टुवुः = ஸ்துதி செய்தனர்.

(பொ-உ) இமய மலைச் சிகரங்களில் ஸமாதியில் முழுதும் ஆழ்ந்துள்ள, தேகமே பனியாக ஆகியுள்ள, மகான்களான யோகிகள், பாரத தேசத்தை காப்பாற்றும் அரண்களாக இருந்துகொண்டு, பெரும் சந்தோஷத்துடன் அந்த தேவியை துதித்தனர்.

(வி-உ) தொன்று தொட்டு, இமாலயம் பாரத தேசத்திற்கு ஒரு இயற்க்கையான யாராலும் எளிதில் உட்புகமுடியாத அரணாக அமைந்துள்ளது. அந்த இமாலயத்திற்கு ஆத்ம சக்தி ஊட்டுபவர்களாய் யோகிகள் காலவரையின்றி பல யுகங்களாய் ஸமாதியில் ஆழ்ந்துபோய் தேவியிடம் லயித்து விடுகின்றனர். அப்போது பனிசூழ்ந்த இமாலய சிகர பிரதேசங்களில் பல யுகங்கள் தியானத்தில் இருக்கும் அவர்களை பனி மூடிக்கொண்டு, பனியோடு பனியாக, உடல் நினைவு சிறிதும் இல்லாமல் தியானம் சிறிதும் கலையாமல் அந்த மாபெரும் யோகிகள் தவம் செய்கின்றனர். அந்த ஆத்மசக்தி பாரதத்திற்க்கு அரணாக அமைவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இப்போது, தேவியின் ஆயிரம் கோடி சூரியப் பிரகாசத்தால் அவர்களுடைய தியானம் சிறிது சிறிதாக கலையத் தொடங்கியது. அவர்கள் இருக்கும் இமாலயச் சிகரங்களின் மிக அருகிலேயே வட திசையில் தேவியானவள் ஆகாஶத்தில் அவதரித்ததால், அவர்களுடைய தியானம் கலையத்தொடங்கியது. தேவியின் ஸாந்நித்தியத்தை உணர்ந்த யோகிகள், தாங்கவொண்ணா சந்தோஷத்துடன் ஸ்தோத்திரம் செய்கிறனர். கவியின் வர்ணனை மிகவும் அனுபவிக்ககூடியதாக அமைந்துள்ளது.

ज्ञानाकरेभ्यो हि विलोचनेभ्यो हिमानि मन्दं युगसञ्चितानि ।
उत्सार्य देवीं अथ भीमकान्तिं महाप्रतापा बलिनीं अगायन् ॥ 53

(ப-உ) अथ = மேலும், महाप्रतापाः = அதி மேன்மை தாங்கிய, ज्ञानाकरेभ्यः = ஞானச் சுரங்கங்களாகிய, विलोचनेभ्यः =கண்களிலிருந்து, युगसञ्चितानि = பல யுகங்களில் சேர்ந்துள்ள, हिमानि = பனியை, मन्दं हि =மெதுவாக,उत्सार्य= அப்புறப்படுத்தி, भीमकान्तिं = பெரும் காந்தியுடைய, बलिनीं = பலம் பொருந்திய, देवीं = தேவியை, अगायन् = கானம் செய்தனர்.

(பொ-உ) மேலும், அதி மேன்மை தாங்கிய அவர்கள் தங்கள் ஞானச் சுரங்கங்களாகிய கண்களிலிருந்து, பல யுகங்களில் சேர்ந்துள்ள பனியை மெதுவாக அப்புறப்படுத்தி, அதீத காந்தியும், பலமும் பொருந்திய தேவியை (ஸ்தோத்திரமாக) கானம் செய்தனர்.

(வி-உ) துர்கா ஸப்தசதியில், மகிஷாஸுரவதத்திற்காக் தேவி புறப்பட்டபோது

"तुष्टुवुर्मुनयश्चैनां भक्तिनम्रात्ममूर्तयः । " (2:35)

"பக்தியின் பணிவே உருக்கொண்டவர்களான முனிவர்கள் இந்த தேவியைத் துதித்தனர்".

பலயுகங்களாக் கண்மூடி ஸமாதியில் இருக்கும்போது, அகக்கண்ணால் தேவியை இதய கமலத்தில் தரிசனம் செய்து, இருமையற்று, தேவியுடன் ஐக்கியமாகி ஆனந்தசாகரத்தில்

திளைத்துக் கொண்டிருந்தனர். இப்போது வெளியில் தேவியின் ஆவிர்ப்பாவத்தை ஸாந்நித்திய சக்தியால் உணர்ந்து கொண்ட அந்த யோகிகள் வெளிக் கணகளின் மீது படிந்திருக்கும் பனியை அகற்றி, தேவியை வெளியில் தரிசனம் செய்து துதி செய்கின்றனர். அகக் கண்ணாலும், புறக் கண்ணாலும் தேவியையே தரிசனம் செய்த அவர்களுடைய கண்களை ஞானச்சுரங்கங்கள் என்று கவி வர்ணிப்பதில் ஆச்சரியமில்லை.

तुभ्यं नमो देवि विशालशक्त्यै नमामि भीमां बलिनीं कृपालुम् ।
त्वमेव वै तारयसीह जातीः ऊर्जस्वलायै नम आदिदेव्यै ॥ 54

(ப-உ) देवि =தேவியே, विशालशक्त्यै = பெரும் சக்தியாகிய, तुभ्यं नमः = உனக்கு நமஸ்காரம், भीमां= பயங்கரமானவளை,बलिनीं=பலம் பொருந்திய வளை, कृपालुं = கிருபை செய்பவளை, नमामि =நமஸ்கரிக்கிறேன், त्वम् एव वै =நீ தானே, इह = இங்கே, जातीः =குடிமக்களை, तारयसि = காப்பாற்றுகிறாய், ऊर्जस्वलायै = மிகவும் சக்தி வாய்ந்தவளான, आदिदेव्यै =ஆதிதேவிக்கு, नमः = நமஸ்காரம்.

(பொ-உ) (யோகிகளின் துதி) தேவியே ! விசால சக்தியாகிய உனக்கு நமஸ்காரம். பயங்கரமானவளை, பலம் பொருந்தியவளை,

க்ருபை செய்பவளை நமஸ்கரிக்கிறேன். நீ தானே இங்கு குடிமக்களைக் காபாற்றுகிறாய். மிகவும் சக்தி வாய்ந்தவளான ஆதிதேவிக்கு நமஸ்காரம்.

(வி-உ) நாம் யாரிடம் சரணாகதி செய்கிறோமோ, அவருக்கு சக்தியும், பலமும் இருப்பது எவ்வளவு அவசியமோ, அதைவிட அவசியம் கிருபை செய்யும் பாங்கு. ஜனங்களைக் காப்பாற்றுவதில் தேவிக்கு இணை யாருமில்லை.

துர்காஸப்தசதியில், மகிஷாஸுர வதத்திற்குப் பின்னர், தேவர்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்தனர்.

"दुर्गे स्मृता हरसि भीतिं अशेषजन्तोः
स्वस्तैः स्मृता मतिमतीव शुभां ददासि ।
दारिद्र्यदुःख भयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता ॥ " (4:17)

"தாண்டமுடியாத கஷ்டத்தில் நினைக்கப்பட்டல், நீ எல்லா ஜீவர்களுடைய பயத்தையும் போக்குகிறாய். இன்பத்தில் ஸ்மரிக்கப்பட்டால், நலன்மிக்க மதியை அளிக்கிறாய். ஏழ்மை, துக்கம், பயம் எல்லவற்றையும் போக்குபவளே, எல்லோருக்கும் உபகாரம் செய்ய எப்போதும் உருகும்நெஞ்சுடையவர் உன்னைத் தவிர யார் உளர்".

कस्ते बलं वर्णयितुं समर्थो देवि प्रचण्डे करपल्लवेन ।
एकेन हि भ्रामयसे रुणत्सि विश्वं सतारार्कं अनन्तवीर्ये ॥ 55

(ப-உ) प्रचण्डे देवि = மிகுந்த பலம் பொருந்திய தேவியே, कः = யார், ते बलं = உன் பலத்தை, वर्णयितुं = வர்ணிப்பதற்கு, समर्थः = திறமையுள்ளவர். अनन्तवीर्ये =எல்லையற்ற வீர்யம் கொண்டவளே ! एकेन = ஒரே, करपल्लवेन हि = தளிர் போன்ற கரத்தினாலேயே, सतारार्कं = நக்ஷத்திரங்களும், சூரியனும் சேர்ந்த, विश्वं = உலகத்தை, भ्रामयसे =சுழற்றுகிறாய், रुणत्सि = தாங்கவும் செய்கிறாய் (நிலை நிறுத்தவும் செய்கிறாய்).

(பொ-உ) மிக்க பலம் பொருந்திய தேவியெ! யாரே உன் பலத்தை வர்ணிப்பதற்குத் திறமையுள்ளவர். எல்லையற்ற வீரியம் கொண்டவளே! தளிர் போன்ற் ஒரே கரத்தினாலேயே சூரியன், மற்றும் நக்ஷத்திரங்களைக் கொண்ட உலகம் முழுவதையும் சுழற்றுகிறாய். தாங்கவும் செய்கிறாய்.

(வி-உ) தேவீ பாகவதத்தில், மணித்வீபத்தில் தேவியைத் தரிசனம் செய்த மகாவிஷ்ணு ஸ்தோத்திரம் செய்கிறார்.
"नाहं भवो न च विरिंचि विवेद मातः कोऽन्यो हि वेत्ति चरितं तव दुर्विभाव्यम्।"(3:4:35)

“உன்னுடைய, யாரும் அறியவொண்ணா சரித்திரத்தை நானோ, சிவனோ, பிரம்மாவோ அறியமாட்டோம். வேறு யார் அறியக் கூடும்.” பகவத் கீதையிலும் பகவான் சொல்கிறார்.

“ ईश्वर: सर्वभूतानं हृद्देशे अर्जुन तिष्ठति ।
भ्रामयन् सर्वभूतानि यन्त्रारूढानि मायया ॥" (18:61)

“ஈச்வரன் எல்லா ஜீவன்களின் ஹ்ருதயப் பிரதேசத்திலும் இருக்கிறார். அர்ஜுனா, அவர் எல்லா உயிர்களையும் எந்திரத்தில் ஏற்றப்பட்டாற்போல, மாயையினால் சுழற்றி இயக்குகிறார்.”

आजौ यदा नृत्यासि चण्डि घोरे श्रृगालघुष्टे दधती त्रिशूलम् ।
स्पर्शेन कम्पन्त इवायुधस्य महान्ति तारानियुतानि नाके ॥ 56

(ப-உ) घोरे = பயங்கரமான, चण्डि = சண்டிகையே, यदा = எப்போது, श्रृगालघुष्टे = நரிகள் ஊளையிடும், आजौ = யுத்த பூமியில், त्रिशूलं = திரிசூலத்தை, दधती = தரித்துக்கொண்டு, नृत्यसि = நடனமாடுகிறாயோ, आयुधस्य = ஆயுதத்தின், स्पर्शेन = ஸ்பரிசத்தினால், नाके = ஆகாUUத்தில், महान्ति = ஏராளமான, तारानियुतानि = கோடிக்கணக்கான நக்ஷத்திரங்கள், कम्पन्त इव = நடுங்குவனபோலும்.

(பொ-உ) பயங்கரமான சண்டிகையே ! நீ எப்போது நரிகள் ஊளையிடும் யுத்தபூமியில் திரிசூலத்தை தரித்துக் கொண்டு நடனமாடுகிறாயோ, அப்போது உன் ஆயுத ஸ்பரிசத்தினால் ஆகாசத்தில் ஏராளமான கோடிக் கணக்கான நக்ஷத்திரங்கள் நடுங்குவனபோலும்

(வி-உ) துர்காஸப்தசதியில் ரக்தபீஜவத கட்டத்தில்:

“नारसिंही नृसिंहस्य बिभ्रती सदृशं वपुः।

प्राप्ता तत्र सटाक्षेप क्षिप्त नक्षत्रसंहतिः॥" (८.२०)

’நரசிம்மத்திற்கொப்பான உடல் தாங்கிக் கொண்டு, பிடரியின் சிலிர்ப்பால் நக்ஷத்திரக் கூட்டங்களை உலுக்கிக்கொண்டு அங்கு நாரஸிம்ஹி வந்தாள்."

## दयार्द्रचित्ता रुदितेन पुंसां हंसि प्रजापीडकमस्तकेषु ।
## यो मृत्युरत्ता भुवनस्य रौद्रः स किङ्करस्ते वसति त्रिशूले ॥ 57

(ப-உ) पुंसां = மனிதர்களுடைய, रुदितेन = அழுகைக்குரலால், दयार्द्रचित्ता = தயையினால் நனைந்த சித்தமுடைய நீ, प्रजापीडकमस्तकेषु = ப்ரஜைகளை துன்புறுத்துவோரின் சிரங்களில், हंसि = தாக்குகிறாய், भुवनस्य = உலகை, अत्ता = சாப்பிடும், यः = எந்த, रौद्रः = பயங்கரமான, मृत्युः = யமன், (உள்ளானோ) सः=அவன், किङ्करः =

வேலைக்கரனாக, ते = உன்னுடைய, त्रिशूले = திரிசூலத்தில், वसति = வசிக்கிறான்.

(பொ-உ) தேவீ பாகவதத்தில், யமதர்மராஜன் ஸாவித்திரியிடம் தேவியின் மாகாத்மியம் பற்றிப் பேசுகையில் இவ்வாறு சொல்கிறார்.

"यदाज्ञया वर्षतीन्द्रो मृत्युश्चरति जन्तुषु ।

यदाज्ञया दहेद्वह्निः जलमेवं सुशीतलम् ॥" (9:38:44)

"எந்த தேவியின் ஆக்ஞயால் இந்திரன் மழை பொழிகிறானோ, யமன் உயிர்களில் நடமாடுகிறானோ; எந்த தேவியின் ஆக்ஞையால் அக்கினி எரிகிறதோ, ஜலமானது குளிர்ச்சியாக இருக்கிறதோ."

## शक्तिः परा कोटिषु मानवानां मन्युश्रितानां भवसि प्रबुद्धा ।
## आर्यान् विपन्नान् अवतीर्य पासि युगे युगे युध्यस आर्यमातः ॥ 58

(ப-உ) परा शक्तिः = பராசக்தியான நீ, मन्युश्रितानां = எளியவர்களான मानवानां = மனிதர்களுடைய कोटिषु = புத்திகளில் प्रबुद्धा = விழிப்புடையவளாக भवसि = ஆகிறாய். अवतीर्य = அவதரித்து, विपन्नान् = விபத்திலிருப்பவர்களான, आर्यान् = நன்மக்களை, पासि = காக்கிறாய். युगे युगे = ஒவ்வொரு யுகத்திலும், युध्यस = யுத்தம் செய்கிறாய். आर्यमातः = நன்மக்களின் தாயே.

(பொ-உ) பராசக்தியான நீ எளிய மனிதர்களின் உச்ச புத்தியில் விழிப்புடையவளாக ஆகிறாய். அவதரித்து விபத்திலிருக்கும் நன்மக்களைக் காக்கிறாய். நன்மக்களின் தாயே! ஒவ்வொரு யுகத்திலும் யுத்தம் செய்கிறாய்.

(வி-உ) பக்தர்களின் இதயத்தில் தேவி தரிசனம் தருகிறாள். துன்பப்பட்டு அழைப்பவர்களைக் காப்பாற்ற அவதாரமே எடுக்கிறாள் தேவி. துர்காஸப்தசதியில் தேவியே சொல்கிறாள்:

"इत्थं यदा यदा बाधा दानवोत्था भविष्यति ।
तदा तदावतीर्याहं करिष्याम्यरिसंक्षयम् ॥" (11:55)

"எப்பொழுதெல்லாம் இவ்வாறு அசுரர்களின் எழுச்சியால் துன்பம் ஏற்படுமோ, அப்பொதெல்லாம் நான் அவதரித்து சத்ருக்களை நாசம் செய்வேன்."

सद्योऽपि पश्यामि गिरावुदीच्यां देदीप्यमानं धवलं वपुस्ते ।
त्वं भ्राजसे ज्योतिरुदेषि सौम्ये प्रकाशयन्ती भुवनानि कान्त्या ॥ 59

(ப-உ) सद्योऽपि = இப்போதும், उदीच्यां = வடதிசையில், गिरौ = மலைமேல், ते =உன், देदीप्यमानं = வெகுவாக ஒளிபொருந்திய,

धवलं= வெண்மையான, वपुः = சரீரத்தை, पश्यामि = காண்கிறேன், सौम्ये = மனதிற்கினியவளே, ज्योतिः त्वं = ஜோதிவடிவான நீ, कान्त्या = காந்தியினால், भुवनानि = உலகங்களையெல்லாம், प्रकाशयन्ती=பிரகாசப்படுத்திக்கொண்டு, उदेषि = உதயமாகிறாய், भ्राजसे = ஒளிர்கிறாய்.

(பொ-உ) இப்போதும் வடதிசையில் மலைமேல் உன் ஒளிவெள்ளமான வெண் சரீரத்தைக் காண்கிறேன். மனதிற்கினியவளே ! ஜோதி வடிவமான நீ உன் காந்தியினால் உலகங்களையெல்லாம் பிரகாசப்படுத்திக் கொண்டு உதயமாகிறாய். வெகுவாக ஒளிர்கிறாய்.

(வி-உ) தேவீ பாகவதத்தில், மணித்வீபத்தில் சிந்தாமணி க்ருகத்தில், பிரம்மா, விஷ்ணு, சிவன் மூவரும் தேவியை தர்சனம் செய்கின்றனர். தேவியின் காட்சி இவ்வாறிருந்தது.

"सहस्रनयना रामा सहस्रकरसंयुता । सहस्रवदना रम्या भाति दूरादसंशयम् ॥" (3:3:48)

“தேவி ! ஆயிரம் கண்களுடனும் ஆயிரம் கைகளுடனும், ஆயிரம் முகங்களுடனும் மனதிற்கினியவளாய், மிக அழகானவளாய், ஸந்தேகத்திற்கிடமில்லாமல் தூரத்திலிருந்தே பிரகாசிக்கிறாள்."

धेनौ समारूढमनोज्ञकान्ती रणोन्मदायां चरसीयमार्या ।
शैला इवोत्तुङ्गशिखाः समूलाः पतन्ति संघाः परितोऽसुराणाम् ॥ 60

(ப-உ) रणोन्मदायां = யுத்தத்தில் மதங்கொண்ட, धेनौ = பசுமாட்டின்மீது, समारूढ = ஏறிய, मनोज्ञकान्ती = மனதைக்கவரும் காந்தியுடைய, इयं आर्या = இந்த மேன்மைமிகு தேவி चरसि = ஸஞ்சரிக்கிறாய், परितः = எல்லாபக்கங்களிலும், असुराणां = அசுரர்களுடைய, संघाः = கூட்டங்கள், उत्तुंगशिखाः = உயர்ந்தோங்கிய சிகரங்களைக் கொண்ட, शैला इव = மலைகளைப் போல, समूलाः = அடியோடு, पतन्ति = விழுகின்றனர்.

(பொ-உ) யுத்தத்தில் மதங்கொண்ட பசுமாட்டின் மீது ஏறியுள்ள, மனதைக் கவரும் காந்திகொண்ட, இந்த மேன்மை மிகு தேவியாகிய நீ ஸஞ்சரிக்கிறாய். எல்லா பக்கங்களிலும் அசுரக் கூட்டங்கள் உயர்ந்தோங்கிய சிகரங்களைக் கொண்ட மலைகளைப் போல, அடியோடு கீழே விழுகின்றனர்.

(வி-உ) புராணங்களில் தேவியின் வாகனம் சிங்கம். இங்கு கவிஞர் தேவியை பசுமாட்டின் மீது ஏறியுள்ளதாக வர்ணிக்கிறார்.

காரணம், பாரதத்தில் பசுமாடுகள் நிறைந்திருந்து, ஜனங்களின் ஆரோக்கியம், செல்வச் செழிப்பு எல்லாவற்றிற்கும், முக்கியமாக பூஜைக்கும், ஹோமங்களுக்கும் ஆதாரமாக இருந்து வருகின்றன. நாட்டின் செல்வச் செழிப்பை ஆங்கிலேயர்கள் சுரண்டிவரும்போது, தேவி பசு மாட்டின்மீது ஏறிவருவது திரும்பவும் செல்வம் பாரதீயர்களையே வந்தடையும் என்பதை சூசகமாகக் காட்டவே.

தேவீபாகவதத்தில், மகிஷாஸுர ஸைன்யவதத்தை வர்ணிக்கும்போது, இவ்வாறு சொல்லப்படுகிறது.

"रणभूमौ तदा जाता रुधिरौघवहा नदी ।
पतितानि तदा तीरे शिरांसि प्रबभुस्तदा ॥
यथा संतरणार्थाय यमकिंकरनायकैः ।
तुंबीफलानि नीतानि नवशिक्षापरैर्मुदा ॥ " (5:13:32,33)

"யுத்த பூமியில் அப்போது ரத்த வெள்ளமான நதி பெருகிற்று. கரையில் (அசுரப் படையினர்) சிரங்கள் விழுந்திருந்தன. ரத்த நதியில் அந்த சிரங்கள் இழுத்துக் கொண்டு போகப்பட்டது எப்படியிருந்தது என்றால், யமகிங்கரத் தலைவர்கள் புதிதாக வேலைக்கு நியமனமானவர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக சுரைக்காய்களை(வைதரணி)நதியில் இழுத்துக் காண்பிப்பதைப் போல."

देवप्रिया भारतभूमिरार्या धेनुस्वरूपेण विहन्ति शत्रून् ॥61

(ப-உ) शुभ्रवर्णा = வெண்ணிறமான, असितवृत्तशृङ्गा = கரிய உருவம் கொண்ட, सा = அந்த பசு, हिमस्य राशिः इव = பனிக்கோளம் போல, तूर्णं = வேகமாக, चलति = செல்கிறது, देवप्रिया = தேவர்களுக்கு பிரியமான, आर्या = பெருமை மிக்க, भरतभूमिः = பாரததேசம், धेनुस्वरूपेण = பசுவின் வடிவத்துடன், शत्रून् =எதிரிகளை, विहन्ति = மாய்க்கிறது.

(பொ-உ) வெண்ணிறமான, கரும் உருண்டைக் கொம்புகளுடைய, அந்தப் பசு பனிக்கோளம் போல வேகமாகச் செல்கிறது. தேவர்களுக்குப் பிரியமான பெருமை மிக்க பாரத தேசம், பசுவின் வடிவத்துடன் எதிரிகளை மாய்க்கிறது.

(வி-உ) அம்பிகையின் வாகனமான பசுவானது, பாரததேசமேயாகும். பூமிதேவியைப் பசுவாக வர்ணிப்பது புராணங்களில் வழக்கமாக உள்ளது. அசுரர்களின் ஆதிக்கம் ஓங்கி பூமிதேவி கஷ்டப்படும்போது, பசுமாட்டின் வடிவம் தாங்கி பிரம்மாவிடமும், விஷ்ணுவிடமும் சென்று முறையிட்டுப் பிரார்த்தித்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிருஷ்ணாவதாரத்திற்கு முன்னரும் இதுபோலவே நடந்தது.

தேவியின் வாகனமான சிங்கம் யுத்தத்தில் அசுரர்களைப் பெருமளவில் மாய்ப்பது வழக்கமாயிருந்தது. தூம்ரலோசன வதகட்டத்தில், துர்காஸப்தசதியில், இது வர்ணிக்கப்படுகிறது.

"क्षणेन तद्बलं सर्वं क्षयं नीतं महात्मना ।

तेन केसरिणा देव्या वाहनेनातिकोपिना ॥ " (9:19)

"ஒரு கணத்தில் அந்த சேனைமுழுவதும், கடுங்கோபங்கொண்ட தேவியின் வாகனமும் மகாத்மாவுமான அந்த சிங்கத்தால் நாசமாக்கப்பட்டது."

## व्यूहास्त्वकस्मात् जितदैवतानां भयेन ते पाण्डुरकान्तिवक्त्राः ।
## वारिप्रपाता इव पर्वतेभ्यो धावन्त्यधो वेगपराः सशब्दाः ॥ 62

(ப-உ) ते = அந்த जितदैवतानां = தேவர்களை ஜயித்திருந்த அசுரர்களின், व्यूहाः = சேனைகளோ, भयेन = பயத்தினால், पाण्डुरकान्तिवक्त्राः = (ரத்த சோகை போன்று) வெளுத்துப்போன முகமுள்ளவர்களாய், पर्वतेभ्यः = மலையிலிருந்து, अकस्मात् =திடீரென, वेगपराः = வேகம் மிகுந்து, सशब्दाः = பெரும் சப்தத்துடன் விழும், वारिप्रपाता इव = நீர்வீழ்ச்சிகள் போல, अधः = கீழே, धावन्ति=ஓடுகிறார்கள்.

(பொ-உ) தேவர்களை ஜயித்திருந்த அந்த அசுரச்சேனைகளோ, பயத்தினால் ரத்தமிழந்து முகம் வெளுத்துப்போய், மலைகளிலிருந்து திடீரென வேகம் மிகுந்து பேரரவத்துடன் விழும் நீர்வீழ்ச்சிகள்போல், கீழே ஓடுகிறர்கள்.

(வி-உ) கவிஞரின் கற்பனை கரைபுரண்டோடுவதைப் பார்க்கிறோம். தேவியும், வாகனமான பசுவும் அசுர சேனைகளைச் சின்னாபின்னமாக்குகிறார்கள்.

श्रृणोमि ते पञ्चनदेषु भीमे स्वरानुदारान् जयनादमुग्रम् ।
निहन्यमानस्य रवं बलस्य भयङ्करे तारतरं श्रृणोमि ॥ 63

(ப-உ) भीमे = பயங்கரமானவளே, पञ्चनदेषु = பஞ்சாப் பிரதேசத்தில், ते = உன்னுடைய, उदारान् = கவர்ச்சியான, स्वरान् = ஸ்வரங்களையும், उग्रं = உக்கிரமான, जयनादं = ஜயசப்தத்தையும், श्रृणोमि = கேட்கிறேன், भयङ्करे = பயங்கரமானவளே, निहन्यमानस्य = கடுமையாகத் தாக்குவோனுடைய, बलस्य = பலவானுடைய, तारतरं = மிக உரத்த, रवं = கூக்குரலை, श्रृणोमि =கேட்கிறேன்.

(பொ-உ) பயங்கர சக்திவாய்ந்தவளே! பஞ்சாப் பிரதேசத்தில் உன் இனிமையான ஸ்வரங்களையும், உக்கிரமான ஜயசப்தத்தையும் கேட்கிறேன். பயங்கரமானவளே ! கடுமையாகத் தாக்கும் பலவானாகிய சேனையின் மிக உரத்த கூக்குரலைக் கேட்கிறேன்.

कृष्णस्य सैषा यमुना स्रवन्ती रक्तेन नीलं विससर्ज वर्णम् ।
बङ्गेष्वसृक् कर्दममेव पश्य दिग्दक्षिणा भाति सुलोहितेव ॥64

(ப-உ) कृष्णस्य =கிருஷ்ணனுடைய, सा एषा यमुना = அந்த (பிரியமான) யமுனை நதி, स्रवन्ती = பெருகிக்கொண்டு, रक्तेन = ரத்தத்தினால் नीलं वर्णं = (இயற்கையான) நீல நிறத்தை, विससर्ज = விட்டது. बङ्गेषु = வங்காளத்தில், असृक् = ரத்தம், कर्दमं एव = சேற்றையே,
पश्य = பார், दक्षिणा दिक् = தென்திசை, सुलोहित इव = ரத்தம்போல், भाति = பிரகாசிக்கிறது.

(பொ-உ) கிருஷ்ணனுக்குப் பிரியமான அந்த யமுனாநதி பெருகிக் கொண்டு தன் இயற்கை நீலநிறத்தை விட்டு ரத்த வண்ணமாக மாறியது. வங்காளத்தில் ரத்தம் சேர்ந்த சேற்றைப்பார். தென்திசையோ ரத்தம் போல பிரகாசிக்கிறது.

(வி-உ) தேவியின் யுத்தத்தில் எல்லா திசைகளிலும் ரத்தமே ரத்தம். வடக்கே யமுனை நதியிலிருந்து, கிழக்கே வங்கம் வரை, தென்திசை முழுதும் ரத்த வண்ணமே எங்கும் வியாபித்து நிற்கிறது.

स्पृष्टा त्रिशूलेन विहाय सीमाः सुलोहिता भान्ति दिशः समन्तात् ।
अभ्राणि ते रक्तमयानि भीमे विभान्ति युद्धेन सुदारुणेन ॥ 65

(ப-உ) विहायसि = ஆகாசத்தில், त्रिशूलेन = திருசூலத்தினால், स्पृष्टा = ஸ்பரிசிக்கப்பட்ட, इमाः दिशः = இந்த திசைகள், समन्तात्= எல்லா பக்கங்களிலும், सुलोहिताः = நல்ல சிவப்பு நிறத்துடன், भान्ति = பிரகாசிக்கின்றன, ते = உன், सुदारुणेन = அதிபயங்கரமான, युद्धेन = யுத்தத்தினால், अभ्राणि = மேகங்கள், रक्तमयानि = ரத்தமயமாக, विभान्ति = பிரகாசிக்கன்றன, भीमे = பயங்கரமானவளே.

(பொ-உ) ஆகாயத்தில் திரிசூலத்தினால் ஸ்பரிசிக்கப்பட்ட இந்த திசைகள்எல்லா பக்கங்களிலும் நல்ல சிவப்பு நிறத்துடன் பிரகாசிக்கின்றன. உன் அதி பயங்கரமான யுத்தத்தினால் மேகங்கள் ரத்தமயமாகப் பிரகாசிக்கின்றன. பயங்கரமான தேவியே !

(வி-உ) 64-ம் ச்லோகத்தில் பூமியின் எல்லா புறங்களிலும் ரத்தம் பரவி நின்றதைப் பார்த்தோம். இப்போது 65-ம் ச்லோகத்தில் விண்வெளியின் எல்லா திசைகளிலும், மேலே மேகங்களிலும் ரத்தமே தென்படுவதைப் பார்க்கிறோம்.

सिन्धोस्तटेषु उपलकर्कशेषु देवीं अपश्यं युधि शेषितारीन् ।
निःशेषयन्तीं अदयां सकोपां शिवां त्रिशूलेन शिवस्य शत्रून् ॥ 66

(ப-உ) युधि =யுத்தத்தில், शेषित अरीन् =எஞ்சியிருந்த எதிரிகளை, शिवस्य = சிவனுடைய, शत्रून् = சத்துருக்களை, त्रिशूलेन = திரிசூலத்தினால், निःशेषयन्तीं = பாக்கியில்லாமல் வதைக்கும், अदयां = தயையில்லாத, सकोपां = கோபமுள்ள, देवीं = தேவியை, शिवां = மங்களாம்பிகையை, सिन्धोः = சாகரத்தின், उपलकर्कशेषु = கரடுமுரடான பாறைகள் நிறைந்த, तटेषु = கரைகளில், अपश्यम् = பார்த்தேன்.

(பொ-உ) யுத்தத்தில் எஞ்சியிருந்த சிவ சத்துருக்களைத் திரிசூலத்தினால் பாக்கியிலலாமல் வதைக்கும், தயை சிறிதும் இல்லாத, கோபமுள்ள தேவியை, மங்களவடிவினளை, சமுத்திரத்தின் கரடு முரடான பாறைகள் நிறைந்த கரைகளில் பார்த்தேன்.

खुरैः सुनिष्पिष्टमिदं सुरभ्या घोरं किमेवापि सुकृष्णवर्णम् ।
मांसस्य पिण्डं ह्यवनौ निरीक्षे शेषोऽयमस्त्येव तवाहितानाम् ॥ 67

(ப-உ) सुरभ्याः = சுரபி என்ற காமதேனுவின், खुरैः = குளம்புகளினால், सुनिष्पिष्टं = பொடிப்பொடியாக்கப்பட்ட, घोरं = பயங்கரமான, सुकृष्णवर्णं = நல்ல கறுப்பு நிறமாகவுள்ள, इदं अपि = இதுவும், किं एव = என்னதானோ. मांसस्य पिण्डं हि = மாம்சபிண்டத்தையோ, अवनौ = பூமியில், निरीक्षे = கண்டேன், अयं = இது, तव = உன், अहितानां = சத்துருக்களின், शेषः एव = பாக்கியாகவே, अस्ति = உள்ளது.

(பொ-உ) சுரபி என்கிற (உன் வாகனமாகிய) காமதேனுவின் குளம்புகளினால் நன்கு பொடியாக்கப்பட்ட பயங்கரமான நல்ல கருப்பு நிறமுடைய இந்த பொருள் என்னதானோ. மாமிச பிண்டத்தையும் பூமியில் கண்டேன். இது உன் சத்துருக்களின் மீதமாகவே உள்ளது.

(வி-உ) சுரபி என்கிற காமதேனு சத்துருக்களின் எலும்புகளை பொடிப் பொடியாக்கி பூமியில் சிதறி, அவர்களின் மாமிசத்தை பிண்டங்களாகவே பரப்பி உள்ளது.

துர்கா ஸப்தசதியில், தூம்ரலோசனவத கட்டத்தில்,

"कांश्चित् करप्रहारेण दैत्यानास्येन चापरान् ।
आक्रम्य चाधरेणान्यान् स जघान महासुरान् ॥" (9:16)

“சில அசுரர்களை முன்னங்காலால் அறைந்தும், சிலரை வாயால் கவ்வியும், பிறரை பின் கால்களால் மிதித்தும் வலிமிக்க அசுரர்களைக் கொன்று தீர்த்தது (சிங்கம்). ”

भग्नानि तस्मिन् निचये विरूपे प्रनिःसरन्तीव शिरांसि कानि ।
पादाः कराश्चापि हि तत्र तत्र क्रूरासि रुद्राणि करालकृत्या ॥ 68

(ப-உ) तस्मिन् = அந்த, विरूपे = விகாரமான, निचये = கூட்டத்தில், कानि = சில, भग्नानि = தகர்ந்த, शिरांसि = சிரங்கள், प्रनिःसरन्ती इव = வெளியில் வருபவை போல, अपि च = மேலும், पादाः = பாதங்களும், कराः हि = கரங்களுங்கூட, तत्र तत्र= ஆங்காங்கு, (காணப்படுகின்றன). रुद्राणि = ருத்திராணியே, करालकृत्या = பயங்கர காரியங்களைச் செய்யும், (நீ) क्रूरा असि = கொடுமையானவளாக இருக்கிறாய்.

(பொ-உ) அந்த விகாரமான கூட்டத்தில் சில உடைந்த சிரங்கள் வெளியில் தென்படுகின்றன. மேலும் பாதங்களும் கரங்களும் ஆங்காங்கு காணப்படுகின்றன. ருத்திராணியே! பயங்கர காரியங்களைச் செய்யும் நீ கொடுமையானவள்.

(வி-உ) யுத்தபூமி முழுவதும் அசுரர்களின் தகர்த்தெறியப்பட்ட உடல் பாகங்கள் - சிரங்கள், பாதங்கள், கரங்கள் என்று கொட்டிக் கிடக்கின்றன.

क्रूरासि रुद्राणि अथवा जघन्ये क्रूरे प्रजापीडनरूढगर्वे ।
दयेव भूतेयमलं यदार्यं स्वर्गप्रदं मृत्युमवाप युद्धे ॥ 69

(ப-உ) रुद्राणि = ருத்திராணியே! क्रूरा असि = நீ கொடூரமானவள். अथवा = அல்லது जघन्ये = நீசமான क्रूरे = கொடூரமான प्रजापीडनरूढगर्वे = பிரஜைகளைத் துன்புறுத்துவதில் கர்வங் கொண்ட इयं अलं = இந்த விஷத்தைநோக்கி दया इव भूता = தயை தோன்றியதே. युद्धे = யுத்தத்தில் आर्यं = பெருமைமிக்க स्वर्गप्रदं = சொர்கத்தைப் பயக்கும் मृत्युं = மரணத்தை अवाप = அடைந்தான்.

(பொ-உ) ருத்திராணியே! நீ கொடூரமானவள். அல்லது நீசமான, கொடூரமான, பிரஜைகளைத் துன்புறுத்துவதில் கர்வங் கொண்ட இந்த விஷத்தினிடம் தயை தோன்றியதே. எதனால் அவன் யுத்தத்தில் பெருமைமிக்க, சொர்கத்தைப் பயக்கும் மரணத்தை அடைந்தான்.

(வி-உ) துர்கா ஸப்தசதியில், மகஷாஸுர வதத்திற்குப் பின்னர், தேவர்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்கின்றனர். அங்கு இதே கருத்து
கூறப்படுகிறது.

“दृष्ट्वैव किं न भवती प्रकरोति भस्म
सर्वासुरानरिषु यत् प्रहिणोषि शस्त्रम् ।
लोकान् प्रयान्तु रिपवोऽपि हि शस्त्रपूता
इत्थं मतिर्भवति तेष्वपि तेऽतिसाध्वी ॥ ” (4:19)

"அசுரர்களையெல்லாம் பார்த்த மாத்திரத்திலேயே நீ பஸ்மமாக்கிவிட முடியாதா? எனினும், எதிரிகள்மேல் ஆயுதங்களைப் பிரயோகிப்பதால், இவர்கள், சத்துருக்களாயினும் (எனது) ஆயுதங்களால் புனிதமாகி நல்ல உலகங்களை அடையட்டும் என்பதே அவர்களிடமும் மிகுந்த கருணை வாய்ந்த உனது எண்ணமாயிருக்க வேண்டும்."

एको गतासोरपि रुद्रशत्रोः धत्ते करः पावकगर्भमस्त्रम् ।
प्लुष्टश्च चीर्णश्च तथापि दग्धान् असून् भवान्यां क्षिपतीव दैत्यः॥70

(ப-உ) गतासोः अपि = பிரணன் போன நிலையிலும், रुद्रशत्रोः = சிவசத்துருவின், एकः करः = ஒருகரம், पावकगर्भं = அக்னியை வீசும்,

अस्त्रं= அஸ்திரத்தை, धत्ते = தாங்கிக்கொண்டிருக்கிறது, प्लुष्टश्च = எரிந்திருந்தும், चीर्णश्च = அங்கங்கள் சின்னாபின்னமாகியிருந்தும்,दैत्यः = அசுரன், तथापि = அப்போதுகூட, भवान्यां = பவானி மீது, दग्धान् = எரிந்த, असून् = பிராணனை, क्षिपति इव = தூக்கி எறிகிறான் போலும்.

(பொ-உ) பிராணன் போகும் நிலையிலும், சிவசத்துருவின் ஒரு கரம் அக்கினியை வீசும் அஸ்திரத்தைத் தாங்கியிருக்கிறது. அந்த அசுரன் உடல் எரிந்திருந்தும், அங்கங்கள் சின்னாபின்னமாகியிருந்தும் பவானிமீது எரிந்த பிராணனைத் தூக்கியெறிகிறான் போலும்.

(வி-உ) உடல் சிதறுண்ட நிலையிலும், தேவிமீது தன் கையிலுள்ள அக்கினிகக்கும் அஸ்திரத்தை தூக்கி எறிகிறான் ஒரு அசுரன். அது எரியும் பிராணனையே தூக்கி எறிகிறாற்போலிருந்தது.

துர்காஸப்தசதியில், மஹிஷாஸுர ஸைன்யவத கட்டத்தில்,

“कबन्धाश्छिन्नशिरसः खड्गशक्त्यृष्टिपाणयः ।
तिष्ठ तिष्ठेति भाषन्तो देवीमन्ये महासुराः ॥ (2;64)

“சில மகாசுரர்கள் கத்தியும், ஈட்டியும் கையிலேந்திக் கொண்டு தேவியை நோக்கி, “நில், நில்” என்று கூவினர்.”

स्रोतांसि पश्यामि महायुधास्यात् उद्गीर्यमाणानि हुताशनस्य ।
धृष्टोऽप्यसौ नालभते तु चण्डीं तिष्ठन् प्रभामण्डलमूर्तिमग्रे ॥ 71

(ப-உ) महायुधास्यात् = (அந்த அசுரன்விட்ட) பெரிய ஆயுதத்தின் வாயிலிருந்து, उद्गीर्यमाणानि = வெளிவந்த, हुताशनस्य = அக்கினியின், स्रोतांसि= தாரைகளை, पश्यामि = பார்க்கிறேன். धृष्टः = தைரியமாக, असौ = இவன், अग्रे = எதிரில், तिष्ठन् अपि = உட்கார்ந்திருந்துங்கூட, प्रभामण्डलमूर्तिं = ஜோதி மண்டல வடிவாக உள்ள, चण्डीं = சண்டீதேவியை, न आलभते = தொட முடியவில்லை.

(பொ-உ) (அவ்வசுரன்) விட்ட பெரிய (அக்கினிகக்கும்) ஆயுதத்தின் வாயிலிருந்து வெளிப்போந்த அக்கினிக் கொழுந்துகளைப் பார்க்கிறேன். தைரியமிக்க இவ்வசுரன் எதிரில் உட்கார்ந்திருந்துங்கூட, ஜோதி மண்டல வடிவாக உள்ள சண்டி தேவியை ஸ்பரிசிக்க முடியவில்லை.

(வி-உ) முந்தைய ச்லோகத்தில் அக்கினி அஸ்திரத்தை அசுரன் விடும்போது, பிராணனையே விட்டான்போல் தொன்றிற்று, என்றார் கவிஞர். அந்த அக்கினி அஸ்திரம், ஜோதி மண்டலத்தால் சூழப்பட்டு ஜோதி ஸ்வரூபமாக உள்ள தேவியின் அருகில் போக

சக்தியில்லாமல் பயனற்றுப் போய்விட்டது. அதாவது, அசுரனின் பிராணன் கூட தேவியை ஸ்பரிசிக்க முடியவில்லை.

“ततोऽसावाजघानाथ गदया तत्र चण्डिकाम् ।

न चास्या वेदनां चक्रे गदापातोऽल्पिकामपि ॥ ” (8:57-58)

“அப்போது அங்கே அவன் (ரக்தபீஜன்) சண்டிகையைக் கதையால் அடித்தான். அந்த கதையின் தாக்குதல் அவளுக்கு ஒரு சிறிதும் வேதனையளிக்கவில்லை. “

## प्रक्षिप्तखड्गस्तु विषाणमध्ये विष्टम्भयति अन्तिमचेष्टितं तत् । समाप्तमेतत् तव तर्कयामि महाव्रतं देवि विशालवीर्ये ॥ 72

(ப-உ) विषाणमध्ये = (அசுரனின்) கொம்புகளுக்கு மத்தியில், प्रक्षिप्तखड्गः तु तत्= வாளை சொருகிய அந்த காரியம், अन्तिमचेष्टितं = (அசுரனின்) இறுதி முயற்சசியை, विष्टम्भयति =(பலனற்று) நிறுத்தி விடுகிறது, तव एतत् = உன் இந்த, महाव्रतं= பெரிய விரதம், समाप्तं = முடிந்துவிட்டது, तर्कयामि= என்றுஆலோசிக்கிறேன். देवि विशालवीर्ये =மகத்தான வீரியமுடைய தேவியே.

(பொ-உ) அசுரனின் இரு கொம்புகளுக்கு மத்தியில் வாளைச் சொருகிய அந்த காரியத்தில் அசுரனின் இறுதி முயற்சி பயனற்று ஸ்தம்பித்து விடுகிறது. உன் இந்த மாபெரும் விரதம் முடிவு

பெற்றுவிட்டது என்றே நினைக்கிறேன். மாபெரும் வீரியமுடைய தேவியே.

(வி-உ) மகிஷாஸுர வதத்தை மனதில் கொண்ட கவிஞர், அதேபோல் ஆங்கிலேய அசுரனின் கடைசி முயற்சியும் பயனற்றுப்போய், தேவி அவனை நன்றாக மாய்த்துவிட்டாள், தேவியின் மகாவிரதம் நன்கு நடந்தேறியது என்று குதூகலிக்கிறார்.

तुभ्यं नमो देवि विशालशक्त्यै भीमव्रते तारिणि कष्टसाध्ये ।
त्वं भारती राजसि भारतानां त्वमीश्वरी भासि चराचरस्य ॥ 73

(ப-உ) देवि = தேவியே, भीमव्रते = பயங்கர விரதம் பூண்டவளே, तारिणि = (இன்னல்களை) தாண்டுவிப்பவளே, कष्टसाध्ये = அடைதற்கரியவளே, विशालशक्त्यै = மாபெரும் சக்தி படைத்த, तुभ्यं नमः = உனக்கு நமஸ்காரம், भारतानां = இந்திய தேசத்தவர்களின், भारती = காக்கும் தெய்வமாக, त्वं =நீ, राजसि =பிரகாசிக்கிறாய், चराचरस्य =அசையும் பொருள், அசையாப் பொருள் கொண்ட உலகத்தின், ईश्वरी = ஈச்வரியாக, भासि = பிரகாசிக்கிறாய்.

(பொ-உ) தேவியே, பயங்கர விரதம் பூண்டவளே, இன்னல்களைக் கடக்க வைப்பவளே, அடைதற்கரியவளே, மாபெரும் சக்தியாகிய உனக்கு நமஸ்காரம். இந்திய தேசத்தவர்களின் காக்கும் தெய்வமாக நீ பிரகாசிக்கிறாய். நீ அசையும், அசையாப் பொருட்கள் நிறைந்த இவ்வுலகத்தின் ஈச்வரியாகப் பிரகாசிக்கிறாய்.

(வி-உ) எல்லா அசுரர்களும் மாய்ந்தார்கள் என்று அறிந்த கவிஞர், இப்போது தேவியை ஸ்தோத்திரம் செய்கிறார். துர்கா ஸப்தசதியிலும், தேவீ பாகவதத்திலும் மஹிஷாஸுர வதம், சும்பநிசும்பவதம் இவை முடிந்தபின், தேவர்கள் மிக்க குதூகலத்துடன் தேவியை பலவாறு துதிக்கின்றனர்.

त्वमीश्वरी त्वं जननी प्रजानां कोऽन्यः प्रभुर्दानमिदं तवाढये ।
स्वामित्वमैश्वर्यं अनिन्द्यतेजः ददासि या सापि निहंसि रुष्टा ॥ 74

(ப-உ) त्वं ईश्वरी = நீ ஈச்வரி, त्वं प्रजानां जननी =நீ ப்ரஜைகளின் தாய், आढ्ये= மிகுந்த செல்வம் படைத்தவளே, कः अन्यः प्रभुः =வேறு யார் பிரபு, स्वामित्वं = தலைவன் பதவி, ऐश्वर्यं = ஐசுவரியம், अनिन्द्यतेजः = உயர்ந்ததான தேஜஸ், इदं = இவையெல்லாம், तव दानं = உன் தானமாக, भवति = உள்ளது. या ददासि = (இவையெல்லாம்), நீ

கொடுக்கும்போதே, सा = நீ, रुष्टा = கோபம் வந்தால், निहंसि अपि = மாய்க்கவும் செய்கிறாய்.

(பொ-உ) நீ ஈச்வரி, நீ ப்ரஜைகளின் தாயார். மிகுந்த செல்வம் படைத்தவளே ! வேறு யார் ஆட்சி நடத்துவர்? தலைவன் பதவி, ஐச்வரியம், உயர்ந்ததான தேஜஸ் இவைகளெல்லாம் நீ அளிக்கும் தானம். இவையெல்லாம் நீ தானம் செய்யும்போதே, கோபம் வரும்போது மாய்க்கவும் செய்கிறாய்.

(வி-உ) துஷ்டநிக்ரஹம், சிஷ்டபரிபாலனம்– அதாவது துஷ்டர்களை அடக்குதல், சாதுக்களை கப்பாற்றுதல் என்பது பகவதியின் நிரந்தரமான அருட்செயல். துர்காஸப்தசதியில், சும்பநிசும்பவதத்திற்ககுப் பின்னர், தேவர்களுடைய ஸ்துதி:

"रोगानशेषान् अपहंसि तुष्टा रुष्टा तु कामान् सकलानभीष्टान् ।
त्वामाश्रितानां न विपन्नराणां त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति ॥"

“நீ சந்தோஷமடைந்தால் எல்லா வியாதிகளையும் அறவே போக்குகிறாய். கோபம் வந்தாலோ, வேண்டப்படும் காமங்களையெல்லாம் (அறவே அழிக்கிறாய்). உன்னை அண்டிய மனிதர்க்கு விபத்து கிடையாது. உன்னை சரணாகதி செய்தவர் அண்டுதற்கு உரியவாகின்றனர்.”

नमो नमो वाहनमेतदार्ये हिमाभकान्तं मधुरायताक्षि ।
तल्लाङ्गुलाग्रेण सुकृष्णभासा ध्वजं करोतीव तवोच्छ्रितेन ॥ 75

(ப-உ) मधुरायताक्षि = அழகிய நீண்ட கண்களுடயவளே, आर्ये = பெருமை மிக்கவளே, नमः नमः = நமஸ்காரம், நமஸ்காரம், एतत् = இந்த, हिमाभकान्तं = வெண்பனியின் காந்தி கொண்ட, वाहनं = (பசுவாகிய) வாகனம், उच्छ्रितेन = உயர்த்தப்பட்ட, सुकृष्णभासा = கருமை நிறப்பிரகாசத்துடன் கூடிய, तत् लाङ्गुल अग्रेण = அந்த வாலின் நுனியினால், तव = உன், ध्वजं = கொடியை, करोति इव = உண்டு பண்ணுகிறதுபோலும்.

(பொ-உ) அழகிய நீண்ட கண்களுடையவளே, பெருமைமிக்கவளே ! மீண்டும் மீண்டும் நமஸ்காரம். இந்த வெண்பனியின் காந்தி வீசும் பசுவாகனம், தன் உயர்த்தப்பட்ட், கரும் பிரகாசத்துடன் கூடிய அந்த வால் நுனியினால், உன் கொடியை உண்டுபண்ணுகிறதுபோலும்.

(வி-உ) தேவியின் வாகனமாகிய பசுவிற்ககுத் தன் நன்றியைக் கவிஞர் தெரிவிக்கிறார். உயர்த்தப்பட்ட வால் நுனியே கொடியாகி, தேவிக்கு தன் மரியாதைகளை வாகனமாகிய காமதேனு தெரிவிக்கிறது.

துர்கா ஸப்தசதியில் உத்தர பாகமான வைகிருதிக ரஹஸ்யத்தில், பூஜைமுறைகளைச் சொல்லிக்கொண்டு போகும்போது, ரிஷி கூறுகிறார்.

'वाहनं पूजयेत् देव्या धृतं येन चराचरम् ।

कुर्याच्च स्तवनं धीमान् तस्या एकाग्रमानसः ॥' (31)

“சராசர பிரபஞ்சத்தைத் தாங்குவதாய் (பாவித்து) தேவியின் வாகனத்தைப் பூஜிக்கவேண்டும். புத்திமானாகிய பக்தன் அதன் பின் ஏகாக்கிரமனதுடன் அந்த தேவியின் ஸ்தோத்திரத்தைச் செய்ய வேண்டும்."

नमो नमो देवि तवालकाली रणश्रमेण प्रसभं विमुक्ता ।
उड्डीयमाना नभसीव मेघो वेणिच्युता भाति सुदीर्धवक्रा ॥76

(ப-உ) देवि = தேவியே, नमः नमः = நமஸ்காரம், நமஸ்காரம், रणश्रमेण = யுத்தத்தின் ச்ரமத்தினால், प्रसभं = வேகமாக, பலத்துடன், विमुक्ता = அவிழ்த்துவிடப்பட்ட, वेणिच्युता =பின்னல் அவிழ்ந்த, सुदीर्धवक्रा =நன்கு நீண்டு அலைபோலிருக்கும், उड्डीयमाना = மேலே பறக்கும், तव = உன், अलकालिः =கேசவரிசை, नभसि = ஆகாசத்தில், मेघःइव=மேகம் போல், भाति =பிரகாசிக்கிறது.

(பொ-உ) தேவியே ! மீண்டும் மீண்டும் நமஸ்காரம். யுத்தத்தின் சிரமத்தினால், பலமாக அவிழ்த்துவிடப்பட்ட, பின்னல் அவிழ்ந்த, நன்கு நீண்டு (அலைபோல்) வளர்ந்திருக்கும், மேலே பறந்து கொண்டிருக்கும் உன் கேசவரிசை ஆகாசத்தில் (கரு) மேகம்போல் பிரகாசிக்கிறது.

(வி-உ) கேசபாரத்தைக் கருமேகங்களுடன் ஒப்பிடுதல் எல்லா இலக்கியங்களிலும் உள்ளது. தேவீ பாகவதத்திலும் தேவியின் விச்வரூப தரிசனத்தை வர்ணிக்கும்போது, “बलाहकास्तु केशाः स्युः संध्ये ते वाससी विभोः ॥” (7:33:2) “மேகங்கள் உன் கேசங்களாக இருக்கின்றன. எங்கும் நிறைந்துள்ள உன் வஸ்திரங்களாக ஸந்தியா காலங்கள் உள்ளன.” என்று வருகிறது.

श्वेतानने विद्युदिवासि भूमौ रुषा प्रदीप्ते हि विलोचने ते ।
क्रीडन्त्यपाङ्गेषु करालहासाः शतह्लदेव स्तनयित्नुमध्ये ॥ 77

(ப-உ) श्वेतानने = வெள்ளைமுகத்தாளே, भूमौ = பூமியில், विद्युत् इव असि = மின்னல்போல் இருக்கிறாய். ते = உன், विलोचने हि = கண்களோ, रुषा = கோபத்தால், प्रदीप्ते = எரிகின்றன. स्तनयित्नुमध्ये = மேகங்களுக்கு மத்தியில், शतह्लदा इव = மின்னல் போல், अपांगेषु = கண் ஓரங்களில், करालहासाः = பயங்கர முறுவல்கள், क्रीडन्ति = விளையாடுகின்றன.

(பொ-உ) வெண்முகத் தேவியே ! நீ பூமியில் மின்னல் போல் இருக்கிறாய். உன் கண்களோ கோபத்தால் ஜொலிக்கின்றன. மேகமத்தியில் மின்னல்போல், கண் ஓரங்களில், பயங்கர முறுவல்கள் விளையாடுகினறன.

(வி-உ) மின்னல் ஆகாசத்தில் மேகமத்தியில்தான் தென்படும். ஆனால் பூமியில் மின்னல் கொடிபோல் தேவி பிரகாசிக்கிறாள். அசுரர்களிடம் உள்ள கோபமானது, தேவியின் கடைக்கண்களில் மின்னல்போன்ற ஜொலிப்புடன் பயங்கர புன்சிரிப்பாகக் காட்சி அளிக்கிறது.

द्रष्टुं रिपूंस्तान् पतितान् गतासून् ग्रीवेयमीषन् नमिता च शुक्ला ।

सजानुवर्यं चरणं भवान्याः स्तम्भो हिमस्येव विभाति शुभ्रम् ॥78

(ப-உ) तान् = அந்த, पतितान् = கீழேவிழுந்துள்ள, गतासून् च = உயிரற்ற, रिपून् = எதிரிகளை, द्रष्टुं = பார்ப்பதற்கு, इयं = இந்த, शुक्ला = வெண்மையான, ग्रीवा = கழுத்தானது, ईषत् = சிறிது, नमिता = குனிந்தது. भवान्याः = பவானிதேவியின், सजानुवर्यं = முழங்கால்வரை உள்ள, शुभ्रं चरणं = வெண்மையான பாதமானது, हिमस्य स्तम्भः इव = பனியால் செய்த தூண்போல், विभाति = பிரகாசிக்கிறது.

(பொ-உ) இந்த கீழேவிழுந்துள்ள உயிரற்ற எதிரிகளைப் பார்ப்பதற்காக, தேவியின் இந்த வெண் கழுத்தானது சிறிது குனிந்தது. பவானி தேவியின் முழங்கால் வரை உள்ள வெண்மையான காலானது, பனியினால் செய்த தூண்போல் பிரகாசிக்கிறது.

(வி-உ) முதலில் வாகனத்தை துதிசெய்த கவிஞர், தேவியின் ஸௌந்தரியத்தை வர்ணிக்கத் தொடங்கி, கேசம், முகம், கண்கள், புன்முறுவல் என்று தொடர்ந்து, இப்போது கழுத்தையும், கால்களையும் பார்த்து பிரமிக்கிறார்.

शुक्लं प्रवातैः अनिलोपमं ते संक्षोभितं भासुरतोयदाभम् ।
वातीव वासो रुचिराणि मध्ये राजन्ति तेऽङ्गानि शशिप्रभेव ॥79

(ப-உ)प्रवातैः = கடும் காற்றால், संक्षोभितं அலைக்கழிக்கப்படும், शुक्लं= வெண்ணிறமான, अनिलोपमं = காற்றுபோல் மெல்லியதாயும், भासुरतोयद आभं = பிரகாசிக்கும் மேகவர்ணணத்துடனும், ते वासः = உன் வஸ்திரம், वाति इव = பறந்தோடுவதுபோலும், मध्ये = (வஸ்திர) மத்தியில், ते = உன், रुचिराणि = அழகான, अङ्गानि = அங்கங்கள், शशिप्रभा इव = சந்திரபிரகாசம் போல், राजन्ति = பிரகாசிக்கின்றன.

(பொ-உ) கடும் காற்றால் அலைக்கழிக்கப்படும், வெண்ணிற, காற்றுபோல் மெல்லியதான, பிரகாசிக்கும் மேக வண்ண, உன் வஸ்திரம் பறந்தோடுவதுபோல் (தோன்றுகிறது). வஸ்திர மத்தியில் உன் அழகான அங்கங்கள் சந்திர பிரகாசம் போல் (குளிர்ச்சியாக) பிரகாசிக்கின்றன.

उदीर्णफेनः पयसस्तरङ्गः क्षीराब्धिमध्ये स्तन एक एषः ।
त्वं दुर्निरीक्ष्यासि यदङ्गकान्तेः त्विषाक्षि मातः प्रतिहन्यते मे ॥80

(ப-உ) एषः एकः स्तनः = இந்த ஒரு மார்பகம், क्षीराब्धिमध्ये = பால்கடல் நடுவில், पयसः = பாலுடைய, उदीर्णफेनः = மேல்வரும் நுரையுடன் கூடிய, तरङ्गः = அலையே. मातः = தாயே, यत् त्वं = எதனால் நீ, अङ्गकान्तेः =அங்கங்களின் சோபையை, दुर्निरीक्ष्या = பார்க்கமுடியதவளாக, असि = இருக்கிறாய். मे अक्षि = என் கண்கள், त्विषा = பிரகாசத்தினால், प्रतिहन्यते = திருப்பித் தாக்கப் பட்டுள்ளன.

(பொ-உ) உன் இந்த மார்பகம் பாற்கடல் நடுவில் மேலே பால் நுரையுடன் கூடிய அலையே. தாயே ! உன் அங்கங்களின் சோபை பார்க்கவொண்ணாததாய் இருக்கிறது. காரணம், என் கண்கள், பிரகாசத்தினால் திரும்பத் தாக்கப்பட்டுள்ளன.

(வி-உ) அம்பிகை ஜோதிஸ்வரூபம். ஜோதியின் பிரகாசம் மனிதக் கண்களைக் குருடாக்குவது போல் இருக்கிறது. தேவீபாகவதத்தில் தேவியின் விச்வரூபதரிசனத்தின்போது,

"कोटिसूर्यप्रतीकाशं विद्युत्कोटिसमप्रभम् । भयंकरं महाघोरं हृदक्ष्णोः त्रासकारकम् ।
दद्रुशुस्ते सुराः सर्वे हाहाकारं च चक्रिरे॥ विकम्पमानहृदया मूर्च्छामापुः दुरत्ययाम्॥"

(7:33:37,39)

"தேவியின் கோடி ஸூர்யப் பிரகாசமும், கோடி மின்னல்களுக்குச் சமமான காந்தியும், மிக பயங்கரமான, ஹ்ருதயம், கண்கள் இவைகளில் மிக்க பயத்தை உண்டு பண்ணுவதாகவும் இருக்கும்

தேவியின் ரூபத்தை தேவர்கள் எல்லோரும் பார்த்தனர். கூக்குரலிட்டனர். ஹ்ருதயம் நடுங்க, விடுபட முடியாத மூர்ச்சைக்கு உள்ளாகினர்."

இதற்கு முன்னர், தேவி ஜ்யோதிஸ்வரூபமாக தேவர்களுக்குக் காட்சி கொடுத்தாள்.

"दीप्त्या पिधानं नेत्राणां तेषामासीन्महीपते।

पुनश्च धैर्यमालंब्य यावत्ते ददृशुः सुराः ॥" (7:31:30)

"தேவியின் ஜோதியினால் தேவர்களுடைய கண்களுக்குத் திரையிட்டாற் போல் ஆயிற்று. அரசே ! தேவர்கள் மறுபடியும் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவளைப் பார்த்தனர். "

## सनातनी देवि शिवस्य पूर्वं वपुः त्विदं धारयसे युवत्याः ।
## तुभ्यं नमस्तुभ्यं अनादिमातः सौम्या भवाम्ब प्रणतेषु भीमे ॥81

(ப-உ) देवि = தேவியே, सनातनी = நீ எப்போதும் இருப்பவள். शिवस्य पूर्वं = சிவனுக்குமுன்னரே (நீ இருந்தாய்), इदं वपुः तु = இந்த சரீரமோ, युवत्याः = யுவதியினுடையதாக, धारयसे = தரிக்கிறாய். अनदिमातः = ஆதியில்லாத தாயாரே, तुभ्यं नमः तुभ्यं = உனக்கு நமஸ்காரம், உனக்கு நமஸ்காரம். भीमे = பயங்கரமானவளே, प्रणतेषु = நமஸ்கரிப்பவர்களுக்கு, सौम्या = இனியவளாக, भव = ஆகுவாயாக, अम्ब = தாயே.

(பொ-உ) தேவியே ! நீ எப்போதும் இருப்பவள். சிவனுக்கு முன்னரும் நீ இருந்தாய். உன் இந்த சரீரமோ யுவதியின் சரீரத்தை ஒத்துள்ளது. ஆதியில்லாத தாயாரே ! உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். தாயே ! பயங்கரமானவளே ! நமஸ்கரிப்பவர்களுக்கு இனியவளாக ஆகுவாயாக.

(வி-உ) பிரம்மா, விஷ்ணு, சிவன் மூன்று தேவர்களும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரியங்களுக்காக தேவியால் உண்டுபண்ணப்பட்டவர்கள் என்பதைத் தேவீ பாகவதமும், துர்கா ஸப்தசதியும் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றன.

उद्दिश्यभूमिं द्रुमराजिनीलां शैलान्तरालेषु महत्सु दृश्याम् ।
कारुण्यमय्याः प्रसृतः करस्ते ददासि रुद्राणि अभयं प्रजानाम् ॥82

(ப-உ) महत्सु = பெரிய பெரிய, शैलान्तरालेषु = மலைச்சரிவுகளில், दृश्याम् = காணப்படும், द्रुमराजिनीलां = மரங்களால் சோபிக்கும் பச்சை நிறங்கொண்ட, भूमिं उद्दिश्य = பூமியை உத்தேசித்து, कारुण्यमय्याः =

கருணைமயமான, ते = உன், करः = கரம், प्रसृतः = நன்கு நீண்டது, रुद्राणि = ருத்ராணியே, प्रजानां = பிரஜைகளுக்கு, अभयं = அபயத்தை, ददासि = தருகிறாய்.

(பொ-உ) பெரிய பெரிய மலைச்சரிவுகளில் காணப்படும் மரங்கள் சோபிக்கும் பச்சை நிறங்கொண்ட பூமியை உத்தேசித்து, கருணையே வடிவான உன் கரம் வெளியில் நீண்டது, ருத்திராணியே ! பிரஜைகளுக்கு அபயப்பிரதானம் செய்கிறாய்.

(வி-உ) மலைகளில் பச்சை பசேலென்ற காடுகள் எவ்வளவு அத்தியாவசியம் என்பதை விஞ்ஞானம் நமக்கு இப்போது நன்கு உணர்த்துகிறது. காடுகள் அழிக்கப்படாமலும், மேலும் மரங்கள் நடுவதற்கும் விடாமுயற்சிகள் இப்போது நடந்துவருகின்றன. மலைகளையும், மரங்களையும் ஸ்ருஷ்டித்தவள் அம்பிகையே என்பதைக் கவிஞர் உணர்த்துகிறார். பிரஜைகளுக்கு வேண்டிய எல்லா ஸம்ருத்தியையும் அளிப்பவளும், எல்லா தடங்கல்களையும் நீக்குபவளும் அவளே.

तत्संज्ञया ते करपल्लवस्य तमो विधूतं भुवि भारतानाम् ।
रक्तस्य मेघा नभसोऽपधूता अचिन्त्यवीर्यासि शुभासि सौम्या ॥83

(ப-உ) ते करपल्लवस्य = உன் தளிர்க்கரத்தால், संज्ञया = சைகையினால், भुवि = பூமியில், भारतानाम् = பாரதீயர்களுடைய, तत् = அந்த, तमः = இருள், विधूतम् = விலகியது. रक्तस्य मेघाः = ரத்தமேகங்கள், नभसः = ஆகாசத்திலிருந்தும், अपधूताः = விரட்டப்பட்டன, अचिन्त्यवीर्या असि = சிந்தனைக்கப்பாற்பட்ட வீரியம் உள்ளவளாக நீ இருக்கிறாய், शुभा = மங்களரூபிணியாக, सौम्या = இனியவளாக, असि = நீ இருக்கிறாய்.

(பொ-உ) உன் தளிர்க்கரத்தின் சைகையினால் பூமியில் பாரதீயர்களுடைய அந்த இருள் விலகியது. ரத்த மேகங்கள் ஆகாஶத்திலிருந்து விரட்டப்பட்டன. சிந்தனைக்கு அப்பாற்பட்ட வீரியமுள்ளவளாகவும், மங்கள ரூபிணியாகவும் இனியவளாகவும் நீ இருக்கிறாய்.

(வி-உ) அம்பிகை தன் கரங்களை நீட்டி பாரத தேசத்தை செழிப்பான பூமியாக ஆக்கியதைக் கவிஞர் முந்தைய ஸ்லோகத்தில் ஸ்தோத்திரம் செய்தார். இப்போது, ஜனங்களுக்கு அபயப் பிரதனம் அளித்த கரங்களால் இருளை விலக்கி, ரத்த மேகங்களை

விரட்டியதை ஸ்தோத்திரம் செய்யும் கவிஞர் தேவியின் வீரியமும், இனிமையும், தயையும் வர்ணனைக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டவை என்பதை எடுத்துரைக்கிறார். தேவியை அண்டினால் எல்லா நலன்களும் கிடைப்பதும், இன்னல்கள் வானில் மேகம் விலகுவதுபோல் விலகுவதும் உறுதி. இங்கு ரத்த மேகங்கள் என்று குறிப்பிடப்படுபவை ஆங்கிலேய ஆதிக்கமும், வெறியும். இருள் என்பது ஆங்கிலேய அரசில் ஜனங்கள் பட்ட கஷ்டங்கள்.

सौम्यं वपुस्ते हिमवर्णमार्यं सौम्यं भवान्या वदनं ह्युदारम् ।
शुक्लाम्बरां यौवनशुभ्रकान्तिं स्नेहार्द्रनेत्रां बलिनीं नमामि ॥ 84

(ப-உ) भवान्याः = பவானியாகிய, ते = உன், हिमवर्णं = பனிபோல் வெண்ணிறமான, आर्यं वपुः = பெருமைமிக்க சரீரம், सौम्यं = இனிமையானது. उदारं = மனதைக் கவரும், वदनं हि = முகமும், सौम्यं = இனிமையானது, शुक्लाम्बरां = வெண் வஸ்திரம் தரித்த,

यौवनशुभ्रकान्तिं =யௌவனத்தின் வெண்மையான காந்தியுடன், स्नेहार्द्रनेत्रां = கனிவில் நனைந்த கண்களையுடைய, बलिनीं = பலம் பொருந்திய உன்னை, नमामि = நமஸ்கரிக்கிறேன்.

(பொ-உ) பவானியாகிய உன் பனிபோல் வெண்ணிறமான பெருமைமிக்க சரீரம் இனிமையானது. மனங்கவரும் முகமும் இனிமையானது. வெண்ணாடை தரித்த, யௌவனக் காந்தி வெண்மையாய் ஒளி வீச, கனிவினால் நனைந்த கண்களையுடைய, பலம் பொருந்திய உன்னை நமஸ்கரிக்கிறேன்.

(வி-உ) ஆர்யம் சரீரம் என்று பெருமைமிக்க சரீரம் என்று, தேவியின் சரீரத்தை வர்ணிப்பதன் காரணம், மனிதர்களைப்போல் மாமிசமும், எலும்பும் கொண்ட சரீரம் அல்ல தேவியின் சரீரம். அப்ராக்ருதம் அதாவது ஸ்ருஷ்டியில் உள்ள ஜந்துக்களைப் போலல்லாது, ஜோதி ஸ்வரூபமாக இருப்பது தேவியின் சரீரம். கடுந்தோற்றமளித்த தேவியை, மனதிற்கினிய வடிவம் எடுக்குமாறு கவிஞர் 81-ம் ச்லோகத்தில் பிரார்த்திக்கிறார். அவ்வாறு தேவி பிரார்த்தனைக்கிணங்க, இனிய வடிவம் எடுத்ததை கவிஞர் வர்ணித்து இப்போது ஸ்தோத்திரம் செய்கிறார்.

தேவீபாகவதத்திலும், விச்வரூப தரிசனத்திற்காக முதலில் ஹிமவான் பிரார்த்திக்கும் போது, எல்லா தேவர்களும், ஆனந்த பரவசமாகினர். விச்வரூபத்தை தரிசனம் செய்த போது, தேவர்கள் அந்த பயங்கர ரூபத்தைப் பார்க்கமுடியாமல் மூர்ச்சித்தனர். பின்னர் மூர்ச்சை தெளிந்து, அவர்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்தனர்.

“उपसंहर देवेशि रूपमेतदलौकिकम् ।

तदेव दर्शयास्माकं रूपं सुन्दरसुन्दरम् ॥“ (7:33:53)

“தேவர்களின் ஈச்வரியே ! இந்த விசித்திரமன ரூபத்தை முடித்துக்கொள்வாயாக! உடனேயே உன்னுடைய அழகுக்கு அழகு சேர்க்கும் ரூபத்தை எங்களுக்குக் காண்பிப்பாயாக.”

இதேபோல், பகவத் கீதையிலும், கிருஷ்ணனின் பயங்கரமான விச்வ ரூபத்தைக் கண்ட அர்ஜுனன் நடுநடுங்கிப் போய், அவருடைய வழக்கமான இனிய உருவத்தைக் காட்டுமாறு பிரார்த்திக்கிறான்.

“अदृष्टपूर्वं हृषितोऽस्मि दृष्ट्वा भयेन च प्रव्यथितं मनो मे ।
तदेव मे दर्शय देव रूपं प्रसीद देवेश जगन्निवास ॥

किरीटिनं गदिनं चक्रहस्तं इच्छामि त्वां द्रष्टुमहं तथैव ।
तेनैव रूपेण चतुर्भुजेन सहस्रबाहो भव विश्वमूर्ते ॥" (11:45,46)

“யாராலும் முன்னர் பார்க்கப்படாத உங்கள் இந்த ரூபத்தைப் பார்த்து சந்தோஷிக்கிறேன். அதோடு, என் மனம் பயத்தினால் நிலை குலைந்திருக்கிறது. உடனேயே எனக்கு உங்கள் பழைய தேவரூபத்தைக் காண்பித்து அருள் புரிவீராக. தேவேச்வரனே, ஜகத்தில் வசிப்பவனே ! பழையபடி, கிரீடத்துடனும், கதையுடனும், கையில் சக்கரத்துடனும் உங்களைப் பார்க்க ஆசைப்படுகிறேன். ஆயிரம் கைகள் கொண்ட, உலகத்தையே உருவாகக்கொண்டவரே ! உங்கள் பழையரூபத்துடன் நான்கு கைகள் உள்ளவராய் ஆகுவீராக. கிருஷ்.ண பகவானும், “ पुनः सौम्यवपुः भूत्वा ” (11:50), "மறுபடியும் இனிய சரீரம் படைத்தவராய்,” அர்ஜுனனை ஸமாதானம் செய்தார்.

नरास्थिमाला नृकपालकाञ्ची क्व सा कराली क्षुधिता च काली ।
नग्ना च घोरा विवृतास्यभीमा यस्या विरावैः सहसोत्थितोऽस्मि॥ 85

(ப-உ) नरास्थिमाला = மனித எலும்பு மாலை அணிந்தவளும், नृकपालकाञ्ची = மனித மண்டை ஓட்டு மேகலை அணிந்தவளும், कराली = பயங்கர தோற்றமுடையவளும், क्षुधिता च =பசியினால் வாடுபவளும், नग्ना= வஸ்திரம் இல்லாதவளும், घोरा = கோரமானவளும், विवृतास्यभीमा च = விரிந்த வாயினால் மேலும் பயத்தை உண்டுபண்ணுபவளும் ஆன, सा काली =அந்த காளி, क्व = எங்கே, यस्याः = எந்த காளியின், विरावैः = உரத்த கூக்குரல்களினால், सहसा = திடீரென, उत्थितः अस्मि = (நான்) எழுந்திருந்தேன்.

(பொ-உ) மனித எலும்பு மாலை அணிந்தவளும், மனித மண்டைஓட்டு மேகலை அணிந்தவளும், பயங்கர தோற்றம் கொண்டவளும், பசியினால் வாடுபவளும், நிர்வஸ்திரமாக இருப்பவளும், கொடூரமானவளும், விரிந்த வாயினால் மேலும் பயத்தை உண்டு பண்ணுகிறவளுமான அந்த காளி எங்கே ? எந்த காளியின் உரத்த கூக்குரல்களினால் திடீரென நான் எழுந்திருந்தேனோ.

(வி-உ) 46-வது ச்லோகம் வரை ராத்திரியில் காளி தேவியின் ஆக்ரோஷம், யுத்தம், அக்னி பாணவர்ஷம், ரத்த வெள்ளம் எல்லாம் வர்ணிக்கப்பட்டன. 47-வது ஸ்லோகத்தில் அசுரராஜனின் கர்வம் பூண்ட கர்ஜனை சொல்லப்பட்டது. 48, 49-வது சுலோகங்களில் உதய சூரியனின் சோபை, மேக வடிவமாக பிரஹ்மா தேவியிடம் பிரார்த்திப்பது இவை எடுத்துக் கொள்ளப்பட்டன. 50-வது ச்லோகத்தில் வட திசையில் மலை உச்சியில் திடீரென தேவியின் ஜோதி ஸ்வரூபம் தென்பட்டது வர்ணிக்கப்பட்டது. 51-வது ச்லோகத்திலிருந்து 84-வது ச்லோகம் வரை தேவியின் உத்கர்ஷம், தேவர்கள் ஸ்துதி, யுத்தத்தில் தேவியும், தேவியின் வாகனமான காமதேனுவும் அசுரசேனையை நிர்மூலமாக்கியது, பின்னர் தேவியை கவிஞர் ஸ்தோத்திரம் செய்தது, கவிஞரின் பிரார்த்தனைக்கிணங்க பயங்கர உருவத்தை விடுத்து, இனிய ரூபத்துடன் தேவி தரிசனம் இவையெல்லாம் விஸ்தாரமாகப் பேசப்பட்டன. இப்பொழுது க்விஞருக்கு திடீரென எந்த காளிதேவி முதலில் அவரைப் படுக்கையிலிருந்து எழுப்பி உத்ஸாஹப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடுத்தினாளோ, அந்த காளியின் நினைவு வந்தது. அந்த காளி எங்கே என்று எதிரே இனிய உருவுடன் காட்சியளிக்கும் தேவியை வினவுகிறார்.

रक्तस्य योऽयं वहतीह सिन्धुः छाया शुभाया हसतीव तस्मिन् ।
खड्गं परिभ्रामयति स्तनन्ती नग्ना सुघोरा च नमामि कालीम् ॥86

(ப-உ) इह =இங்கே, रक्तस्य = ரத்தத்தின், अयं यः सिन्धुः = இந்த நதி, वहति = பிரவகித்துக்கொண்டிருக்கிறது, तस्मिन् =அதில், शुभायाः = மங்களாம்பிகையான அந்த காளியின், छाया = நிழல், हसति इव = சிரிக்கிறாறாற்போலும். नग्ना =வஸ்திரமில்லாத, सुघोरा च =பயங்கரமானவளும், स्तनन्ती =கர்ஜிக்கின்றவளாகவும், खड्गं =வாளை, परिभ्रामयति = சுழற்றுகிறாள், कालीं नमामि = அப்பேர்ப்பட்ட காளி தேவியை நமஸ்கரிக்கிறேன்.

(பொ-உ) இங்கே ரத்தத்தின் எந்த நதி பிரவகித்துக் கொண்டிருக்கிறதோ, அதில் மங்களமான அந்த காளியின் நிழல் சிரிக்கிறாற்போலும். நிர்வஸ்திரமான பயங்கரமான அந்த காளி கர்ஜித்துக் கொண்டு வாளை சுழற்றுகிறாள். அப்பேர்ப்பட்ட காளிதேவியை நமஸ்கரிக்கிறேன்.

(வி-உ) முந்தைய ச்லோகத்தில் காளிதேவி எங்கே என்ற எதிரில் காட்சி அளிக்கும் தேவியிடம் வினவிய கவிஞர், பதிலைத் தாமாகவே கண்டு கொண்டார். ஓடும் ரத்த நதி பிரவாகத்தில் காளியின்

நிழலைப் பார்த்தார். காளி தேவி யுத்தத்தில் கடுமையா ஈடுபட்டபிறகு, ரத்தத்தோடு ரத்தமாக ஒன்றிவிட்டாள்.

काली त्वमेवासि सुनिष्ठुरासि त्वमन्नपूर्णा सदया च सौम्या ।
नमामि रौद्रां भुवनान्तकर्त्रि प्रेमाकुलामेव नमामि राधे ॥ 87

(ப-உ) त्वं एव काली असि =நீதான் காளி. सुनिष्ठुरा असि = மிக்க கொடுமையானவளாக இருக்கிறாய். त्वं अन्नपूर्णा = நீ அன்னபூரணி. सदया = தயை உள்ளவள், सौम्या च =அழகும் இனிமையும் உள்ளவள். भुवनान्तकर्त्रि = உலகங்களை ஸம்ஹாரம் செய்பவள். रौद्रां = கொடூரமான (உன்னை), नमामि = நமஸ்கரிக்கிறேன், राधे =ராதா தேவியே, प्रेमाकुलां एव = பிரேமை ததும்பும், नमामि = (உன்னை) நமஸ்கரிக்கிறேன்.

(பொ-உ) நீதான் காளி, மிகக் கொடுமையானவளாக இருக்கிறாய். நீயே அன்னபூரணி. தயை, அழகு, இனிமை பொருந்தியவள். உலகங்களை ஸம்ஹரிப்பவளே, கொடூரமான

உன்னை நமஸ்கரிக்கிறேன். ராதா தேவியே, பிரேமை வழியும் உன்னை நமஸ்கரிக்கிறேன்.

(வி-உ) பகவதி பல்வேறு வடிவங்கள் எடுத்து பக்தர்களைக் காக்கிறாள். கொடூர உருவுடன் காவிய நாயகனை முதலில் உறக்கத்திலிருந்து எழுப்பி, பாரதீயர்களின் சேனையைத் திரட்டி, ஆங்கிலேய சேனையை சின்னாபின்னமாக்கி, ரத்த நதிகள் பிரவகிக்கும்படி செய்து, பயங்கரமாகக் காட்சியளித்தவள் காளி. அதன் பிறகு, வட திசையில் இமயமலை உச்சியில் ஆகாசத்தில் ஜோதியாகத் தோன்றி, நாரீ மணியாக வேறு தோற்றமளித்து, காமதேனு வாகனத்தின் மீது அமர்ந்து, ஆங்கிலேயர்களுடன் பயங்கர யுத்தம் செய்து, ரத்த வெள்ளத்தை உண்டாக்கி, பின்னர் கவிஞர் பிரார்த்தனைப்படி, அழகான இனிய உருவுடன் காட்சி கொடுக்கும் பவானி தேவி இப்போது எதிரில் நிற்கிறாள். அந்த பயங்கரத் தோற்றமுள்ள காளியும், இந்த அழகு உருவுடன் காட்சி கொடுக்கும் பவானியும் ஒரு தெய்வமே என்பதை கவிஞர் உணர்ந்து ஸ்தோத்திரம் செய்கிறார்.

கொடூர உருவும், கொடூர ஸம்ஹாரச் செயலும் ஒரு பக்கம். அன்னபூரணியாக ஜனங்களுக்கு ஸம்ருத்தியை அருளும் பாங்கும், ராதையாக அன்பே உருவாக பக்தர்களுக்கு பிரேமைப்பாடம் கற்றுத்தரும் இனிமையும் மற்றொரு பக்கம். இருவரும் ஒருவரே,

துஷ்ட நிக்ரஹமும், சிஷ்டபரிபாலனமும் தேவியே பல உருக்கொண்டு ஆற்றுகிறாள்.

ஸ்ரீ நாராயண பட்டத்திரி, ஸ்ரீபாத ஸப்ததி என்கிற அம்பிகையின் பாத மஹிமையைப் போற்றும் ஸ்தோத்திரத்தில், முதல் ச்லோகத்திலேயே இவ்வாறு சொல்கிறார்:

"यत् संवाहनलोभिनः शशिकलाचूडस्य हस्ताम्बुज-

स्पर्शेनापि च लोहितायति मुहुस्त्वत्पादपङ्केरुहम् ।

तेनैवोद्धरकासरासुरशिरः श्रृङ्गाग्रसञ्चूर्णन-

प्राचण्ड्यं तदनुष्ठितं किल कथं मुक्तिस्थलस्थे शिवे ॥" (1)

"முக்தி ஸ்தலத்தில் வாசம் செய்யும் மங்களாம்பிகையே ! சந்திரனை சிரஸில் தரித்துள்ள ஸ்ரீபரமேச்வரன் உன் பாதாரவிந்தத்தை தாங்கப் பேராவல் கொண்டவராய், உன் ஸ்ரீபாதத்தை ஸ்பரிசிக்கும்போது உன் பாதம் சிவந்து போகிறது. அதே உன் பாதமானது மலையை விடப் பெரிய சரீரங்கொண்ட மஹிஷாஸுரனுடைய தலையைப் பொடியாக்கிய பயங்கரத்தைச் செய்தது எவ்வாறு?"

तेजस्त्वमेतत् बलिनां बलञ्च त्वं कोमलानामपि कोमलासि ॥ 88

(ப-உ) सर्वशक्ते =ஸர்வ சக்திகளும் நிறைந்தவளே, कः = யார், तव = உன், इमां = இந்த, अनन्तशक्तिं =எல்லையற்ற சக்தியையும், ऋद्धिं = வைபவத்தையும், अशेषमूर्तिं = எல்லா உருவங்களிலும் நிறைந்திருத்தலையும், वक्ष्यति =வர்ணிக்கமுடியும். त्वं = நீ, एतत् तेजः असि =இந்த தேஜஸாக இருக்கிறாய். बलिनां बलं =பலவான்களுடைய பலமாகவும், कोमलानां अपि =கோமள வஸ்துக்களுக்குள், कोमला च =கோமளமாகவும் இருக்கிறாய்.

(பொ-உ) ஸர்வ சக்தி ஸ்வரூபிணி ! யார் உன்னை இந்த எல்லையற்ற சக்தியையும், வைபவத்தையும், எல்லா உருவங்களில் வியாபகத்தையும் வர்ணிக்கமுடியும் ? நீ இப்பேர்ப்பட்ட தேஜஸா இருக்கிறாய். பலவான்களுடைய பலமாகவும், கோமள வஸ்துக்களைவிட கோமளமாகவும் இருக்கிறாய்.

(வி-உ) தேவீ மாகாத்மியத்தில், மதுகைடபவதத்தின் பொருட்டு பிரம்மா தேவியிடம் பிரார்த்திக்கும்போது சொன்னார்.

’लज्जा पुष्टिस्तथा तुष्टिः त्वं शान्तिः क्षान्तिरेव च ।
खड्गिनी शूलिनी घोरा गदिनी चक्रिणी तथा ॥ (1:80)

"நாணமும், புஷ்டியும், அவ்வாறே சந்தோஷமும், அமைதியும், பொறுமையும் நீயே. வாளும், சூலமும், கதையும், சக்கரமும் ஏந்தி கோர வடிவினளாயுள்ளவளும் நீயே."

सौम्यामहं त्वां द्विभुजां नमामि त्रिशूलिनीं त्वां अभयं वहन्तीम् ।
त्वामम्ब सावित्रि शुभे त्रिनेत्रे शुक्लाङ्गवस्त्रां वृषरूढकान्तिम्॥ 89

(ப-உ) अहं = நான், द्विभुजां = இரு கைகள் கொண்ட, सौम्यां त्वां = மனதிற்கினியவளான உன்னை, त्रिशूलिनीं = த்ரிசூலம் ஏந்தியவளை, अभयं वहन्तीं = அபயம் தாங்கி நிற்கும், त्वां = உன்னை, नमामि = நமஸ்கரிக்கிறேன். अम्ब = தாயே, सावित्रि = ஸாவித்ரியே, शुभे = சுபமானவளே, त्रिनेत्रे = முக்கண் படைத்தவளே, शुक्लाङ्गवस्त्रां = வெண் வஸ்திரம் தரித்தவளும், वृषरूढकान्तिम् =எருதின் மேல் ஏறிய பாங்குடையவளும் ஆன (உன்னை நமஸ்கரிக்கிறேன்).

(பொ-உ) நான் இருகைகள் உடைய, மனதிற்கினியவளான, திரிசூலம் ஏந்திய, அபயக்கரத்துடன் விளங்கும் உன்னை நமஸ்கரிக்கிறேன். தாயே, ஸாவித்ரியே, சுபமானவளே, முக்கண் படைத்தவளே, வெண்வஸ்திரம் தரித்தவளும், எருதின்மேல் ஏறி பிரகாசிப்பவளுமான உன்னை நமஸ்கரிக்கிறேன்.

(வி-உ) முன்னர் காமதேனுவின் மேல் ஏறி காட்சி கொடுத்த பவானி தேவி, இப்போது எருது வாகனத்தின்மேல் பிராகாசிக்கிறாள். பாரத தேசம் பசுவுருக்கொண்டு பிரார்த்தித்தபோது, பிரம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க, பாரத தேசத்தின் கஷ்ட நிவ்ருத்திக்காக அம்பிகை வந்தபோது அந்த பசுவையே வாகனமாகக் கொண்டாள். இப்போது ஆங்கிலேய அசுரர்களின் வதம் முடிந்து, பாரத தேசம் பழைய ஸம்ருத்தி நிலையை அடைந்த காலத்தில், தான் சிவனுடன் ஏறும் வழக்கமான வாகனமான எருதின் மேலேறி பிரகாசிக்கிறாள்.

दशायुधाढ्या दशदिक्ष्वगम्या पातासि मातर्दशबाहुरार्यान् ।
सहस्रहस्तैः उपगुह्य पुत्रान् आस्से जगद्योनिः अचिन्त्यवीर्या ॥ 90

(ப-உ) दशायुधाढ्या = பத்து ஆயுதங்களை ஏந்தியவளாய், दशदिक्षु अगम्या = பத்து திசைகளிலும் முயற்சசி செய்தாலும் அடைய முடியாதவளாய், दशबाहुः = பத்து கைகள் கொண்டவளாய், आर्यान् = நன் மக்களை, पातासि = காப்பாற்றுகிறாய், मातः = தாயே, जगद्योनिः = உலகை உண்டுபண்ணுபவளாய், अचिन्त्यवीर्या = சிந்தனைக்கப்பாற்பட்ட வீரியம் படைத்த நீ, सहस्रहस्तैः = உன்

ஆயிரம் கைகளினால், पुत्रान् = புத்திரர்களை, उपगुह्य = அரவணைத்து, आस्से = இருக்கிறாய்.

(பொ-உ) தாயே, பத்து ஆயுதங்களை ஏந்தியவளாய், பத்து திசைகளிலும் முயற்சசி செய்தாலும் அடைய முடியாதவளாய், பத்து கைகள் கொண்டவளாய், நன் மக்களைக் காப்பாற்றுகிறாய். உலகை உண்டுபண்ணி சிந்தனைக்கப்பாற்பட்ட வீரியத்துடன் உன் ஆயிரம் கைகளினால் புத்திரர்களை அரவணைக்கிறாய்.

(வி-உ) பகவதியின் மாத்ரு வாத்ஸல்யத்தைக் கவிஞர் கொண்டாடுகிறார். 'यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह' – "எதை அடைய முடியாமல் வாக்கும், மனதும் திரும்பி விடுகின்றனவோ" என்று வேதம் (தைத்ரீய உபனிஷத்) எந்த பரபிரம்மத்தை வர்ணிக்கின்றதோ, அந்த பரபிரம்மஸ்வரூபிணியாக அம்பிகை, தன் புத்திரர்களுக்கு மிக எளியவளாக ஆகிறாள். புத்திரர்களைக் காபாற்ற தன் எல்லையில்லா வீர்யத்தையும், சக்தியையும் உபயோகப்படுத்தத் தயங்குவதில்லை.

தேவர்களைக் காப்பாற்ற தேவி புராணங்களில் எவ்வாறு கடுமையான யுத்தம் செய்தாளோ, அதுபோலவே இங்கும் பாரதீய குழந்தைகளைக் காபாற்ற தேவி யுத்தம் செய்ததை நினைவு கூர்கிறார் கவிஞர்.

’जगदम्ब विचित्रमत्र किं परिपूर्णा करुणास्ति चेन्मयि ।

अपराधपरम्परावृतं न हि माता समुपेक्षते सुतम् ॥ (11)

“ஜகதம்பிகையே, என்னிடம் உன் பரிபூர்ண கிருபை இருக்கிறது என்றால் இதில் என்ன ஆச்சரியம்? ஏனெனில், அனேக குற்றங்களைச் சுமக்கும் புத்திரனை தாயார் அலக்ஷியமாக விட்டுவிடுவதில்லை.” என்று ஆதிசங்கர பகவத் பாதர்கள் தேவ்யபராதக்ஷமாபண ஸ்தோத்திரத்தில் கூறுகிறாரே !

प्रकाशयन्तीं गहनानि भासैः भीमां ज्वलत् पर्वतमूर्तिमग्र्याम् ।
पश्यामि देवीं नगरेषु सौम्यां द्वारि स्थितां आर्यभुवः सखड्गाम्॥ 91

(ப-உ) भासैः = பிரகாUUத்தால், गहनानि = அடர்ந்த இருள் சூழ்ந்த பிரதேசங்களை, प्रकाशयन्तीं = பிரகாசப்படுத்திக்கொண்டு, भीमां = பயங்கரமான, ज्वलत् पर्वतमूर्तिं = ஜ்வலிக்கிற பர்வத உருவமுள்ள, अग्र्यां = ஆதி சக்தியை, सौम्यां च = மனதிற்ககினிய, देवीं =தேவியை, आर्यभुवः = நன் மக்கள் பூமியின், नगरेषु = நகரங்களில், द्वारि स्थितां = வாயிலில் இருக்கும், सखड्गाम् = வாளுடன் இருப்பவளை, पश्यामि = பார்க்கிறேன்.

(பொ-உ) தன் ஸ்வயம் பிரகசத்தினால் அடர்ந்த இருள் சூழ்ந்த பிரதேசங்களை பிரகாசப்படுத்திக் கொண்டு, பயங்கரமான, ஜ்வலிக்கும் மலையுருவுள்ள, ஆதிசக்தியை, மனதிற்கினிய தேவியை, நன் மக்கள் பூமியில் நகரங்களில் வாயிலில் இருக்கும் வாளுடன் இருப்பவளைப் பார்க்கிறேன்.

(வி-உ) பக்தவாத்ஸல்யம், மாத்ரு வாத்ஸல்யம் இவைகளைப் பரிபூர்ணமாகக் கொண்டுள்ள தேவி தன் குழந்தைகளைக் காக்க நகர வாயிலில் வாளுடன் தயாராக இருப்பதாக கவிஞர் வர்ணிக்கிறார்.

துர்கா ஸப்சதியில், தேவி தேவர்களிடம் கூறுகிறாள் :-
'रक्षां करोति भूतेभ्यो जन्मनां कीर्तनं मम ।
युद्धेषु चरितं यन्मे दुष्टदैत्य निबर्हणम् ॥
तस्मिञ्छ्रुते वैरिकृतं भयं पुंसां न जायते ॥' (12:23,24)

“என் அவதாரங்களைப் பற்றி கீர்த்தனம் செய்தால் பூதங்களிலிருந்து ரக்ஷையளிக்கும். துஷ்ட அசுரர்களை நாசம் செய்த எனது யுத்த சரித்திரம் எதுவோ, அது கேட்கப்பட்டால் மனிதனுக்கு சத்ருபயம் உண்டாகாது.”

कलिं दमित्वा जननी प्रजानां सत्वाधिकापत्यकुलैर्विभाति ।

स्वाधीनवृत्तीनि पुनश्चरन्ति पश्यामि तानि आगममार्गगाणि ॥ 92

(ப-உ) प्रजानां जननी =பிரஜைகளின் தாயார், कलिं दमित्वा =சண்டையை அடக்கி, सत्वाधिक=ஸத்துவ குணம் நிறைந்த, अपत्यकुलैः =ஸந்ததி குலங்களினால் विभाति =பிரகாசிக்கிறாள். स्वाधीनवृत्तीनि = சுதந்திரமாக செயல்களில், चरन्ति = ஈடுபடும், तानि = அக்குலங்களை, पुनः = மறுபடியும், आगममार्गगाणि = வேத, சாஸ்திர வழிகளில் செல்வதை, पश्यामि =பார்க்கிறேன்.

(பொ-உ) பிரஜைகளின் தாயார் சண்டையை அடக்கி, ஸத்துவ குணம் நிறைந்த ஸந்ததி குலங்களினால் பிரகாசிக்கிறாள். சுதந்திரமாக தத்தம் தொழில்களிலீடுபடும் அவர்களை மறுபடியும் வேத சாஸ்திர வழிகளில் செல்வதைப் பார்க்கிறேன்.

(வி-உ) யுத்தம் முடிந்து, சுதந்திரம் கிடைத்து, தாயார் பாதுகாப்பிற்காக எப்போதும் தயாராக இருக்கிறாள் என்கிற மனோதைரியத்துடன் இருக்கும் ஜனங்கள் பழையபடி வேத சாஸ்திரங்கள் சொன்ன வழிகளில் வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஸத்ஸந்ததிகளின் மூலம், தேவி பிரகாசிக்கிறாள். ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டு ஜனங்கள் வலிமையை இழந்து தர்மங்களைக் கைவிட்டபோது, தேவி துன்பப்பட்டு இழிந்த

தோற்றத்துடன் இருந்தாள். இப்போது தேவி மறுபடியும் பழையபடி பிரகாசிக்கிறாள்.

पुनः श्रृणोमीमरण्यभूमौ वेदस्य घोषं हृदयामृतोत्सम् ।
सुज्ञानिनां आश्रमगा मुनीनां कुल्येव पुंसां वहति प्रपूर्णा ॥ 93

(ப-உ) अरण्यभूमौ = வன பூமியில், हृदयामृतोत्सं इमं = இதயத்திலிருந்து வெளிவரும் அமிருத ஊற்றான இந்த, वेदस्य घोषं = வேத கோஷங்களை, पुनः = மறுபடியும், श्रृणोमि = கேட்கிறேன், पुंसां = மனிதர்களுடைய, प्रपूर्णा = நிறைவான, कुल्या = சிறு நதி, सुज्ञानिनां = ஞானிகளாகிய, मुनीनां முனிவர்களுடைய, आश्रमगा = ஆசிரமங்களை நோக்கி போவதாய்,, वहति इव = பிரவகிப்பது போலும்.

(பொ-உ) வன பூமியில் இதயத்திலிருந்து வெளிவரும் அமிருத ஊற்றான இந்த வேத கோஷத்தை மறுபடியும் கேட்கிறேன். மனிதர்கள் நிறைந்து புழங்கிய நதி ஞானிகளாகிய முனிவர்களுடைய ஆச்ரமங்களை நோக்கிப் பிரவகிப்பதுபோலும்.

(வி-உ) ஜனங்களுடைய அன்றாட வாழ்க்கை பழையபடி திரும்பிவிட்டதன் அறிகுறியாக, வேத கோஷம் பேரொலி எழுப்புகிறது. பக்தர்கள் ஞானிகளையும், முனிவர்களையும் நாடிச் செல்கின்றனர். இது தான் பாரத தேச கலாசாரம் என்பதைத் தெளிவாக இங்கு காட்டுகிறார் கவி.

सनातनान् रक्षति धर्ममार्गान् पुनः सहस्रांशुकुलार्यजन्मा ।
लक्ष्मीः पुनः साप्यचला स्मितास्या समुज्ज्वला राजति भारतेषु॥ 94

(ப-உ)पुनः = மறுபடியும், सहस्रांशुकुल = சூரிய குலத்தை சேர்ந்த, आर्यजन्मा = நன்மக்கள் குழாம், सनातनान् = ஸனாதனமான, धर्ममार्गान् = தர்ம மார்கங்களை, रक्षति = காப்பாற்றுகிறது. पुनः अपि = மறுபடியும், सा स्मितास्या = அந்த புன்சிரித்த முகமுள்ள, समुज्ज्वला = மிக பிரகாசிக்கும், लक्ष्मीः = லக்ஷ்மி தேவியானவள், भारतेषु = பாரதத்தின் ப்ரதேசங்களில், अचला =சஞ்சலமில்லாமல், राजति = ப்ரகாசிக்கிறாள்.

(பொ-உ) மறுபடியும் சூரிய குலத்தோன்றல்களான நன்மக்கள் குழாம் ஸனாதன தர்ம வழிகளைக் காக்கிறது. மறுபடியும் அந்த புன்

சிரித்தமுகம் கொண்ட, மிகையாக சோபிக்கும் லக்ஷ்மி தேவி பாரதத்தின் ப்ரதேசங்களில் சஞ்சலமின்றி ப்ரகாசிக்கிறாள்.

(வி-உ) சுதந்திர பாரதப் பெருமைகளை ஒவ்வொன்றாகப் பறை சாற்றுகிறார் கவிஞர். வேத கோஷமும், ஞானிகளை நன்மக்கள் நாடி பயனடைதலும் ஒரு புறம். மறுபுறம், ஸனாதன தர்மவழிகளைக் காப்பாற்றுவதில் தீவிரமாக உள்ளனர் எல்லாவகை மக்களும். பரம்பரையாக வந்துள்ள தர்மத்தை விருத்தி செய்யக் கூடிய மார்க்கங்கள் வெவ்வேறு பிரதேசத்தில் அமைந்துள்ளன. அவைகளையெல்லாம் நசியாமல் பாதுகாக்கிறார்கள். வேறொருபுறம், ஏழ்மை தாண்டவமாடிக் கொண்டிருந்த பாரத தேசத்தில் லக்ஷ்மி தேவியின் அருளால் எங்கும் எக்காலமும் வளமை செழித்தோங்குகிறது.

சூரிய புத்திரனான வைவஸ்தவ மனுவின் வழித்தோன்றல்களாக மனிதர்கள் உதித்தனர் என்று ஸனாதன தர்ம சாஸ்த்ரங்கள் கூறுவதையொட்டி, கவிஞர் சூரிய குலத்தோன்றல்கள் என்று பாரதீயர்களை வர்ணிக்கிறார். சூரியன் எவ்வாறு தன் கடமையை சரிவர எக்காலத்திலும் செய்கிறானோ, எவ்வாறு தன் கதிர்களின் மூலம் ஸம்ருத்தியை வழங்குவதில் எந்த பாரபட்சமுமின்றி எல்லோருக்கும் சரிசமமாக அருளுகிறானோ, அதுபோல பாரதீயர்களும் கடமைகளைச் சரிவரச் செய்வதில் பின்வாங்கமாட்டார்கள். பாரபட்சமின்றி தர்மமார்க்கங்களைக் கடைப்பிப்பார்கள் என்று கவிஞர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

லக்ஷ்மி தேவி சஞ்சலமானவள் என்று சாஸ்திரம் கூறும். ஒரிடத்தில் செல்வம் வெகுநாள் தங்காமல் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும் தன்மையுடையது. ஆனால் இப்போது பரந்து பிரிந்திருக்கும் பாரத பூமியின் எல்லா பாகங்களிலும் லக்ஷ்மி தேவியின் அருள் பரிபூர்ணமாக வாரிவழங்கப்படுகிறது. தன் ஸ்வபாவமான சஞ்சலத் தன்மையைக் கூட லக்ஷ்மிதேவி கைவிட்டது பாரதீயர்களின் அழுத்தமான தார்மீகப் பண்புகளாலே.

पुरातनीं मातरमागमानां आगच्छताञ्च स्तुवताञ्च भूमिम् ।
प्राच्यां प्रतीच्यां जगतोऽखिलस्य कोलाहलं वेगरवान् श्रृणोमि ॥ 95

(ப-உ) आगमानां मातरं = வேத சாஸ்திரங்களுக்குத் தாயான, पुरातनीं = புராதனமான, भूमिं = (இந்த) பூமிக்கு, आगच्छतां च = வருகின்றவர்களும், स्तुवतां च =ஸ்தோத்திரம் செய்கின்றவர்களுமான, अखिलस्य जगतः = உலகம் முழுவதும், कोलाहलं = கோலாகலசப்தம், वेगरवान् = வேகமான சப்தங்களை, प्राच्यां = கிழக்கு திசையிலும், प्रतीच्यां = மேற்கு திசையிலும், श्रृणोमि= கேட்கிறேன்.

(பொ-உ) வேத சாஸ்திரங்களுக்குத் தாயான புராதனமான இந்த (பாரத) பூமியை நோக்கி வருகின்றவர்களும், துதி பாடுகிறவர்களும் உலகம் முழுவதிலிருந்து செய்யும் கோலாகல வேகம் மிகுந்த சப்தங்களை கிழக்கு திசையிலும் மேற்க்கு திசையிலும் (நான்) கேட்கிறேன்.

(வி-உ) பாரத தேசத்தின் ஆத்மீகப் பொக்கிஷத்தை ஆங்கிலேய ஆதிக்கம் சரிவர பாதுகாக்காததால் அதன் பெருமையை உலகம் முழுவதுமாக உணர முடியவில்லை. சுவமி விவேகானந்தர் போன்ற மகான்கள் மேலை நாடுகளில் சென்று உணர்த்திய போதும் கூட, பாரதத்தின் ஆத்மீக சொத்து பரவலாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. இப்போது பாரதம் சுதந்திரமாகிவிட்ட நிலையில், இதனை உலகின் மூல முடுக்குகளில் உள்ள எல்லோரும் அறிந்துகொண்டு, உத்ஸாஹத்துடன் பாரதத்திற்கு நேரில் வந்து அதனைப் பார்த்து அனுபவிக்க பேராவல் கொண்டுள்ளனர். கீழ் திசையிலிருந்தும், மேல்திசையிலிருந்தும் பாரதத்தை நோக்கிப் படையெடுக்கும் இந்த பக்தர்கள் கூட்டம் பேரிரைச்சலை உண்டுபண்ணிக் கொண்டு முன்னேறி வருவதாக் கவிஞர் சித்திரிக்கிறார்.

சுதந்திரம் வருவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே இவ்வாறு கனவு கண்டிருக்கிறார் மகர்ஷி அரவிந்தர். பிற்காலத்தில் அவரே மாபெரும் யோகியாக உலகெங்கும் பெரிய பெயர் பெற்று, அவரை

தரிசிக்கவும், அவரிடமிருந்து யோக நெறிகளைக் கற்றுக் கொள்ளவும் உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்கள் குழாம் வந்தவண்ணம் இருந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இப்போதும் அரவிந்தர் ஆச்ரமம் மாபெரும் காந்த சக்தியாக உலக மக்களை தன் பக்கம் இழுத்து நல்வழிப்படுத்துவதை நாம் காண்கிறோம்.

सद्धर्मगर्भेति महाव्रतेपि स्तुवन्ति सौम्याञ्च भयङ्करीञ्च ।
देव्याः प्रियां भूमिमनादिशक्त्याः तीर्थस्वरूपेण च पूजयन्ति ॥ 96

(ப-உ) सौम्यां च = இனியவளையும், भयङ्करीं च = பயங்கரமானவளையும், सद्धर्मगर्भा इति =ஸத்திய தர்மத்தின் மூலம் என்றும், महाव्रता इति =பெரும் விரதம் பூண்டவள் என்றும், स्तुवन्ति = துதிக்கிறார்கள், अनादिशक्या: = देव्याः = தேவியின், प्रियां = பிரியமான, भूमिं च = (இந்த) பூமியையும், तीर्थस्वरूपेण = தீர்த்த ஸ்வரூபமாகவே, पूजयन्ति = பூஜிக்கிறார்கள்.

(பொ-உ) (வெளி நாடுகளிலிருந்து வரும் அவர்கள்) தேவியை இனியவளாக, பயங்கரமானவளாக, ஸத்திய தர்மத்தின் மூலம் என்றும், பெரும் விரதம் பூண்டவள் என்றும் துதிக்கிறார்கள்.

ஆதியென்று ஒன்றுமில்லாத சக்தியான தேவிக்கு பிரியமான இந்த பூமியையும் தீர்த்த ஸ்வரூபமகவே பூஜிக்கிறார்கள்.

(வி-உ) உலகத்தின் பல்வேறு மூலைகளிலிருந்தும் பாரதத்திற்கு வரும் மக்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்கிறார்கள். முன்னமே சொன்னபடி, தேவி ஒரே சமயத்தில் இனியவளாகவும், பயங்கரமனவளாகவும் இருக்கும் அதிசயத்தைப் பார்க்கிறார்கள். சாதுக்களிடம் இனியவளாகவும், துஷ்டர்களிடத்தில் பயங்கரமானவளாகவும் இருக்கும் காரணத்தைப் புரிந்து கொண்டு, இதன் அடிப்படை ஸத்தியத்திடமும், தர்மத்திடமும் தேவி கொண்டுள்ள வலுவான ஒட்டுதல்; ஸத்திய, தர்மங்களைக் காப்பாற்றுவதாக மாபெரும் விரதம் தேவி மேற்கொணடுள்ளாள் என்பதை யெல்லாம் நேரிடையாக உணர்கிறார்கள். தேவி ஆதி அந்தம் இல்லாதவள். ஸனாதன தர்மமும் ஆதி அந்தம் இல்லாதது. ஸனாதன தர்மத்தைப் பின்பற்றி தேவியின் பூர்ண க்ருபைக்குப் பாத்திரர்களாக ஆன பாரத தேசத்தவர் வசிக்கும் பாரதபூமி தீர்த்தமில்லாமல் வேறு என்ன? அதனால் பூஜைக்குரியதாக ஆயிற்று.

தீர்த்தம் என்பது புனித ஸ்தலம். அங்கு சென்று பாவங்களைத் தொலைத்து, புண்ணியம் ஈட்டி தூயவர்களாக ஆகிறார்ள். தீர்த்தத்தின் உயர்ந்த கட்டத்தில், தீர்த்தம் என்பது கடக்கமுடியாத ஸம்ஸார சாகரத்தைத் தாண்டுவதற்கு உபாயமாக உள்ள படகினைக்குறிக்கும். பாரதபூமி எல்லா வகையிலும் தீர்த்தமே.

शिवस्य काश्यां निवसन्ति ये के स्पर्शेन ते तस्य भवन्ति मुक्ताः ।
देव्यास्तु पुण्य़ेन पदार्पणेन सर्वार्यभूमिः जगतोऽपि काशी ॥ 97

(ப-உ) ये के = எவர்கள், शिवस्य काश्यां= சிவ பூமியான காசியில், निवसन्ति = வசிக்கிறார்கள்ளோ, ते = அவர்கள், तस्य स्पर्शेन = அந்த பூமியின் ஸ்பரிசத்தினாலேயே, मुक्ताः भवन्ति = முக்தர்களாக ஆகிறார்கள், देव्याः = தேவியின், पुण्येन = புண்யமான, पदार्पणेन = பாத அடியினால், सर्वा आर्यभूमिः तु = பாரத தேசம் முழுவதுமே, जगतः अपि = உலகிற்ககு, काशी = காசியாக (ஆயிற்று).

(பொ-உ) எவர்கள் சிவனுடைய விசேஷ பூமியான காசியில் வாசம் செய்கிறார்களோ, அவர்கள் அந்த பூமியின் ஸ்பரிசத்தினாலேயே முக்தர்களாக ஆகிறார்கள். தேவியின் புண்ணியமான பாத அடிகளினால், பாரத தேசம் முழுவதுமே உலகிற்ககு காசியாக ஆயிற்று.

(வி-உ) விச்வேச்வரனை வழிபட்டு கங்கையில் ஸ்னானம் செய்து அதிசயமான புண்ணியம் சம்பாதித்து முக்தியையே அடைகிறார்கள்

காசி வாசிகள். 'काश्यां तु मरणान्मुक्तिः' "காசியில் மரித்தால் முக்தி உண்டு" என்று கூறும் சாஸ்திரம். தேவியின் க்ருபையினாலே பாரத தேசம் முழுவதுமே தீர்த்த ரூபமாக மாறிவிட்டதால் காசிக்கு சமமான உயர்வை அடைந்து விட்டது.

प्रीतिर्दया धैर्यं अदम्यशौर्यं श्रद्धा तितिक्षा विविधाश्व विद्याः ।
अनन्तरूपे त्वमसि प्रसीद चिरं वसार्ये हृदि भारतानाम् ॥ 98

(ப-உ) अनन्तरूपे = எல்லையில்லா உருவங்கள் கொண்டவளே, त्वं = நீ प्रीतिः=ப்ரீதி, दया = தயை, धैर्यं = தைர்யம், अदम्यशौर्यं = அடக்கவொண்ணா வீர்யம், श्रद्धा = சிரத்தை, तितिक्षा = பொறுமை, विविधाश्व विद्याः = பலவிதமான வித்தைகள் (இவை எல்லாமாக), असि = இருக்கிறாய். आर्ये = பெருமை மிக்கவளே, प्रसीद = கருணை செய், भारतानां = பாரதீயர்களின், हृदि =இதயத்தில், चिरं =வெகுகாலம், वस = வசிப்பாயாக.

(பொ-உ) எல்லையில்லா உருவங்கள் கொண்டவளே ! நீ ப்ரீதி, தயை, தைரியம், அடக்கவொண்ணாவீர்யம், சிரத்தை, பொறுமை, பலவித வித்தைகள் இந்த வடிவங்களாக இருக்கிறாய். பெருமை

மிக்கவளே ! கருணை செய். பாரதீயர்களின் இதயத்தில் வெகுகாலம் வசிப்பாயாக.

(வி-உ) எந்தெந்த ஸத்குணங்கள் மனிதனுக்கு அவசியம் இருக்க வேண்டுமோ, அவ்வற்றைப் பட்டியிட்டு, அந்த குணங்களெல்லாம் தேவியிடம் பூர்ணமாக் இருக்கின்றன என்பதால் தேவியை உபாஸித்து இதயத்தில் ஸத்குணங்கள் நிரம்பப் பெற்று, அந்த குணவிசேஷத்தால் தூய்மை பெற்ற இதயத்தில் தேவி பிரகாசிப்பதை உணர்ந்து, பார்த்து, அனுபவித்து, சரணாகதி செய்யவேண்டும் என்பதைக் காட்டுகிறார் யோகி அரவிந்தர்.

பிரீதி என்பது எல்லா உயிர்களிடத்தில் எந்தவித காரணமும் இன்றி, எதிர்பார்ப்பும் இன்றி காட்டவேண்டிய அன்பு. அகிம்ஸை இதில் அடக்கம். அன்பிலிருந்து அருள் சுரக்கும். தயை என்பது எளியவர்களிடம் காட்டவேண்டிய கருணை. தைரியம் என்பது தர்ம வழியில் நிலைபெற்று நிற்கும்போது எதிர்ப்படும் இன்னல்களை எதிர்த்து முறியடிக்கும் மனத்திண்மை. அடக்க வொண்ணா வீர்யம் என்பது தைரியத்திலிருந்து உதிக்கும் சக்தியும், எதிரிகளை விரட்டியடித்து வெற்றி கொள்ளவைக்கும் செயற்கூறும் ஆகும். சிரத்தை என்பது வேத சாஸ்திரங்களிலும், குருவின் வாக்கியத்திலும், இருக்க வேண்டிய அசைக்க முடியாத நம்பிக்கை. அவற்றைப் பின்பற்றும்போது கஷ்டங்கள் நேரும். அக்கஷ்டங்களை எதிர்ப்பட மன உறுதி அவசியம். அந்த மன உறுதி, இந்த ச்ரத்தை அழுத்தமாக ஆழமாக வேரூன்றியிருந்தால்தான் வரும், ‘திதிக்ஷா’ என்பது பலவித

கஷ்டங்கள் வரும்போது, இவை நம்முடைய பிராரப்தகர்மத்தின் விளைவேயின்றி வேறல்ல என்கிற உறுதியுடன், பொறுத்துக்கொள்ளும் மனப்பாங்கு ஆகும். பலவித வித்தைகள் என்பது நாம் இப்போது விரிவாகவே பார்க்கும் விஞ்ஞானத்தின் பல்வேறு கூறுகளும், ஆத்மீகத்தின் பல்வேறு நெறிமுறைகளும், வாழ்க்கை ரகசியங்களும் ஆகும்.

துர்கா ஸப்தசதியில், சும்பநிசும்ப வதத்தின் பொருட்டு தேவர்கள் தேவியை ஸ்தோத்திரம் செய்யும்போது, எல்லா ஸத்குணங்களையும் சொல்லி, அந்த குணங்கள் எல்லாம் அம்பிகையிடமிருந்துதான் கிடைக்கின்றன என்கிறார்கள். மங்களம், மாயை, சக்தி, வேட்கை பொறுமை, ஜாதி, வெட்கம், சாந்தி, சிரத்தை, காந்தி, செல்வம், ஜீவனோபாயம், ஞாபகசக்தி, தயை, திருப்தி, தாயார், குழப்பம், வியாபகம், ஞான சக்தி இவைகளெல்லாம் அம்பிகையின் ரூபங்களே என்று துதி செய்கிறார்கள்.

सिन्धून् हिमाद्रिञ्च सुसौम्यभासा प्रकाशयन्ती सुदृढप्रतिष्ठा ।
तिष्ठ प्रसन्ना चिरमार्यभूमौ महाप्रतापे जगतो हिताय ॥ 99

(ப-உ) महाप्रतापे = பெரும் தேஜஸும், வீரமும் பொருந்தியவளே, सिन्धून् = சமுத்திரங்களையும், हिमाद्रिं च = இமயமலையையும், सुसौम्यभासा = அழகான குளிர்ந்த

பிரகாசத்தினால், प्रकाशयन्ती = ஒளியைப் பெருக்கிக்கொண்டு, सुदृढप्रतिष्ठा = நன்கு ஸ்திரமக இருந்துகொண்டு, प्रसन्ना = சந்தோஷத்துடன், जगतः हिताय = உலக நன்மைக்காக, आर्यभूमौ = ஆரிய பாரத பூமியில், चिरं तिष्ठ = வெகுகாலம் இருப்பாயாக.

(பொ-உ) பெரும் தேஜஸும், வீரமும் பொருந்தியவளே, சமுத்திரங்களையும், இமயமலையயும் தன் குளிர் ஒளியினால் பிரகாசப்பத்திக்கொண்டு, நன்கு ஸ்திரமாக இருந்துகொண்டு, சந்தோஷத்துடன் உலக நன்மைக்காக ஆரிய பாரத பூமியில் வெகு காலம் இருப்பாயாக.

(வி-உ) கவிதையின் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ள கவிஞர், தேவியிடம் மங்களாசாஸனம் செய்கிறார். ஆழ்சமுத்திரங்களும், நெடிதுயர்ந்த இமயமலைச்சிகரங்களும் தேவியின் வைபவத்தை சுலபமாக உணரவைக்கக்கூடியவை. தேவியின் பரந்த ஆழமான, அதே சமயம் உயர்ந்திருக்கும் ஞான சக்தியை மனிதனின் குறுகிய அறிவைக்கொண்டு அளக்கவோ அறியவோ முடியாது. தேவியின் சந்தோஷம் என்பது க்ருபையாக வடிவெடுக்கிறது. தேவியின் ஸாந்நித்தியம் பாரத பூமியில் நன்கு ஸ்திரமாக பிரகாசமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கும் கவிஞர், அது பாரத தேசத்தவர்களின் நன்மைக்காக மட்டுமில்லை, உலகம் முழுவதும் நனமையடைதற்காகவே என்பதையும் காட்டுகிறார். ஏற்கெனவே

உலகெங்கிருந்தும் பாரதம் வந்து இங்குள்ள ஆத்மீக பாரம்பரியத்தையும், தேவியின் சித்விலாஸத்தையும் அனுபவித்து தாங்களும் அதைத் தங்கள் தேசங்களில் பரப்ப உத்ஸாகமாக இருப்பதை கவிஞர் கண்பிக்கிறார். அதனால், பாரத பூமியை உலகின் ஆத்மீக மையமாகக்கொண்டு, தேவியின் க்ருபை பாரத பூமியில் வெகுவாகப் பிரகாசித்து வருகையில், அதன் கதிர்கள் நாலாபக்கமும் பரவி இருளை அகற்றி உலகம் முழுவதையும் தார்மீகப் பாதையில் வழிகாட்டி அழைத்துச் செல்கின்றன. இந்த நிலை வெகு காலம் தொடர்ந்து நடக்க வேண்டும் என்பது கவிஞரின் அவா, பிரார்த்தனை.